# உரிமைத் தமிழ்த் தேசம்

தமிழ்த் தேசம்

தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத் திங்களேடு

உரிமை: 4 தேசம்: 1 திருவள்ளுவர்ஆண்டு 2050 ஆவணி / செப்டம்பர் 2019 ▪ ஆசிரியர்: தோழர்.தியாகு ▪ பொறுப்பாசிரியர்: தோழர்.சமந்தா


தோழர் தியாகுவின் அறிவுக் குரல் கேட்க https://www.youtube.com/watch?v=NaMbPqrXqPo&feature=youtu.be

## தேசத்தின் குரல்:

அணுவாய்தப் போரின் கருநிழல் படர விடோம்!



"கெட்ட போரிடும் உலகினை வேரொடு சாய்ப்போம்!"

காசுமீர் சிக்கலையொட்டி இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் போர் முரசங்கள் ஒலிக்கத் தொடங்கியுள்ளன. இரண்டும் அணுவாய்த வல்லமை கொண்ட அரசுகள் என்பதை மனத்திற்கொண்டால் போர் என்ற வாய்ப்பை எண்ணிப்

## உள்ளடக்கம்


1. தேசத்தின் குரல் -1
2. மூலதனம் மூலமுதல் ஆனது ஏன்? -5
3. மார்க்சியம் அனா ஆனா – 8
4. களம் காலம் - 9
5. பெருங்குழுமப் பேராசைகளுக்குத் தீனிபோடும்அரசாணைகள் -13
6. காசுமீரியமும் தமிழியமும் புதிய காசுமீரமும் புதியதமிழகமும் -17
7. இந்திய அரசமைப்புதேசிய இனங்களின் அடிமை முறியே! -27
8. அணு மின்சாரப் போர்வையில் அணு ஆயுதமா? - 35
6. நாடற்றவர்களாக முகாம்களில் உள்ள மலையகத் தமிழர்களுக்கு இந்தியக் குடியுரிமை வேண்டும்! - 49
9. தமிழகமும் தமிழீழமும் கூட்டுச் சாலையில் தமிழ்த் தேசங்கள் - 54
10. தோழர் பெ. மணியரசனுக்கு மறுமொழி இது வரை சுருக்கமாக–60
11. பூகம்பமாக ஹைட்ரோகார்பன் திட்டம் -62
12 நம்மவள் -70
13. நான் ஏன் தமிழ்த் தேசியவிடுதலை இயக்கத்தில் சேர்ந்தேன்? -78


பதிவு எண் :R.Dis. No. 1964/2014

பார்க்கவே பதைப்பாக உள்ளது.

1998இல் வாஜ்பாய் தலைமையமைச்சராக இருக்க அணுவாய்த ஆய்வு நடத்தப்பட்டதை ஒட்டி அணுவாய்தத்தை 'முதலில் பயன்படுத்த மாட்டோம்" என்ற கொள்கையை இந்திய அரசு அறிவித்தது. பாகிஸ்தானும் இதே போல் உறுதியளித்தது. அதாவது பதிலடியாக மட்டும் அணுவாய்தத்தைப் பயன்படுத்த இரு நாடுகளும் அணியமாய் இருக்கும். இதுவே ஆபத்துதான். எது முதலடி எது பதிலடி என்பதையே கேள்விக்குரியதாக்க இந்த அரசுகளால் முடியும். இந்த உறுதிமொழியை எப்போது வேண்டுமானாலும் கைவிடுவதற்குக் காரணம் கண்டுபிடிப்பதும் கம்ப சூத்திரமன்று. முதலில் பயன்படுத்துவதில்லை என்ற உறுதிமொழி அணுவாய்த ஆய்வையும் பெருக்கத்தையும் கட்டுப்படுத்தி விடாது.

ஆய்தப்பெருக்கம் அதற்கேயுரிய அரசியலுக்கு வழிகோலும் என்பதையும் மறந்து விடக் கூடாது. அமெரிக்காவில் படைத்துறை-தொழில்துறை கூட்டிணைவும் (military-industrial complex) சோவியத்து நாட்டில் படைத்துறை அதிகாரத்துறை கூட்டிணைவும் என்ன விளைவுகளை ஏற்படுத்தின எனக் கண்டுள்ளோம். அரசியலுக்காக ஆய்தம் என்ற ஏரணத்தின் இடத்தை ஆய்தத்துக்காக அரசியல் என்ற ஏரணம் பிடித்துக் கொள்ளும். ஆய்தப் பெருக்கமே இப்படி என்றால் அணுவாய்தப் பெருக்கம் என்ன வகையான விளைவுகளை ஏற்படுத்தும்!



மோதி அமைச்சரவையில் பாதுகாப்புத் துறை அமைச்சராக இருந்த மனோகர் பாரிக்கர் 2016ஆம் ஆண்டே "முதலில் பயன்படுத்த மாட்டோம் என்ற கொள்கை தேவையற்றது" என்று சொல்லத் தொடங்கி விட்டார். அண்மையில் இப்போதைய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்கும் முதலில் பயன்படுத்த மாட்டோம் என்பது தேவையற்ற கொள்கை என்று கூறியுள்ளார். அதாவது பாகிஸ்தான் மீது அணுகுண்டு வீசத் தயங்க மாட்டோம் என்று மோதி அரசு எச்சரிப்பதாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்தியா இப்படி அச்சுறுத்தினால் பாகிஸ்தான் மட்டும் வாளாவிருக்குமா? அங்கே இம்ரான் கான் "இரு நாடுகளிடமும் அணுகுண்டு இருப்பதால் போர் என்ற வாய்ப்புக்கே இடமளிக்கக்

கூடாது” என்றுதான் சொல்லிக் கொண்டிருந்தார். பிறகு, போருக்கு வந்தால் சந்திக்க அணியமாய் இருப்பதாகச் சொன்னார். ஆனால் அணுவாய்தங்களை முதலில் பயன்படுத்த மாட்டோம் என்றார். இப்போது அப்படியெல்லாம் உறுதியளிப்பதற்கில்லை என்று அந்த அரசு சொல்லி விட்டது. சின்னச் சின்ன அளவில் துல்லியமாகப் பயன்படுத்தும் படியான நுண்ணளவு அணுவாய்தங்கள் பாகிஸ்தானிடம் இருப்பதாக அந்நாட்டு அமைச்சர் ஒருவர் கூறியிருக்கிறார்.

அணுவாய்தங்கள் பற்றியோ அவற்றின் பயன்பாடு, விளைவுகள் பற்றியோ இந்திய நாடாளுமன்றத்திலோ பாகிஸ்தான் நாடாளுமன்றத்திலோ இரு நாட்டுப் பொதுவெளியிலோ எவ்வித விவாதமும் நடைபெற்றதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. நாடாளுமன்றத்தில் மட்டுமன்று. அமைச்சரவையில் கூட இது குறித்து விவாதிப்பதில்லை. இருவர், மூவர், நால்வர், ஐவர் கொண்ட சிறு குழு எல்லா முடிவுகளையும் எடுக்கிறது. சிலநேரம் தலைமையமைச்சரான ஒரே ஒருவர் முடிவெடுத்து விடும் ஆபத்தும் உள்ளது. குடியாட்சியத்தின் இன்றியமையாக் கூறாகிய வெளிப்படைத்தன்மை மருந்துக்கும் இல்லை. விவாதமும் இல்லை, வெளிப்படைத் தன்மையும் இல்லை! எல்லாமே பரம இரகசியம்! பிரதம இரகசியம்! உண்மையான குடியாட்சியம் இல்லாத போது அமைதியின் தலைக்கு மேல் கத்தி தொங்கிக் கொண்டுதான் இருக்கும். அணுகுண்டே தொங்கிக் கொண்டிருக்கும். இது இந்தியாவுக்கும் பொருந்தும், பாகிஸ்தானுக்கும் பொருந்தும்!

குடியாட்சியக் கொள்கைகள் அடிப்படையிலும் பன்னாட்டுச் சட்டங்கள் அடிப்படையிலும் எளிதில் தீர்வுகாணக் கூடிய காசுமீர் சிக்கல் குறித்துப் போர்வெறிக் கூச்சல் கிளம்புவதுதான் கொடுமை கலந்த வேடிக்கை. காசுமீர் தேசத்தின் தன்தீர்வுரிமை, போர் தவிர்த்த அமைதி, படைவிலக்கம், பொதுவாக்கெடுப்பு ஆகிய வழிகளை இந்தியா, பாகிஸ்தான், காசுமீர் ஆகிய முத்தரப்புகளும் அறிந்தேற்றால் போதும். சிக்கலைத் தீர்க்கும் வழி பிறந்து விடும். காசுமீர் தேசம் துண்டாடப்பட்டு இந்தியாவும் பாகிஸ்தானும் ஆளுக்கொரு பங்கைப் பிடித்து வைத்துள்ளன. இரு படைகளும் வெளியேறினாலே போதும், வாகா எல்லை திறந்து காசுமீர் தேசம் ஒன்றுகலந்து விடும் -- பெர்லின் சுவர் உடைந்து ஜெர்மன் தேசம் ஒன்றானது போல்!

காசுமீர் மக்களின் தேசிய ஓர்மையைச் சிதைத்துள்ள இந்தியாவுக்கோ பாகிஸ்தானுக்கோ தத்தமது நாடுகளின் தேசிய ஒருமைப்பாடு பற்றிப் பேச அருகதை இல்லை.

பதிவு எண் :R.Dis. No. 1964/2014

எழுபதாண்டுகளாகியும் தீராத நோயாகக் காசுமீர் சிக்கல் நீடிப்பதற்கு அடிப்படைக் காரணம் அரசுகள் குடியாட்சியத்தையோ மனிதவுரிமைகளையோ கிஞ்சிற்றும் மதிப்பதில்லை என்பதே. மனித உரிமைகளையும் மதிப்பதில்லை. மனித உயிர்களையும் மதிப்பதில்லை. போரின் அழிவே பெரிதென்றால், பெருந்திரள் பேரழிவுக் கருவிகளான அணுவாய்தங்களால் ஏற்படக் கூடிய விளைவுகளை எண்ணிப் பார்க்கவும் முடியாது.

இந்தியாவோ பாகிஸ்தானோ அணுவாய்தத்தைப் பயன்படுத்திப் போரில் வெற்றி காண முடியாது என்பதால் இது வெறும் மிரட்டல்தான் என்ற கருத்தும் உண்டு. மேலும் இந்தியாவோ பாகிஸ்தானோ சீனம், அமெரிக்கா, உருசியா போன்ற நாடுகளின் அக்கறைகளைக் கணக்கில் கொள்ள வேண்டி வரும், ஓர் அணுவாய்தப் போர் மூள்வதாலும் விரிவடைவதாலும் உலகளவில் ஏற்படக்கூடிய விளைவுகளை முற்கணிப்பு செய்ய முடியாத நிலையில் எந்த நாடும் அப்படியொரு பிரளயத்தைத் தவிர்க்கவே கருதக் கூடும் என்ற எண்ணமும் உண்டு. இவ்வாறான கருத்துகள், எண்ணங்களை மதிக்கிறோம். எப்படியாவது போர், அதிலும் குறிப்பாக அணுவாய்தப் போர் தவிர்க்கப்பட்டால் மிக்க மகிழ்ச்சி! ஆனால் -

ஆனால் நமக்குள்ள ஓரச்சம்! ஒரு போர் மூண்டு, அதில் ஒரு தரப்பு தோற்கும் நிலை ஏற்பட்டால், அந்தத் தோல்வியை ஒப்புக் கொள்ள முடியாமல் அணுப் பொத்தானை அழுத்தும் சபலம் வராது என்பதற்கு யார் உறுதி கொடுப்பது? ஏவி விட்ட அணுக்கொலையாட்டத்தைக் கட்டுப்படுத்துவது யார்? ஒரு கத்தி வைத்திருப்பவன் கூட ஏதோ ஒரு கட்டத்தில் தன்னையும் மீறி அதைக் கொலைக் கருவியாகப் பயன்படுத்தும் ஆபத்து உள்ள போது வல்லரசாகக் காணப்படுவதற்கென்றே அணுவாய்தம் தரித்துள்ள அரசு எந்நிலையிலும் அதைப் பயன்படுத்தாது என்று எப்படி நம்ப முடியும்?

போர் கூடாது! அணுவாய்தப் போர் கூடவே கூடாது! இந்த முழக்கத்தை மக்கள் முழக்கமாக்க வேண்டும்! மீண்டும் ஒரு ஹிரோசிமா நாகசாகியை இந்த உலகம் தாங்காது! அணுவாய்தப் போரில் நாட்டம் கொண்ட எவரும் மனிதகுலப் பகைவராகக் கருதப்பட்டுப் பொதுவாழ்விலிருந்தே அகற்றப்படும் நிலை ஏற்படச் செய்ய வேண்டும்!அணுவாய்தங்கள் அனைத்தும் பையப்பைய அழிக்கப்படும் நிலை நோக்கி, அணுவாய்தங்கள் செய்யும் வாய்ப்புகள்

*(Continued on page 5)*

அனைத்தும் ஒழிக்கப்படும் நிலை நோக்கி இந்த உலகம் முன்னேற வேண்டும். அது போர்களும் போர்க்கருவிகளும் இல்லாத புத்துலகம் படைக்கும் திசையில் முன்னேறுவதற்கான முதற்படியாக அமையும்.

## மூலதனம் மூலமுதல் ஆனது ஏன்?

கார்ல் மார்க்ஸ் தமது வாழ்க்கைப் பெரும்படைப்பைத் தம் தாய்மொழி ஆகிய 'டைச்' என்கிற ஜெர்மன் மொழியில் எழுதி Das Kapital என்று அதற்குப் பெயரிட்டார். இதையே ஆங்கிலத்தில் CAPITAL என்று மொழிபெயர்த்து வெளியிட்டனர். இதன் தமிழாக்கத்துக்கு மூலதனம் என்று பெயரிடப்பட்டது. நான் மட்டுமல்ல, தோழர் ஜமதக்னியும் இவ்வாறே பெயரிட்டார். முழுமையாக இல்லா விட்டாலும் நூலின் சில பகுதிகளை மட்டும் தமிழாக்கம் செய்தவர்களும் மூலதனம் என்ற சொல்லையே பயன்படுத்தினர். ரா. கிருஷ்ணையா, ராமநாதன் ஆகியோரைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். தமிழில் வந்துள்ள மார்க்சியப் படைப்புகள் அனைத்திலும் மூலதனம் என்றுதான் உள்ளது. இதற்கு விலக்காக, அன்றைக்கே CAPITAL நூலைத் தமிழாக்கம் செய்து தொடராக வெளியிடத் தொடங்கிய தோழர் ஜோதிப்பிரகாசம் மட்டும்தான் மூலதனத்துக்கு மாற்றாக முதல் என்ற சொல்லைப் பயன்படுத்தினார். இதற்கான பெருமை அவருக்குரியது.


கார்ல் மார்க்சின் பெரும்படைப்பு

**மூலமுதல்**



*இயல் ஒன்று (தூய தமிழாக்கம்)*
*முன்வெளியீட்டுத் திட்டம்*
*முன்வெளியீட்டுத் திட்டத்தில் சேர படி ஒன்றுக்கு 600 உருவாய் செலுத்துங்கள்!*
*நன்கொடையும் தரலாம்!*
*நன்கொடை ஆனாலும் முன்வெளியீட்டுக் கட்டணம் ஆனாலும், உங்கள் பங்களிப்பைப் பின்வரும் வைப்பகக் கணக்கில் செலுத்தி விட்டுத் தெரியப்படுத்துங்கள்.*

K. THIAGARAJAN,
SB A/C No. 20654748511,
ALLAHABAD BANK / AMBATTUR BRANCH,
CHENNAI - 53.
IFSC: ALLA0211909

சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஆங்கிலம்-தமிழ்ச் சொற்களஞ்சியம் capital என்பதற்குச் சமனாக முதல், மூலதனம் என்ற இரு சொற்களையும் தருகிறது. அடுத்து எழுந்த கேள்வி: மூலதனம் தமிழாகுமா? மூலம்+தனம் = மூலதனம். மூலம் தமிழ்தான். ஆனால் தனம் தமிழ்தானா? தமிழ்தான் என்று சொல்லக் கூடிய சில தமிழறிஞர்கள் உண்டு. தனம் என்றால் தனது செல்வம் என்று இவர்கள் விளக்கமளிக்கின்றனர். ஆனால் தனம் சமற்கிருதச் சொல் என்ற வலுவான கருத்து உள்ளது. சொல்லாய்வறிஞர் அருளியாரின் அயற்சொல் அகராதி தனம் சம்ற்கிருதம் எனச் சுட்டி, செல்வம் முதலான பொருளுரைக்கிறது. மூலதனம் என்ற சொல்லில் மூலம் தமிழென்றும் தனம் சமற்கிருதம் என்றும் பிரித்துக் காட்டுகிறது. மூலதனம் இடையில் தமிழுக்கு வந்திருக்கலாம், ஆனால் முதல்தான் தூய தமிழ்ச்சொல் என்ற அருளியாரின் கருத்தை நான் ஏற்றுக் கொல்கிறேன்.

திருக்குறளில் "ஆக்கம் கருதி முதல் இழக்கும்.செய்வினை" (குறள்463) பற்றிய குறிப்பு உள்ளது. செவ்வியல் தமிழ் இலக்கியம் எதிலும் தனமோ மூலதனமோ இல்லை. இருந்தாலும் தூய தமிழ் நோக்கில் முதல் என்ற சொல்லே சிறப்பு என்ற முடிவுக்கு வந்தேன். மூலதனம் இவ்வாறு என்னிடம் முதல் ஆயிற்று.

ஆங்கிலத்தில் capital என்பதை மூலதனம் என்று சொன்னாலும் capitalist என்பவரை மூலதனவாதி அல்லது மூலதன அதிபர் என்று சொல்வதில்லை. முதலாளர் அல்லது முதலாளியர் என்றுதான் சொல்கிறோம். கலைச் சொல்லாக்கத்தில் இவ்வாறான முரண்பாடுகளுக்கு இடமில்லை. Capitalist முதலாளர் என்றால் capital முதலாகத்தான் இருக்க முடியும்.

ஆனால் முதல் என்று மட்டும் சொல்வதில் வேறு பல சிக்கல்கள் தலை தூக்கின. ஒன்றாவது என்ற வழக்கமான பொருளிலும் முதல் வருவதைத் தவிர்க்க முடியாது. ஒரே ஒரு தொடர், ஒரெ ஒரு சொல்லியம் (வாக்கியம்), ஒரெ ஒரு கட்டுரை என்றால் சமாளிக்கலாம். இயல் ஒன்று மட்டுமே ஆயிரம் பக்கம் வரக்கூடிய ஒரு நூலில் முதல் என்பதற்கு மேல் ஒரு சொல் தேவை என்று எனக்குத் தோன்றிற்று. முதலீடு, இடுமுதல் போன்ற மாற்றுச் சொற்கள் சரிப்படவில்லை. ஏனென்றால் மார்க்ஸ் capital என்பதற்குத் தரும் விளக்கம் அடிப்படையிலேயே புதியதொன்று. அது வெறும் முதலீடு, முன்னீடு அல்லது செலவீடு அன்று. இறுதி நோக்கில் capital என்பதொரு குமுக உறவு என்பதை அவர் மெய்ப்பிப்பார். இது வழக்கமான capital அல்ல என்பதால்தான் ஜெர்மன் மொழியில் Das Kapital

என்றும், பிரெஞ்சு மொழியில் Le Capital என்றும் சொல்லப்பட்டது. ஜெர்மன் மொழியில் Das, பிரெஞ்சு மொழியில் Le என்பற்றுக்கு நிகரான ஆங்கிலச் சொல் The என்பது. ஆங்கிலத்தில் a, an, the என்பவை articles எனப்படும். ஆக, THE CAPITAL என்பதே சரியான பெயர். ஆங்கிலப் பெயரில் the தொக்குநிற்பதாகக் கொள்ள வேண்டும். இங்கே das, le அல்லது the செய்யும் வேலை பலவற்றில் ஒன்றல்ல, தன் வகையில் ஒன்றே ஒன்று என்பதைக் குறிப்பதாகும். வெறும் முதல் என்பதால் இந்தச் சிறப்பியல்பை முழுமையாக உணர்த்த முடியாது என்ற முடிவுக்கு வந்தேன். மூலதனத்தில் தனத்தை மட்டும் நீக்கி விட்டு முதலைச் சேர்த்து மூலமுதல் ஆக்கி அசைபோடலானேன்.

மார்க்ஸ் கண்டறிந்த Capital என்பது வரலாற்று வழிப்பட்டது. இதுவும் வள்ளுவர் காலத்திய முதலும் ஒன்றல்ல. இந்த வேறுபாட்டை உணர்த்தவும் முதல் அல்லாத, ஆனால் முதலும் அடங்கிய ஒரு சொல் தேவை எனக் கருதினேன். இப்படித்தான் மூலமுதலுக்கான பொறி தட்டிற்று.

பட்டுக்கோட்டையில் தமிழ் அறம் அமைப்பின் நிறுவுநர் / தலைவர் தோழர் இரமசாமி அழைத்து ஒரு நிகழ்ச்சிக்குப் போயிருந்தேன். அங்கு வண்ணத்தட்டி ஒன்றில் பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் எழுச்சிப் பாடல் எழுதி வைக்கபட்டிருந்தது. அதில் ஒரு வரி ”அயல்நாட்டு வல்லரசின் மூலமுதலீடும்” என்றிருந்தது. என் உதட்டில் புன்னகை! “வேறென்ன வேண்டும்” என்று மனத்துக்குள் பாட்டு வந்தது. கனிச்சாறு மூன்றாம் தொகுதியில் “புயல்வேகப் புரட்சியொன்று புறப்பட்டதிங்கே!” என்ற பாடலில் இந்த வரி இடம் பெற்றிருப்பதைப் பிறகு தெரிந்து கொண்டேன்.

மூலதனம் இப்படித்தான் மூலமுதல் ஆயிற்று. இப்போதும் கூட வாய்ப்புள்ள இடங்களில் முதல் என்றும் சுருக்கிச் சொல்கிறேன். தூய தமிழாக்கம் படிக்கும் போது நீங்களே தெரிந்து கொள்ளலாம்.

உரிமைத் தமிழ்த் தேசம் மின்னிதழ் ஆயிரக்கணக்கானவர்களுக்கு இலவயமாகவே அனுப்பி வருகிறோம். கைபேசி எண் அல்லது மின்னஞ்சல் முகவரி அனுப்பினால் உங்களுக்கும் அனுப்புவோம். புதுவை, வில்லிபுத்தூர், மதுரையில் உரிமைத்தமிழ்த்தேசம் முகப்பின் அடையாள அச்சு வெளியிடப்பட்டது, வந்திருந்த அனைவருக்கும் மின்னிதழ் அனுப்பி வைக்கப்பட்டது. மின்னிதழ் படிப்பதை வழக்கமாக்கிக் கொள்ளுங்கள். மற்றவர்களுக்கும் அனுப்பியுதவுங்கள்

-தியாகு,ஆசிரியர்

## தோழர் தியாகுவின் மார்க்சியம் அனா ஆவன்னா...




*தமிழ்நாடெங்கும் (திருவொற்றியூர், ஆவடி, திருவாரூர், பட்டுக்கோட்டை, தஞ்சாவூர், புதுவை, கோவை, திருத்துறைப்பூண்டி, பரமக்குடி, திருவில்லிபுத்தூர், மதுரை ஆகிய ஊர்களில் மார்க்சியம் அனா ஆவன்னா அறிமுக/வெளியீட்டு நிகழ்வுகள் நடந்துள்ளன. மொத்தம் ஆயிரம் படிகள் விற்றுத் தீர்ந்து விட்டன. மீண்டும் அச்சிடும் பணி நடைபெற்று வருகிறது.*

*தமிழ்ப் பதிப்பு. கருத்தாழமிக்க பின்னிணைப்புக் கட்டுரைகளுடன். கெட்டி அட்டை. தரமான தாள்களில் 130 பக்கங்கள். விலை உரூ.150.*

*நூல்களைப் பெற...*

தோழர் தியாகு

Krishnasami Thiagarajan

8939154752.

.மூலமுதல் முன்வெளியீட்டுத் திட்டத்தில் இணைந்துள்ளோர்க்கு விலை உரூ 100 மட்டுமே.

| பட்டுக்கோட்டை | மதுரை | கோவை | தேனி | பொள்ளாச்சி |
|---|---|---|---|---|
| தோழர் இராமசாமி | Kathir Vel | Gnatppan Siva | Mathiyavan Irum-porai | ஆ.சத்தியபிரபு |
| 9751072143 | 9894913820 | 9944952893. | 9600039031 | 9865995396 |

உரிமைத் தமிழ்த் தேசம் மின்னிதழ் ஆயிரக்கணக்கானவர்களுக்கு இலவயமாகவே அனுப்பி வருகிறோம். கைபேசி எண் அல்லது மின்னஞ்சல் முகவரி அனுப்பினால் உங்களுக்கும் அனுப்புவோம். புதுவை, வில்லிபுத்தூர், மதுரையில் உரிமைத்தமிழ்த்தேசம் முகப்பின் அடையாள அச்சு வெளியிடப்பட்டது, வந்திருந்த அனைவருக்கும் மின்னிதழ் அனுப்பி வைக்கப்பட்டது. மின்னிதழ் படிப்பதை வழக்கமாக்கிக் கொள்ளுங்கள். மற்றவர்களுக்கும் அனுப்பியுதவுங்கள்

-தியாகு,ஆசிரியர்

# களம் காலம்

## செய்திகள் வழங்கல்:தோழர் மகிழன்

காவிரி டெல்டா உள்ளிட்ட 200க்கும் மேற்பட்ட இடங்களில் ஹைட்ரோ கார்பன் எடுக்க மத்திய அரசு அனுமதி அளித்ததுள்ள நிலையில் பேரழிப்புக்கு எதிரான பேரியக்கம் சார்பில் 2019 ஜூலை 12ஆம் நாள் ஹைட்ரோ கார்பன் திட்டத்துக்கு எதிராகத் தஞ்சையில் பட்டினிப் போராட்டம் நடக்க இருந்தது. காவிரி டெல்டா மாவட்டங்களில் ஹைட்ரோ கார்பன் எடுக்கும் திட்டத்தைக் கைவிட வேண்டும், காவிரி டெல்டா மாவட்டங்களைப் பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக நடப்பு சட்டப் பேரவைக் கூட்டத் தொடரிலேயே அறிவித்துத் தீர்மானம் இயற்ற வேண்டும் என்ற கோரிக்கைகளை வலியுறுத்தி இந்தப் பட்ட்டினிப் போராட்டம் நடக்க இருந்தது.

இதற்கு அனுமதி மறுத்த காவல் துறையினர், உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வருவோரை வழிமறித்துக் கைது செய்தனர். தமிழ்த் தேசிய விடுதலை இயக்கப் பொதுச்செயலாளர் தோழர் தியாகு, பேரழிப்புக்கு எதிரான பேரியக்கத்தின் தலைவர் க.க.இரா.லெனின், தமிழர் அறம் நிறுவுநர் பட்டுக்கோட்டை இராமசாமி உள்ளிட்ட தோழர்களை வழிமறித்துக் கைது செய்த போது அவர்கள் அந்த இடத்திலேயே அமர்ந்து பதாகைகளை ஏந்தியபடி கோரிக்கைகளை வலியுறுத்தி முழக்கமிட்டனர்.

+++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++

கூடங்குளம் அணுக்கழிவு அபாயம் - எச்சரிக்கை மாநாடு 2019 ஜூலை 12ஆம் நாள் சென்னை நிருபர்கள் சங்கத்தில் நடைபெற்றது. இதில் பல்வேறு இயக்கங்கள் மற்றும் கட்சிகள் பங்கேற்றுத் தங்கள் எதிர்ப்பினையும் அணுக்கழிவு மையத்தின் அபாயம் குறித்த எச்சரிக்கையையும். தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத்தின் சார்பில் பொதுச்செயலாளர் தோழர் தியாகு தலைமையில் கலந்து கொண்டோம். அணுவாய்தம் பேரழிவுக் கருவியே தவிர மரபுசார் போர்க் கருவி ஆகாது, உலகெங்கிலும் அதனை நாம் எதிர்த்தாக வேண்டும் என்றும், அணுக்கழிவு மையத்தின் தீமை பற்றியும் தோழர் தியாகு உரையாற்றினார்.

+++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++

சமூகத்திற்காகப் போராடுபவர்கள் மீது "பொய் வழக்கு" போடுவதை கண்டித்தும், தமிழகம் முழுவதும் ( தெருமுனைக் கூட்டம், பொதுக்கூட்டம், ஆர்ப்பாட்டம் என அனைத்திற்கும் அனுமதி மறுப்பு) கருத்துரிமைக்கு எதிரான நடவடிக்கையை கண்டித்தும் - 17.07.2019 அன்று

"மக்களதிகாரம்" ஒருங்கிணைத்த ஆர்ப்பாட்டத்தில் ததேவிஇ பொதுச்செயலாளர் தோழர் தியாகு கண்டண உரை நிகழ்த்தினார். தோழர்கள் மருதையன் (மகஇக), ராஜு (மக்களதிகாரம்), செந்தில் (இளந்தமிழகம்), தியாகு (ததேவிஇ) உட்பட நூற்றுக்கணக்கனோர் தளைப்படுத்தப்பட்டு மாலையில் விடுவிக்கப்பட்டனர்.

++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++

குழந்தை நேயப் பள்ளிகள் கூட்டமைப்பு சார்பாக *தேசிய கல்விக் கொள்கை 2019* வரைவு பற்றிய கருத்தரங்கம் சென்னை MSSW கல்லூரியில் 14.07.2019 அன்று நடைபெற்றது. ததேவிஇ சார்பில் பொதுச்செயலாளர் தோழர் தியாகு மொழி நோக்கில் கல்விக் கொள்கை பற்றிக் கருத்துரை வழங்கினார்.

++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++

பாப்புலர் ஃப்ரன்ட் ஆப் இந்தியா சார்பில் 27.07.2019 அன்று சென்னையில் நடைபெற்ற NIA, UAPA சட்டங்களுக்கு எதிரான கண்டன ஆர்ப்பாட்டத்தில் தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம் சர்பில் தோழர்.வே.பாரதி கலந்துகொண்டு உரையாற்றினார்.இந்தச் சட்டங்கள் குறிப்பாக இசுலாமியர்கள் மற்றும் தமிழர்களுக்கு எதிராக பயன்படுத்தப் படுகிறது என்றும், இதனைத் தமிழர்கள் நாம் வீதியில் இறங்கிப் போராடி தடா, பொடாவைப் போல் விரட்டியடிக்க வேண்டும் என்றும் பேசினார்.

+++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++

சனநாயக மீட்புக் கூட்டமைப்பு சார்பில் பொள்ளாச்சியில் 2019 ஆகஸ்டு 2ஆம் நாள் NIA சட்டத் திருத்தத்திற்கு எதிராகக் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் நமது இயக்கத் தோழர் பாரதி கலந்துகொண்டு பேசியபோது ஒரு தனிமனிதனை பயங்கரவாதியாக சித்தரிக்க இந்தத் திருத்தம் வழிவகை செய்கிறது,அந்த வகையில் நாம் இதனை முதன்மையாக எதிர்க்க வேண்டுமெனப் பேசினார்.

++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++

தேசியப் புலனாய்வு அமைப்பு (NIA) மற்றும் சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம் (UAPA) சட்டத் திருத்தங்கள் ஏன் மக்களுக்கு எதிரானது என்ற தலைப்பில் NCHR அமைப்பு சார்பில் 03.08.2019 அன்று சென்னையில் பேராசிரியர் அ. மார்க்ஸ் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் ஓய்வுபெற்ற நீதியர் அரி பரந்தாமன், ததேவிஇ சார்பில் இயக்கப் பொதுச்செயலாளர் தோழர் தியாகு கருத்துரை வழங்கினர்.

++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++

பதிவு எண் :R.Dis. No. 1964/2014

## புதுவையில் தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம் தொடக்கம்

05.08.2019 மாலை 6 மணிக்கு தோழர் செல்வமுருகன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர் திலீபன் வரவேற்புரை ஆற்றினார். பின்பு இயக்கத்தின் கொடியினைப் பொதுச்செயலாளர் தோழர் தியாகு வழங்க புதுவை அமைப்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள தோழர் செல்வமுருகன் பெற்றுக்கொண்டு தலைமையுரை நிகழ்த்தினார். தோழர் மகிழன் மார்க்சியம் ஆனா ஆவன்னா நூலை அறிமுகப்படுத்திப் பேசினார் .பின்பு இயக்கத்தின் இதழான உரிமைத் தமிழ்த் தேசம் மின்னிதழை அதன் ஆசிரியர் தோழர் தியாகு வெளியிட புதுவை தோழர்கள் பெற்றுக்கொண்டனர்.பின்பு கொள்கை விளக்கவுரையை தோழர் தியாகு நிகழ்த்த அதன்மீதான விவாதங்களும் நடைபெற்றன. இறுதியாக தோழர் ஸ்டாலின் நன்றியுரை ஆற்ற கூட்டம் நிறைவுற்றது.

++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++

13.08.2019 மாலை மதிமுக தலைவர் வைகோ தலைமையில் சென்னையில் நடைபெற்ற அணு உலை எதிர்ப்புக் கருத்தரங்கில் தமிழ்த் தேசிய விடுதலை இயக்கப் பொதுச்செயலாளர் தோழர் தியாகு கலந்து கொண்டு கருத்துரை வழங்கினார்.இந்த கருத்தரங்கில் அணு உலை அபாயம் பற்றி விவரிக்கும் ஒரு கொரியத் திரைப்படமும் (PANDORA) காட்சிப்படுத்தப்பட்டது. ஆங்கில வரிகளோடு திரையிடப்பட்ட இப்படம் அணு உலை அபாயம் குறித்துப் பேசுகிறது. இந்தப் படத்தை மக்களிடையே பரப்புரையாக கொண்டுசெல்ல வேண்டும் என்று கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++

அணுக்கழிவு, ஹைட்ரோ கார்பன், எட்டுவழிச்சாலைத் திட்டங்களுக்கு எதிரான கருத்தரங்கு 10.08.2019 அன்று சென்னை பத்திரிக்கையாளர் மன்றத்தில் நடைபெற்றது. மக்களதிகாரம் ஒருங்கிணைத்த இந்தக் கருத்தரங்கில் தமிழ்த் தேசிய விடுதலை இயக்கப் பொதுச்செயலாளர் தோழர் தியாகு கருத்துரை வழங்கினார்.

++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++

எழில் கொஞ்சும் அத்திவெட்டி-பிச்சினிக்காட்டில் (பட்டுக்கோட்டை-வட்டம்,) பேரழிப்பிற்கு எதிரான பேரியக்கத்தால் ஒருங்கிணைக்கப்பட்ட பேரழிவுத்திட்டங்களை எதிர்ப்பது எப்படி என்றத் தலைப்பிலான இரண்டு நாள் கலந்தாய்வு (17,18.8.2019 சனி,ஞாயிறு) இனிதே நடைபெற்றது. தோழர்கள் உற்சாகத்துடன் கலந்துகொண்டனர். தமிழ்த்தேசிய விடுதலை இயக்கத்தின் பொதுச்செயலாளர்,தோழர்.தியாகு பேரழிவுத்திட்டங்களை எதிர்ப்பது எப்படி என்ற

அறிமுகவுரையுடன் நிகழ்வைத் தொடங்கினார், அதைத் தொடர்ந்து காசுமீர் சிக்கல் குறித்தும், அணுஆயுதப் பேரழிவு குறித்தும் சிறப்புரைஆற்றினார்.மேலும் தோழர்களின் விருப்பத்தின் படி மார்க்சிய வகுப்பெடுத்து மார்க்சிய அறிமுகம், இயங்கியல் பொருள்முதல்வாதம், வரலாற்றுப்பொருள்முதல்வாதம் குறித்த விளக்கவுரைகளையும் அளித்தார்.தோழர். சமந்தாபேரழிவுத்திட்டங்களானஅணுக்கழிவுமையம், ஹைட்ரோகார்பன்திட்டம், எட்டுவழிச்சாலை, சாகர்மாலா, பசுமைப்புரட்சி, மரபணுமாற்றப்பயிர்கள் குறித்துவிளக்கவுரைஆற்றினார். நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளரான தோழர்.கா.கா.இரா.லெனின் பேரழிப்பிற்கு எதிரான பேரியக்கக் கோட்பாடுகள், ஒருங்கிணைத்து செய்ய வேண்டியப்பணிகள், இலக்குகள் குறித்த விரிவுரையுடன் நன்றியுரையளித்தார்.

++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++



**வேதரண்யத்தில் சாதி வெறியர்களால் நிகழ்த்தப்பட்ட அம்பேத்கர் சிலை உடைப்புக்குத் தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம் கண்டனம்! அண்ணலுக்கு மரியாதை!**

27.08.2019 அன்று காலை 10 மணிக்கு கோடம்பாக்கத்தில் இயக்கத் தோழர்கள் சூழ பொதுச் செயலாளர் தோழர் தியாகு அண்ணல் அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்தார். சிலை தகர்ப்புக்குக் கண்டன முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++

++பூவுலகின் நண்பர்கள் மற்றும் அனுசக்திக்கு எதிரான மக்கள் இயக்கம் ஒருங்கிணைத்த ”மாற்றப்படும் இந்திய அணு ஆயுதக் கொள்கை:அழிவை நோக்கிய பயணமா?” என்ற தலைப்பிலான கருத்தரங்கம் 30.08.2019 அன்று சென்னை பத்திரிக்கையாளர் மன்றத்தில் நடைபெற்றது. பேராசிரியர் அச்சின் வனைக், ஏ எஸ் பன்னீர்செல்வம்,சுப. உதயகுமார், தோழர் தியாகு கருத்துரை வழங்கினர்.

++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++

நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் சார்பில் 31.08.2019 அன்று சென்னை பத்திரிக்கையாளர் மன்றத்தில்”அனைத்து தேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் நாள்” கருத்தரங்கம் நடைபெற்றது. இயக்கப் பொதுச்செயலாளர் தோழர் தியாகு கலந்து கொண்டு உரையாற்றுகையில், சிங்கள அரசினால் தமிழீழ மக்களின் போராட்டங்களைத் தடுக்கவோ, அவர்களுக்கு ஏற்ற மாற்றுத் தீர்வை முன்வைக்கவோ முடியவில்லை என்பதால் சிறிலங்கா

என்ற கருத்தியல் தோல்வியடைந்து விட்டது, இது தமிழ் மக்களின் போராட்டத்துக்குக் கிடைத்த வெற்றி என்று பேசினார்.

## பெருங்குழுமப் பேராசைகளுக்குத் தீனி போடும் அரசாணைகள்

சமந்தா

உலகெங்கும் பொருளியல் மந்த நிலையில் உள்ளதை பொருளியல் வல்லுநர்கள் ஒப்புக் கொள்கிறார்கள், நாமும் கண்கூடாகக் காண்கிறோம். இந்தியாவில் திடீர் பணமதிப்புநீக்கம், திடீர் ஜிஎஸ்டி போன்ற அரசு பயங்கரவாத நடவடிக்கைகளால் மக்களின் பொருளாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டு நாட்டின் பொருளியல் தேக்கம் படுமோசமாக உள்ள நிலையில் இந்தியத் திருநாட்டின் நிதியமைச்சருக்கு மட்டும் இந்தியப் பொருளியல் சீராகவும் சிறப்பாகவும் தெரிவதன் மாயம் என்ன!

கா்பி டே நிறுவனர் வி.ஜி. சித்தார்த்தாவின் மறைவைத் தங்களுக்கு சாதகமாக்கிக் கொண்டு பெருங்குழுமங்கள் (கார்ப்பரேட்டுகள்) பெருமளவிற்குக் கூக்குரலிட்டனர். தங்கள் இலாபத்தைப் பாதுகாக்க 'கார்ப்பரேட் வரி' என்னும் கொடுந்துன்பத்தால் தாங்கள் பெரிதும் பாதிக்கப்படுவதாகவும், கார்ப்பரேட் வரி பெறுவதே தீவிரவாதம். எனவும் பெருமுதலியர்கள் முதலைக் கண்ணீர் வடித்து, நினைத்ததைச் சாதித்தும் கொண்டனர். மூன்று இலட்சம் விவசாயிகள் தற்கொலை செய்து கொண்ட போது இவர்கள் குரலெழுப்பவே இல்லை. அரசும் அவையெல்லாம் குடும்பப் பிரச்சினைகளால் நேர்ந்தவை எனப் பொறுப்பேற்காமல் அரசு அறிக்கைகளில் அவற்றைத் தடந்தெரியாமல் அழித்தது.

உழைக்கும் மக்களின் கூலியையே பெருமளவு சுரண்டும் மறைமுக வரி விதிப்பு வரி தீவிரவாதம் இல்லையா? அரசு தர வேண்டிய கல்வி, மருத்துவம், வேலைவாய்ப்பை, உணவுப் பாதுகாப்பைத் தனியாரிடம் அதிக விலைக்குப் பெறுமாறு மக்களை நிர்ப்பந்தித்து அவர்களைப் பட்டினியால் கொல்வது அரசு மக்கள் மீது ஏவும் பொருளாதாரப் போர் இல்லையா?...

மோதி அரசைப் பொறுத்த வரை உழைக்கும் மக்கள் நாட்டின் வளங்களை உருவாக்கவில்லை. உழைப்பிற்குத் துளியும் தொடர்பில்லாத பெருங்குழுமங்களே நாட்டின் வளங்களை உருவாக்குகிறார்களாம். நாட்டின் வளத்தை உருவாக்கும் பெருங்குழுமங்களை மதிக்க வேண்டுமாம்! வளம் உருவாக்குபவர்களை சந்தேகத்துடனோ, தாழ்வாகவோ பார்க்கக் கூடாதாம்!

வளம் ஆக்கபடவில்லையெனில் வளப்பங்கீடும் இல்லை. படைப்புகளை உருவாக்குபவர்களையே தான் தேசத்தின் வளமாகப் பார்ப்பதாகவும் மோடி உரையாற்றியுள்ளார். பெருங்குழுமப் பேர்வழிகள் எப்பேர்பட்டவர்கள்! சமூகத்தின் இலாபங்களை மட்டுமே தமதாக்கிக் கொண்டு, நட்டமோ இழப்போ ஏற்பட்டால் அதை சமூகமயமாக்கி விடும் தயாளர்கள்! சமூக சொத்துக்களை, வளங்களை, மனிதவளங்களின் உழைப்பை ஒட்ட சுரண்டுபர்களையே தேசத்தின் வளர்ச்சியாளர்களென அப்பட்டமானதொரு பொய்யை பகிரங்கமாகப் பரப்புரை செய்கிறது மோதி அரசு.

பெருங்குழுமச் சமூகப் பொறுப்பு நெறிகளை (CSR) மீறுவது கிரிமினல் குற்றமாக கருதப்படாது. வளம் உருவாக்குபவர்களை மதிப்பதாகவும், மரியாதை செலுத்துவதாகவும் நிதி அமைச்சர் கூறியுள்ளார். பெரு நிறுவன சமூகப் பொறுப்பின் படி 1000 கோடிக்கு மேல் ஆண்டு வருமானம் கொண்ட பெரு நிறுவனங்கள் இலாபத்தில் 2% அளவிற்கு சமூக நலத் திட்டங்களில் செயல்படுத்த வேண்டும் .இதை அவர்களின் கார்ப்பரேட் வரிகளின் மூலமாகவே கூடுதலாகப் பெற்று அரசே இந்தத் திட்டங்களை நேரடியாக செயல்படுத்தலாம். ஆனால் அப்படிச் செய்வதில்லை. ஏனென்றால் இந்த ஏற்பாட்டின் நோக்கமே பெருங்குழுமக் கொள்ளையர்களை சமூக சேவகர்களாகக் காட்டி சமூகத்தில் அவர்களின் மதிப்பை உயர்த்த வேண்டும் என்பதுதான். என்ன தான் அரசு 'கார்ப்பரேட்டு'களை சமூகப் பொறுப்புள்ளவர்களாகக் காட்ட முயன்றாலும் அவர்கள் அவ்வாறு நடந்து கொள்வதில்லை, இலாபத்தைக் குறைத்து காண்பிக்கப் பல்வேறு உத்திகளைக் கையாள்கிறார்கள். இந்தத் திட்டத்தை செயல்படுத்துவதில் தொடர்ந்து பல்வேறு முறைகேடுகளில் ஈடுபடுகிறார்கள். அவ்வாறு மோசடி செய்யும் பெருங்குழுமங்கள் யார்? பொருளியல் குற்றவாளிகள்தானே? குற்றத்திற்குத் தண்டனை விதிப்பதுதானே முறை? ஆனால் அது குற்றமாகக் கருதப்படாது. நாட்டின் வளத்தை உருவாக்கும் 'கார்ப்பரேட்டு'களை மதித்து மரியாதையுடன் கௌரவமாக நடந்து கொள்ள வேண்டும் என்றால் என்ன பொருள்? குற்றத்திற்குத் துணையாக ஆட்சியாளர்கள் இருப்போம் என்றுதானே பொருள்? இப்படித்தானே இவர்கள் விஜய் மல்லையாவையும், நீரவ் மோதியையும் மதிப்பு மரியாதையுடன் பாதுகாத்தார்கள்!

கார்ப்பரேட்டுகளின் துயர்துடைக்கப் பெருங்குழும வரி 30% லிருந்து 25% ஆகக் குறைக்கப்படும் என நிர்மலா சீதாராமன் உறுதியளித்துள்ளார். ஏற்கெனவே இந்தாண்டு நிதி நிலை அறிக்கையில்

400 கோடி வரை வருமானம் பெறும் 99.3.% கம்பெனிகளின் வரியை 25% குறைத்துள்ள நிலையில் மீதமுள்ள 0.7% பெருங்குழுமங்களின் கார்ப்பரேட் வரியையும் 30% லிருந்து 25% ஆகக் குறைக்கப் போகின்றனர். மொத்த கார்ப்பரேட் வரி வருவாயில் 80% இந்த 0.7% நிறுவனங்களிடமே பெறவேண்டிய நிலையில், அதில் 5% குறைத்தால் அதனால் 1.2 லட்சம் கோடி நிதிவருவாய் குறையும்.

நிதியமைச்சர் கார்ப்பரேட்டுகளின் குறைகளைச் சரிசெய்ய நாடு முழுவதும் பயணம் மேற்கொள்வதாக வாக்களித்துள்ளார். பெருங்குழும முதலாளர்கள் தங்கள் இருக்கையில் இருந்தவாறு குரல் கொடுத்தாலே அரசு செவி சாய்க்கும். நிதியமைச்சர் நேரடியாகச் சந்தித்து அவர்களின் குறைகள் அனைத்தையும் தீர்த்து வைப்பார். அவர்கள் அணிசேரவோ போராடவோ தேவையில்லை, காவல்துறையின் தடியடிக்கோ, கண்ணீர் புகைக் குண்டுக்கோ வேலையில்லை, தேசதுரோக வழக்கிற்கோ, பொய் வழக்குகளுக்கோ இடமில்லை, ஏனென்றால் இது அவர்களின் அரசு.

உழைக்கும் மக்கள் தங்களின் நியாயமான கோரிக்கைகளுடன் எத்தனை முறை நாடாளுமன்றத்துக்குப் பேரணியாகச் சென்றாலும் அவர்களை மோதியோ, நிதியமைச்சரோ கண்டுகொள்வதே இல்லை. மக்களின் அமைதியான அறப் போராட்டங்கள் அனைத்து வழிகளிலும் கொடூரமாக அரசு வன்முறை யால் ஒடுக்கப்படுகின்றன. எப்பேர்பட்ட முரண் இது! இங்கு நடப்பது மக்களாட்சி அல்ல, பெருமுதலாளிகளின் ஆட்சி என்பதே இந்த முரணின் பொருள்.

நிதிநிலை அறிக்கை வெளியீட்டிற்குப் பிறகு 3.2 பில்லியன் டாலர் அந்நிய நிதி மூலதனம் நாட்டை விட்டு வெளியேறியதால் கலக்கமடைந்த மோடி அரசு அந்நிய நிதி முதலீடுகளின் மீதான கூடுதல் வரியை நீக்கியுள்ளது. இதுவரை பங்குச்சந்தை ஒழுங்காற்று வாரியம் (SEBI).அந்நிய நிதி முதலீடுகளை மூன்று வகையாகப் பிரித்திருந்தது, தற்போது அந்நிய நிதி முதலீடுகளை ஊக்குவிப்பதற்காக அதிக நெறிமுறைகளைக் கொண்ட மூன்றாம் பிரிவை நீக்கியுள்ளது.(III category FPI), மேலும் அந்நிய நிதி முதலீடுகளைப் பதிவு செய்தலை மிகவும் எளிமைப்படுத்தி நெறிகளைத் தளர்த்தியுள்ளது. இந்த நகர்வு நிதிகள் வெளியேறாமல் நிலைநிறுத்த உத்தரவாதம் அளிக்காது. இந்தியாவின் நிதிநிலையை மேலும் பலவீனமாக்கி ஊகமுதலீடுகளையே ஊக்குவித்துக் கடன்-குமிழிப் பொருளியலாக்கும்.

நாட்டின் மொத்தத் தேவையும் நுகர்வும் தொழில் முதலீடுகளும் பெருமளவில் குறுகிச்

சுருங்கிவிட்டன. இரும்பு, சிமெண்ட் ஆக்கம் (உற்பத்தி) குறைந்துள்ளது. பொருளாக்க, கட்டுமானப் பணிகளும் நசிவடைந்துள்ளன. மோட்டார் வாகனங்களிலிருந்து, ரொட்டி வரை நுகர்வுப் பண்டங்களின் விற்பனை பெரிதும் குறைந்துள்ளது.

வங்கி நிதிநெருக்கடி, பணச் சுற்றோட்ட நெருக்கடிகளால் வங்கிக் கடன்களின் அளவே குறைந்துள்ள நிலையில், கிடைத்த கடன்களையும் சரியாகப் பயன்படுத்த முடியாத நிலை உள்ளதாகவும், 18 முக்கியத் தொழில் துறைகளில் சேவைத் துறை உட்பட 14 தொழில்துறைகளில் வங்கிக் கடன் பெறுவது குறைந்துள்ளது எனத் தலைமை வங்கி அறிவித்துள்ளது.

தலைமை வங்கி மலிவுக் கடன் கிடைக்க வங்கிக் கடன் வீதத்தை 5.4%ஆகக் குறைத்திருந்தாலும் அதன் இறுதிப் பயன்பாட்டை நுகர்வோர் அடையும் விதமாக வங்கிகள் அதைப் பரிமாற்றி வட்டி வீதத்தைக் குறைக்கவில்லை.

அப்படியே குறைத்தாலும் அது மட்டுமே இன்றைய பொருளியல் நெருக்கடிக்குத் தீர்வாகாது.

நவீனத் தாராளியம் பணக் கொள்கையில் மட்டும் மாற்றம் கொண்டுவருவதாலேயே அனைத்து பொருளியல் நெருக்கடிகளையும் சரிசெய்யமுடியும் என்கிறது.ஆனால் ஒவ்வொரு பொருளியல் நெருக்கடியும் அது பொய் என்பதையே மெய்ப்பிக்கிறது.

மூலமுதலின் இலாபத்திற்கும், கூலி வீதத்திற்கும் இடையிலான ஏற்றத்தாழ்வு வரலாறு காணாத அளவிற்கு உச்சத்தில் இருப்பதே இந்தப் பொருளியல் நெருக்கடிக்கு அடிப்படைக் காரணமாக உள்ளது. கூலி வளர்ச்சி வீதம் மிகவும் குறைந்ததால், தனிநபர் வருமானம் குறைந்து, சேமிப்பும் குறைந்து ஒட்டுமொத்த நுகர்வுத் தேவையைக் குறுக்கியுள்ளது. 2017ல் 176 ரூபாயாக இருந்த குறைந்தபட்ச அடிமட்டக் கூலியை வெறும் 2 ரூ மட்டும் உயர்த்தி 178 ரூ நிர்ணயித்த இந்திய அரசு, 17 தொழிலாளர் சட்டங்களை இரண்டு தொழிலாளர் சீர்திருத்த மசோதாக்களாக்கி, முத்தரப்பு பேச்சுவார்த்தை இல்லாமல், தொழிற்சங்கங்களை ஆலோசிக்காமல் முதலாளிகளுக்கு சாதகமாக அவசர அவசரமாக நிறைவேற்றிய இந்திய அரசு இந்தப் பிரச்சனையின் தீவிரத்தை கண்டு கொள்ளுமா?

இந்தப் பொருளியல் நெருக்கடியிலிருந்து மீள்வதற்குஅரசே நேரடியாகப் பயனுள்ள பொருளாக்கத்தில் முதலீடு செய்து வேலை வாய்ப்புகளை உருவாக்க வேண்டும். அவ்வாறு செய்தால் சமூகத்தில் பெருமுதலாளர்களுக்கான இருப்பே கேள்விக்குறியாகிவிடும் என்பதால்

நவீனதாராளமயத்தில் இதற்கான வெளி மிகவும் குறுக்கப்பட்டுள்ளது. பொருளியல் முதலீடுகளுக்கான கடனைத் தனியார் நிறுவனங்களுக்குப் பெற்றுத் தருவதே அரசின் பிரதான வேலையாகிப் போனது.

இந்திய அரசு நிதிப் பற்றாக்குறையைக் கட்டுக்குள் வைப்பதாகக் கூறி பொதுத்துறை நிறுவனத்தின் பங்குகளை தனியார் மயப்படுத்துவதன் மூலம் 1.03 இலட்சம் கோடி வருவாய் பெறவும், தலைமை வங்கியின் இலாபத்தைத் தனியார் நிறுவனங்களுக்குத் தாரை வார்க்கவும், கூடுதல் கடன்களுக்கு அந்நியக் கடன் சந்தையை நம்பியுள்ள நிலையில், அரசே நேரடியாகப் புதிய சமூக நலத் திட்டங்களில் முதலீடு செய்ய வாய்ப்பில்லை.

சமூகத்தின் மொத்தத் தேவையும், நுகர்வும் குறைந்துள்ள நிலையில், உற்பத்தியான பொருள்களே விற்கப்படாத போது, இலாபத்தைக் கையாடுவதற்கான சூழல் இல்லாத நிலையில் பெருமுதலாளர்கள் எவ்வாறு முதலீடு செய்வார்கள். மூழ்கும் கப்பலில் முதலீடு செய்ய அவர்கள் என்ன முட்டாள் சமூக சேவகர்களா?

## காசுமீரியமும் தமிழியமும்
## புதிய காசுமீரமும் புதிய தமிழகமும்

**தியாகு**

காசுமீர் பற்றி ஒவ்வொரு நாளும் வேளாவேளைக்கு நமக்குப் பரிமாறப்படும் செய்திகளில் பொய்களே பெருஞ்சோறாகவும் உண்மைகள் வெறும் ஊறுகாயாகவும் இருக்கின்றன.

காசுமீர் பற்றிய பொய்களில் மூத்த பொய் காசுமீர் இந்தியாவின் பிரிக்கவொண்ணாப் பகுதி என்பதே. இந்தப் பொய்யை ஏற்றுக் கொள்வதுதான் தேசபக்தியாம்! ஏற்க மறுப்பவர்கள் 'ஆண்டி-இண்டியன்சா'ம்!

பிரிக்கவொண்ணாப் பகுதி என்றால் என்ன? ஆங்கிலத்தில்integral part. அதாவது மனிதனுக்குத் தலை போல! ஒருங்கிணைந்த பகுதி! தலைமுடி போலவோ நகம் போலவோ வெட்டியெறியக் கூடிய பகுதியன்று. தலையில்லாத மனிதன் வெறும் முண்டம்! தலை இல்லாவிட்டால் மனிதன் இல்லை. அதே போல் காசுமீர் இல்லாவிட்டால் இந்தியாவே இல்லை என்றாகிறது. பாரதிய சனதா முதலான இந்துத்துவ ஆற்றல்களும் காங்கிரஸ் முதலான இந்தியத் தேசிய அமைப்புகளும் மார்க்சிஸ்டு முதலான இந்தியத் தேசிய இடதுசாரிகளும் காசுமீர் இந்தியாவின் பிரிக்கவொண்ணாப் பகுதி என்று திரும்பத் திரும்பச்

சொல்கின்றன. இராமஜெயம் போல் இதை யார் கூடுதலான தடவைகள் சொல்வது என்று போட்டியிடுகின்றனர்.

சத்யமேவ ஜெயதே! வாய்மையே வெல்லும்! காசுமீர் இந்தியாவின் பிரிக்கவொண்ணாப் பகுதி என்று தலையிலடித்து சத்தியம் செய்கின்றனர். ஆனால் உண்மை என்ன?

பிரிட்டனிடமிருந்து சுதந்திரம் என்று சொல்லி இந்தியா அதிகாரக் கைமாற்றம் பெற்ற 1947 ஆகஸ்டு 14-15 நள்ளிரவு நேரம் "ஊழுடன் உடன்படிக்கை" (Tryst with Destiny) குறித்து பண்டித நேரு முழங்கிய போது அவரது சட்டையில் ரோசாப் பூ இருந்திருக்கலாம். அது காசுமீரத்து ரோசாப் பூவாகவும் இருந்திருக்கலாம். ஆனால் இந்தியாவில் காசுமீர் இல்லை. காசுமீர்தான் பாரத மாதாவின் "சிரசு" என்றால் அவள் தலையில்லாத முண்டமாகவே பிறந்தாள் என்று பொருள். அவள் கன்னியாகுமரி என்னும் பாதமும் இல்லாமலே பிறந்தாள் என்பதையும் சேர்த்துக் கொள்ளலாம். இது இந்திய நேயர்களுக்குக் கசப்பாக இருக்கலாம், ஆனால் உண்மைகளுக்கு இரக்கமில்லை.

கன்னியாகுமரி அப்போது திருவிதாங்கூர் சமத்தானத்தின் பகுதியாக இருந்தது. 1947 அதிகாரக் கைமாற்றத்துக்கான உடன்படிக்கையின் படி பிரித்தானிய இந்தியா இரண்டாகப் பிரிக்கப்பட்டு, இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகள் பிறந்தன. ஆனால் சமத்தான இந்தியா இவ்வாறு பிரிக்கப்படவில்லை. சமத்தானங்கள் (மொத்தம் 552) விருப்பம் போல் இந்தியாவுடனோ பாகிஸ்தானுடனோ சேர்ந்து கொள்ளலாம், அல்லது தனியரசாகவும் நீடிக்கலாம் என்று உரிமையளிக்கப்பட்டது.

தேசிய இயக்கங்களின் குடியாட்சிய உள்ளடக்கம் (the democratic content of the national movements) என்று தலைவர் இலெனின் கூறிய கருத்து இந்தியத் தேசிய இயக்கத்துக்கும் பொருந்தும். பிரித்தானியக் காலனியாதிக்கத்துக்கு எதிரான போராட்டம் சமத்தான மக்களையும் எழுச்சி கொள்ளச் செய்தது. அவர்கள் அயலாட்சிக்கு எதிராக மட்டுமல்லாமல், மன்னராட்சிக்கு எதிராகவும், குடியாட்சியம் கோரியும் போராடினார்கள்.முதல் உலகப் போருக்கும் இரண்டாம் உலகப் போருக்கும் இடைப்பட்ட காலத்தில் இந்திய விடுமைக்கான இயக்கம் பாய்ச்சல் கண்ட அதேபோழ்தில் இந்தியக் குடியாட்சியத்தின் ஓர் இன்றியமையாக் கூறு மொழிவழித் தேசியமாக அமைந்தது. நவம்பர் புரட்சிக்குப் பின் உலகுதழுவிய அளவில் தேசிய விடுதலைக்கான போரட்டங்கள் வீறுகொண்ட வரலாற்றுப் பகைப்புலத்தை மறக்க வேண்டாம்.

தமிழகத்தில் 1938ஆம் ஆண்டே இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் முடிவில் பிறந்தது




"தமிழ்நாடு தமிழருக்கே!" என்ற முழக்கம்! தந்தை பெரியாரும் தமிழறிஞர்கள் மறைமலையடிகளாரும் சோமசுந்தர பாரதியாரும் செப்டெம்பர் 11ஆம் நாள் சென்னைக் கடற்கரைப் பொதுக்கூட்டத்தில் எழுப்பிய முழக்கம் தமிழ்த் தேசியத்தின் முதல் அரசியல் முழக்கமாயிற்று. ஒருபுறம் இந்திய விடுதலைக்கான போராட்டத்தின் உருவில் இந்தியத் தேசியமும், அந்த இந்தியத் தேசியத்தின் பிற்போக்கான மேலாட்சியக் கூறுகளை மறுத்து எழுந்த தமிழ்த் தேசியமும் இணையாக வளர்ந்து வந்தன. முதல் மொழிப் போரை வழிநடத்திய பெரியாரின் இயக்கம் அடிப்படையில் சாதியொழிப்பையும் சமூக நீதியையும் குறிக்கோளாகக் கொண்டிருந்தது.

1947 ஆகஸ்டு 15க்குப்பின் நடந்த வடக்கெல்லை, தெற்கெல்லைப் போராட்டங்கள்அன்றைய தமிழ்த் தேசிய எழுச்சியின் வெளிப்பாடுகளே. இவ்வகையில் கன்னியாகுமரியைத் தமிழகத்துடன் இணைப்பதற்கான போராட்டம் இந்த வரலாற்றுப் போக்கின் எல்லாக் கூறுகளையும் தன்னகத்தே கொண்டிருந்தது. அது முதன்மையாக இந்தியத் தேசிய இயக்கத்தவரால் முன்னெடுக்கப்பட்டது. திருவிதாங்கூர் தமிழ்க் காங்கிரஸ் என்பது எல்லா வகையிலும் காங்கிரஸ் கட்சியைப் போன்றதே. ஆனால் தமிழர் நலன் காக்கும் காங்கிஸ்! அவர்கள் திருவிதாங்கூர் மன்னராட்சியை எதிர்த்தார்கள். திருவிதாங்கூர் அரசாங்கத்தின் மலையாளத் திணிப்பை எதிர்த்தார்கள். அந்த சமத்தானத்தின் தமிழ்ப் பகுதிகளை மலையாள ஆதிக்கத்திலிருந்து விடுதலை செய்து தமிழ்நாட்டோடு இனைப்பதற்காகப் போராடினார்கள். அவர்கள் அந்தப் போராட்டத்தைக் குமரி விடுதலைப் போராட்டம் என்றே அழைத்தார்கள். மொழிவழி இனவழி உடன்பிறந்த தமிழுறவுகளோடு சேர்வதற்கான போராட்டம் என்ற அளவில் அது தமிழ்த்தேசிய உள்ளடக்கம் கொண்டிலங்கிற்று.

குமரி விடுதலைப் போராட்டத்தின் இன்னொரு தனிச்சிறப்பு அது சமூகநீதிக்கான போராட்டமாகவும் அமைந்தது என்பதாகும். நம்பூதிரி நாயர் கொடுங்கோன்மையால் துயருற்ற நாடார் உள்ளிட்ட ஒடுக்குண்ட மக்களே அப்போராட்டத்தின் வலுவாற்றலாகத் திகழ்ந்தனர். விடுதலைப் போராட்டத்தின் தலைவர் மார்சல் நேசமணி தமதியக்கக் கொடியைத் தேர்வு செய்த முறை கருத்துக்குரியது. நாடார் மக்கள் அக்காலத்தில் காணாமை உள்ளிட்ட தீண்டாமைக்கும் குமுகப் பாகுபாட்டுக்கும் ஆளாக்கப்பட்டிருந்தனர். அக்குலப்பெண்கள் சேலை அணியவும் மாழைக் குடம் (உலோகக் குடம்) சுமக்கவும்

முடியாத படி குமுகத் தடை நிலவிற்று. இதற்கு எதிர்ப்புக் காட்டும் வகையில்தான் பச்சைக் கொடியில் பொற்குடத்தை இடம்பெறச் செய்தார் நேசமணி.

ஒப்பிட்டறியும் பொருட்டு தெலங்கானாவில் என்ன நடந்ததென்று பார்ப்போம். நைஜாமின் ஆளுகையில் இருந்த ஐதராபாத்தின் தெலங்கானா பகுதியில் பொதுமையர் (கம்யூனிஸ்டுகள்) தலைமையில் நடந்த வீரத் தெலங்கானா ஆய்தமேந்திய மக்கள் போராட்டத்தின் முழக்கம் ”விசாலாந்திரத்தில் மக்கள் ராஜ்யம்” என்பதுதான். பொட்டி சிறிராமுலுவின் உயிரீகமும் தெலுங்குத் தேசிய உணர்வெழுச்சியின் வெளிப்பாடே. வீரத் தெலங்கானாவில் மன்னராட்சிக்கும் நிலக்கிழாரியத்துக்கும் சாதியத்துக்கும் எதிராகவும், இந்தியத் தேசியத்துக்கும் தெலுங்குத் தேசியத்துக்கும் ஆதரவாகவும் மூண்டெழுந்த போராட்டங்கள் ஒரே புள்ளியில் மையங்கொண்டதைக் காண்கிறோம்.

1948 செப்டம்பரில் “போலிஸ் நடவடிக்கை” என்ற பெயரில் நேரு ஏவிய இந்திய இராணுவம் ஐதராபாதில் நுழைந்தது. நைஜாம் மன்னர் சரணடைந்தார். அவர் ஐதராபாத் மாநில ’ராஜ பிரமுகர்’ (ஆளுநர்) ஆக்கப்பட்டார். பொதுமைக் கட்சியின் தலைமையிலான மக்கள் போராட்டம் அடக்கியொடுக்கப்பட்டது. 1956ஆம் ஆண்டு தெலுங்கு மக்களின் தாயகம் மொழிவழி ஆந்திர மாநிலமாக அமைக்கப்பட்டது.

சமத்தானத்து மக்களின் குடியாட்சிய வேணவாவைப் பயன்படுத்தி அவற்றை இந்தியக் குடையின் கீழ் கொண்டுவரும் முனைப்பின் அடையாளமாகக் கருதப்பட்டவர் அன்றைய துணைத் தலைமையமைச்சர் சர்தார் வல்லபாய் படேல். சமத்தானங்களின் குறுநில மன்னர்களை வழிக்குக் கொண்டுவர அவர் ’சாம பேத தான தண்ட’ வழிகளைப் பயன்படுத்தினார். பெரும்பாலான மன்னர்கள் ராஜ பிரமுகர்களாக்கப்பட்டு, அவர்களுக்குப் பெரும் வசதிகளும் சலுகைகளும் அரச மானியமும் வழங்கப்பட்டன.

ஜெர்மன் தேசத்தை ஓர்மை செய்து ஒன்றுபடுத்திய பிஸ்மார்க்குடன் படேலை ஒப்பிடுவோர் உண்டு. பிஸ்மார்க்கின் ஜெர்மனி ஜெர்மன் மொழி பேசும் இயற்கைத் தேசம். இந்தியா அப்படியன்று. இது பல மொழி பேசும் பல தேசங்களை உள்ளடக்கிய துணைக்கண்டம். இந்தியா ஒரு தேசமன்று. இது பேரரசிய நலன் கருதி தோற்றுவிக்கப்பட்ட செயற்கைக் கட்டமைப்பு. படேலை இரும்பு மனிதர் என்பார்கள் சிலர். ஆம், மக்கள் போராட்டங்களை ஒடுக்கியதில் இரும்பு மனிதரே. இந்திய ஒடுக்குமுறைச் சிறையிலிருந்து விடுபடும் தேசிய இனங்களின் போராட்டங்கள் வளர வளர படேலின் இரும்பு துருப்பிடிக்கக் காணலாம்.

தமிழகத்திலும் ஆந்திரத்திலும் இந்தப் போராட்டங்கள் நடைபெற்ற போது காசுமீரத்தில் என்ன நடந்தது?

இந்திய விடுமைக்கு முன் துணைக்கண்டத்தின் இன்னொரு பெரிய சமத்தானமாக இருந்தது ஜம்மு-காசுமீர். ஐதராபாதைப் போல் அல்லாமல் இது இந்தியா-பாகிஸ்தான் எல்லையில் இருந்தது. பெரும்பான்மை மக்கள் 77 விழுக்காடு என்னுமளவுக்கு இசுலாமியர்களாக இருந்தனர். ஆனால் மகாராஜா அரிசிங் ஓர் இந்து மன்னர். மக்கள்தொகை விழுக்காட்டின் அடிப்படையில் காசுமீர் இயல்பாகவே பாகிஸ்தானுடன் இணைந்திருக்கும்.

காசுமீருடன் ஒப்புநோக்கத்தக்கது குசராத்தின் ஒரு பகுதியான ஜூனாகாத் சமத்தானம். அங்கு மன்னர் முசுலீம். பெரும்பான்மை மக்கள் இந்துக்கள். அது பாகிஸ்தானின் எல்லையோரத்தில் இருந்தது. மன்னர் பாகிஸ்தானுடன் இணைய விரும்பியும் இந்தியாவுடன்தான் இணைய வேண்டும் என்று வலியுறுத்தினார் பண்டித நேரு. பெரும்பாலான மக்கள் இந்துக்கள் என்பதே அவர் சொன்ன காரணம். ஜூனாகாத் நவாப் 1947 செப்டம்பர் 15ஆம் நாள் பாகிஸ்தானுடன் இணைப்பு ஒப்பந்தத்தில் ஒப்பமிட்டார். மக்கள் இந்த இணைப்பை எதிர்த்துக் கிளர்ந்தெழுந்தார்கள். இந்திய அரசும் இந்த இணைப்பை ஏற்க மறுத்து விட்டது. 1947 திசம்பரில் பொது வாக்கெடுப்பு நடத்தப்பட்டு இந்தியாவுடன் இணைவதற்கு 99 விழுக்காட்டுக்கு மேல் மக்கள் ஆதரவளித்தனர். ஜூனாகாத் இந்தியாவில் இணைந்தது.

ஜூனாகாதில் நடந்தவற்றை காசுமீரில் நடந்தவற்றுடன் ஒப்புநோக்கினால் இந்திய அரசின் அணுகுமுறை எப்படி இரட்டை அளவுகோலுடையது என்பதை அறியலாம். ஜூனாகாத் அளவுகோலின் படி காசுமீர் பாகிஸ்தானுடன் எளிதில் இணைந்திருக்க முடியும். அப்படி நடக்காமல் போனது என்றால் அதற்கான முதற்பெரும் காரணம் காசுமீர் மக்களின் சமயச் சார்பற்ற உணர்வும் விடுதலை வேட்கையுமே.

பிரித்தானியப் பேரரசியத்துக்கும் காசுமீரின் முடியாட்சிக்கும் நிலக்கிழாரியத்துக்கும் எதிரான குடியாட்சியப் போராட்டத்தில் முகிழ்த்ததே காசுமீரியம் (காசுமீரத்துவம்) எனப்படும் காசுமீர்த் தேசியம். இராசபுத்திர டோக்ரா அரச வழித்தோன்றலாகிய மகாராஜா அரிசிங்கின் ஆட்சி ஒளிவுமறைவற்ற இந்து வகுப்புவாத ஆளுகையாகவே இருந்தது. குறிப்பாகச் சொன்னால் காசுமீர் பள்ளத்தாக்கின் முசுலிம் அடித்தட்டு மக்களை அடக்கியொடுக்கிற்று.

மன்னராட்சிக்கு எதிரான போராட்டங்களின் உச்சமாக 1931ஆம் ஆண்டு காசுமீரில் ஒரு

பேரெழுச்சி உருவாயிற்று. குர்-ஆனை அவமதித்தது தொடர்பான சிக்கலும், இது குறித்து முறையிட்டவர்களைப் பணிநீக்கம் செய்ததும் இவ்வெழுச்சிக்குத் தூண்டுகோலாயின. இந்து மகாராசாவைத் தூக்கியெறியும்படித் தூண்டியதாக அப்துல் காதர் என்ற இளைஞரைத் தளைப்படுத்தி சிறிநகர் சிறையில் வழக்கு உசாவலுக்கு உட்படுத்தியதை எதிர்த்து மக்கள் கிளர்ந்தெழுந்தார்கள். 1931 ஜூலை 13ஆம் நாள் காவல்துறை நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 17 பேர் உயிரிழந்தனர். இன்று வரை காசுமீர் பள்ளத்தாக்கு எங்கிலும் ஜூலை 13 ஈகியர் நாளாகக் கொண்டாடப்படுகிறது.

அப்போதே காசுமீர் மன்னராட்சிக்கு இந்துத்துவ ஆற்றல்கள் முட்டுக்கொடுத்து நின்றன. சான்றாக, இந்து மகாசபை 1931 ஆகஸ்டு 15 தக்கோலா மாநாட்டில் “காசுமீர் மகாராஜாவுக்கு எதிராக நடைபெற்று வரும் கடுமையான பரப்புரை குறித்து அச்சம் கொள்வதாக”த் தீர்மானம் இயற்றியது.

1931 போராட்டத்தை இந்து-முசுலீம் சிக்கலாகக் கருதக் கூடிய ஒருசிலர் இருந்தாலும், காசுமீரத்து இசுலாமிய மக்களில் பெரும்பாலார் இந்து வகுப்புவாதத்துக்கு எதிர்வினையாகக் கூட முசுலீம் வகுப்புவாதத்தில் வீழ்ந்து விடவில்லை. இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் சமயச் சார்பின்மையைக் கற்றுத்தரும் முதிர்ச்சி உடையவர்கள் காசுமீரிகள் - அன்றும் இன்றும்! இந்துத்துவமோ வேறு மத வெறித்தனமோ காசுமீரிகளிடம் எடுபடவில்லை, தமிழர்களிடமும் எடுபடவில்லை - அன்றும் இன்றும்!

1938இல் முசுலீம் மாநாட்டுக் கட்சியிலிருந்து சேக் அப்துல்லா தலைமையில் பிரிந்து வந்தவர்கள் அனைத்து ஜம்மு-காசுமீர் தேசிய மாநாட்டுக் கட்சி (AJKNC) அமைத்தார்கள்.



இக்கட்சி 1931 போராட்டத்தை ‘அடக்குமுறையாளர்களுக்கு எதிரான அடக்குண்ட மக்களின் போர்’ என வரையறுத்தது.

“நீதியையும் நியாயத்தையும் நிலைநாட்டுவதே இப்போரின் குறிக்கோள். ஆளுவோர் முசுலீம்களாக இருந்து ஆளப்படுவோர் இந்துக்களாக இருந்திருந்தாலும் இப்படித்தான் நிகழ்ந்திருக்கும்.”

சேக் அப்துல்லா தலைமையிலான தேசிய மாநாட்டுக் கட்சியே காசுமீர்த் தேசியத்தின் முதல் அரசியல் இயக்கம். காசுமீர்த் தேசியத்தை முறியடிக்க விரும்பிய மன்னர் சாதி மத அடிப்படையில் தோன்றிய அரசியல் இயக்கங்களை வரவேற்று ஊக்கப்படுத்தினார். காசுமீர் காசுமீரிகளுக்கே என்ற காசுமீரிய உணர்வும் தமிழ்நாடு தமிழர்களுக்கே என்ற தமிழிய

உணர்வும் சற்றொப்ப ஒரே காலத்தில் போராட்டக் களத்தில் முகிழ்த்தவை என்பது குறிப்பிடத்தக்கது.

பண்டித நேரு என்பதில் பண்டிதர் என்பது காசுமீர்ப் பார்ப்பனரைக் குறிக்கும் சாதிப் பெயராகும். பண்டிதர்களில் ஒரு பகுதியினர் சேக் அப்துல்லாவின் தேசிய மாநாட்டுக் கட்சியை ஆதரித்தனர். வேறு சிலர் காசுமீர் பண்டித மாநாட்டுக் கட்சியைத் தோற்றுவித்தனர். ஜம்மு பகுதியில் இந்து சபா தொடங்கப்பெற்றது. சீக்கியர்களுக்கென சிரோன்மணி கல்சா தர்பார் அமைக்கப்பட்டது. மேற்சொன்ன சாதிமதக் கட்சிகளுக்கு எதிராக மட்டுமின்றி, இசுலாமிய நிலக்கிழாரியம், வகுப்புவாதம் ஆகியவற்றை எதிர்த்தும் தேசிய மாநாட்டுக் கட்சியின் உருவில் காசுமீர்த் தேசியம் வளர்ந்தது.

காசுமீர்ப் பள்ளத்தாக்கு முசுலீம்கள் ஒடுக்கப்படுவதற்கு மன்னரின் இந்துமதச் சார்பே காரணம் என்று கூறிய முசுலீம் மாநாட்டுக் கட்சி இதற்குத் தீர்வு இஸ்லாமிய இறையரசே என்றது. தேசிய மாநாட்டுக் கட்சியோ நிலவுடைமையை ஒழித்து சமூகப் பொருளியல் விடுதலை பெறுவதே குறிக்கோள் என்றது.

அனைத்துலக அரங்கிலும் தேசிய மாநாட்டுக் கட்சி சோவியத்து குமுகிய (சோசலிச) ஒன்றியத்துக்கு ஆதரவாக நிலையெடுத்தது. 1942 மீர்பூர் மாநாட்டில் சோவியத்து செஞ்சேனைக்கு வாழ்த்துத் தெரிவித்தும் பாசிச எதிர்ப்புப் போராட்டத்துடன் தோழமை கொண்டும் தீர்மானங்கள் இயற்றப்பட்டன.

குடியரசு ஏட்டின் தொடக்கம் என்பது தமிழ்த் தேசம் தன்னைத்தானே இனங்காணும் இயக்கப் போக்கின் தொடக்கத்தைக் குறித்தது என்பார் இ.எம்.எஸ். குடியரசு ஏட்டின் தொடக்கமே சுயமரியாதை இயக்கத்தின் பிறப்பைக் குறித்தது. சுயமரியாதை இயக்கமும் குடியரசும் எந்த அளவுக்கு 'சமதர்மம்' என்னும் குமுகியக் கொள்கையைப் பரப்பின என்பது அரசியல் மாணாக்கர்களுக்குத் தெரியாமலிருக்க முடியாது. இதில் தோழர்கள்சிங்காரவேலரும் ஜீவனந்தமும் வகித்த பங்கு அந்த வரலாற்றின் இன்றியமையாப் பகுதி ஆயிற்று. அதே போல் சோவியத்து ஒன்றியத்தின் பால் சுயமரியாதை இயக்கம் கொண்டிருந்த பற்றுதலின் ஒரு வெளிப்பாடுதான் தந்தை பெரியாரின் சோவியத்து நாட்டுப் பயணம்.

சுயமரியாதை இயக்கத்துக்கும், பொதுமை இயக்கத்துக்கும் வெளியேயும் கூட திரு,வி.க. போன்ற பல தமிழறிஞர்கள் -- தமிழ் மறுமலர்ச்சிக்கு வித்திட்ட பெருமக்கள் - குமுகியப் பற்றும் சோவியத்துடன் தோழமையும் கொண்டவர்களாக விளங்கினார்கள். இந்த வகையில்

காசுமீரியமும் தமிழியமும் இணைகோடுகளாகவே பயணம் செய்யக் காண்கிறோம்.

ஈரோட்டுத் திட்டம் என்று பெயர் பெற்ற ஒரு சமதர்மத் திட்டத்தை பெரியாரும் சிங்காரவேலரும் 1932 திசம்பரில் எழுதி வெளியிட்டார்கள். இதனுடன் ஒப்புநோக்கத்தக்கது 1944ஆம் ஆண்டு தேசிய மாநாட்டுக் கட்சி வெளியிட்ட புதிய காசுமீர் (நயா காசுமீர்) என்ற கொள்கை அறிக்கை! இந்தியப் பிரிவினை நடந்தாலும் நடக்கா விட்டாலும் காசுமீர்விடுமை (சுதந்திர) அரசாகத் திகழ வேண்டும் என்ற நோக்கத்தை இந்த அறிக்கை பறைசாற்றியது. 50 உறுப்புகள் கொண்ட வரைவு அரசமைப்புச் சட்டமும் வெளியிடப்பட்டது. இதன்படி அரசமைப்புக்குட்பட்ட முடியரசர் அரசுத் தலைவராக இருக்கலாம். பாதுகாப்பு, அயலுறவு தொடர்பான அதிகாரங்கள் தேசியப் பேரவை என்னும் நாடாளுமன்றத்திடம் இருக்கும். காசுமீரத்துக்கென்று தனிக் குடியுரிமை இருக்கும். ”தாய்நாட்டைக் காப்பது அனைத்துக் குடிமக்களுக்கும் தலையாய புனிதக் கடமையாகும்” என்று இந்த அரசமைப்புச் சட்டம் சொல்லும் போது தாய்நாடு என்ற சொல் காசுமீரைக் குறிக்குமே தவிர இந்தியாவையோ பாகிஸ்தானையோ குறிக்காது என்பது நோக்கற்பாலது.

’புதிய காசுமீர்’ கொள்கையறிக்கையோடு தொழிலாளர் ஆவணம், உழவர் ஆவணம், தேசிய நலவாழ்வு ஆவணம் ஆகியவையும் வெளியிடப்பட்டன. கொள்கையறிக்கைக்கான முன்னுரையில் சேக் அப்துல்லா சோசலிச சோவியத்து நாட்டைப் போற்றினார்:

“சோவியத்து சோசலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தைச் சேர்ந்த வெவ்வேறு தேசிய இனங்கள், மக்களினங்கள் அடைந்துள்ள மறுமலர்ச்சியைக் காணும் போது ஊக்கம் பிறக்கிறது.”

முசுலிம் மாநாட்டுக் கட்சியை தேசிய மாநாட்டுக் கட்சியாக மாற்றியதை 1939இல் முசுலீம் லீக் குறை கூறிய போது முகமது அலி ஜின்னாவோடு மோதிக் கொண்டார் சேக் அப்துல்லா. ”காசுமீர்முசுலீம்களை விட்டு விடுங்கள், உங்கள் வேலையைப் பாருங்கள்” என்றார். 1944இலும் சேக் அப்துல்லாவுக்கும் ஜின்னாவுக்கும் கடும் மோதல் ஏற்பட்டது. பாகிஸ்தான் அமையும் போது அதில் காசுமீரை இணைப்பதற்கு சேக் அப்துல்லாவே தடையாக இருப்பதாக ஜின்னா நினைத்தார்,

1946-47இல் அனைத்திந்திய முசுலீம் லீக் பாகிஸ்தான் அமைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டிருந்த போது, காசுமீரை பாகிஸ்தானுடன் இணைப்பதற்காக முசுலீம் மாநாட்டுக் கட்சி ஜம்மு-காசுமீரில் வரிகொடா இயக்கம் நடத்தியது. இந்த இயக்கம் கொடிய முறையில் அடக்கியொடுக்கப்பட்டது. அதே போது தேசிய மாநாட்டுக் கட்சியோ “காசுமீரை விட்டு

வெளியேறு” என்ற முழக்கத்துடன் மன்னராட்சியை எதிர்த்துப் போராடியது.

சேக் அப்துல்லாவைப் பொறுத்த வரை, காசுமீரின் தனித்தன்மையை விட்டுத்தராமலே, தேவையானால் தன்னாட்சித் தகுநிலையுடன் இந்தியக் கூட்டாட்சிக் குடியரசில் இணைந்திருக்கலாம் என நினைத்தார். காசுமீரை பாகிஸ்தானுடன் இணைக்கும் எண்ணம் மட்டும் அவருக்கு இல்லவே இல்லை. நேரு போன்ற இந்தியத் தலைவர்களின் சமயச் சார்பின்மையில் அவர் நம்பிக்கை கொண்டிருந்தார். அவரது நம்பிக்கைக்கு அவர்கள் இரண்டகம் செய்தார்கள் என்பதே வரலாறு.

இணைவது இந்தியாவுடன் என்றாலும் சரி, பாகிஸ்தானுடன் என்றாலும் சரி, முடியாட்சி மிஞ்சாது என்பது மகாராஜா அரிசிங்குக்குத் தெரியும். நெடுநாள் தனித்து நீடிக்கவும் இயலாது. மக்களின் எதிர்ப்பும் வலுத்து வந்தது. இந்துத்துவ ஆற்றல்கள் தவிர மன்னரை ஆதரிப்பார் யாருமில்லை. எனவே பாகிஸ்தானுடன் இணையும் பேச்சுக்கே இடமில்லை. இந்தியாவுடன் இணைவதிலும் காசுமீர் மக்களுக்கு விருப்பமில்லை. காசுமீர் மக்களுக்கு அன்று முதல் இன்று வரை முதற்பெரும் தேர்வு ’ஆசாதி’ எனப்படும் விடுதலைதான்.

1947 செப்டம்பர் 29ஆம் நாள் சேக் அப்துல்லா சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டார். அடுத்த சில நாளில் அறிவித்தார்:

“ஜம்மு-காசுமீரில் வாழும் நாற்பது லட்சம்மக்களைப் புறந்தள்ளி பாகிஸ்தானுடனோ இந்தியாவுடனோ இணைவதாக அரசு அறிவிக்குமானால் நான் புரட்சிக் கொடி உயர்த்துவேன். எங்கள் சுதந்திரக் கோரிக்கை எங்கு அங்கீகரிக்கபட்டுகிறதோ அந்த அரசுடன் நாங்கள் இணைய விரும்புவதே இயல்பு.”

இந்திய இணைப்புக்கு மன்னர் அரிசிங் ஊசலாடிக்கொண்டிருந்த போது அவரை இணங்க வைக்க நேரு அரசு துணைத் தலைமையமைச்சர் வல்லாபாய் படேலை ஆர்எஸ்எஸ் தலைவர் கோல்வால்கரிடம் அனுப்பியது. கோல்வால்கர் 1947 அக்டோபரில் அரிசிங்கைப் போய்ப் பார்த்து இணைப்புக்கு உடன்பட வைத்தார்.

அரிசிங் இந்திய இணைப்புக்கு உடன்படப்போவதை அறிந்த பாகிஸ்தான் காசுமீரின் வடமேற்குப் பழங்குடிகளின் படையெடுப்புக்கு ஆதரவளித்தது. அல்லது அதுவே அப்படையெடுப்பைத் தூண்டி நடத்தியிருக்கலாம். மிரட்சியுற்ற அரிசிங் இந்தியாவிடம் இராணுவ உதவி கேட்டார். உடனடியாக இணைப்பு ஒப்பந்தத்தில் ஒப்பமிட வேண்டும் என்ற நிபந்தனையோடு இந்தியப் படை காசுமீரத்தில் நுழைந்தது. அன்று நுழைந்ததுதான் இன்று வரை வெளியேற வில்லை.

1947 அச்டோபர் 26ஆம் நாள் இடைக்கால அரசு அமைக்கும் படி சேக் அப்துல்லா கேட்டுக் கொள்ளப்பட்டார். அதே நாளில் அரிசிங் இணைப்பு ஒப்பந்தத்தில் ஒப்பமிட்டார். அடுத்த நாளே இந்தியப்படை காசுமீருக்குள் அனுப்பி வைக்கப்பட்டது. மூன்று நாள் கழித்து நெருக்கடிக்கால ஆட்சித் தலைவராக சேக் அமர்த்தபட்டார்.

இந்திய இணைப்புக்கு எதிராக காசுமீர் மக்கள் கிளர்ந்தெழுந்தார்கள். அரிசிங் ஓடிப்போனார். இந்தியாவுடன்காசுமீரை இணைக்கும் ஒப்பந்தத்தைத் தப்பியோடும் மன்னர் ஒப்பமிட்ட ஒப்பந்தம் என்று வரலாறு சொல்வது இதனால்தான்.

காசுமீர் இந்தியாவின் பிரிக்கவொண்ணாப் பகுதி என்று அறுதியிட்டுச் சொல்வோர் எல்லாம் அதற்கு இந்த ஒப்பந்தத்தைத்தான் சான்றாகக் காட்டுகின்றார்கள். மன்னர் விரும்பிப் போட்டாரோ, வேறு வழியின்றி நெருக்கடியில் போட்டாரோ அவரது ஒப்பத்தைக் காட்டி மக்களை என்றென்றும் அடிமைப்படுத்தி வைத்திருப்பது குடியாட்சியத்துக்கு முரணல்லவா?

அரிசிங் கையொப்பமிட்ட இணைப்பு ஒப்பந்தம் தவிர காசுமீர் இந்தியாவின் பகுதி என்பதற்கு வேறு சான்று இருந்தால் சொல்லுங்கள்.

ஏரண முறையில் பார்த்தால், இந்தியா வேறு, காசுமீர் வேறு என்று இருந்ததால்தானே இணைப்பு ஒப்பந்தம் என்ற ஒன்றே தேவைப்பட்டது? இந்த இணைப்பு ஒப்பந்தமே காசுமீர் இந்தியாவின் பிரிக்க முடியாத பகுதியல்ல என்பதைத்தான் காட்டும். தமிழ்நாடும் கூட இந்தியாவின் பிரிக்க முடியாத பகுதி இல்லைதான். ஆனால் இந்தியத் துணைக் கண்டத்திலேயே இந்திய அரசுக்குச் சில கட்டுத்திட்டங்களை விதித்து ஒப்பந்தம் செய்து இணைந்த ஒரே மாநிலம் ஜம்மு-காசுமீர் மட்டுமே. தமிழர்களின் இசைவு பெறாமலே தமிழகம் இந்தியாவுடன் இனைத்துக் கொள்ளப்பட்டது, தமிழர்கள் மீது தில்லி ஆளுகை நிறுவப்பட்டது என்ற உண்மையைப் பெரியார் மட்டும் இறுதி வரை சுட்டிக்காட்டிக் கொண்டே இருந்தார்.

இணைப்பை ஒட்டி காசுமீர் மக்களுக்கு இந்திய அரசு கொடுத்த உறுதிமொழி: இந்தியாவுடன் காசுமீர் இணைப்பு இறுதியானதன்று, இந்த இணைப்பு குறித்துப் பொதுவாக்கெடுப்பு நடத்தி காசுமீர் மக்களின் விருப்பமறிந்தே இறுதி முடிவெடுக்கப்படும் என்பதே. .

1948 ஜனவரி முதல் நாள் காசுமீர் தொடர்பான பூசலை ஐக்கிய நாடுகள் அமைப்புக்கு இந்தியாவே எடுத்துச் சென்றது. போர்நிறுத்தம், துருப்புகளை விலக்கிக் கொள்ளுதல்,




காசுமீர் மக்களிடையே வாக்கெடுப்பு நடத்தி காசுமீரின் வருங்காலத்தைத் தீர்வு செய்தல் என்ற அடிப்படையில் ஐநா பாதுகாப்பு மன்றத்தில் தீர்மானம் (39/1948) இயற்றப்பட்டது. வாக்கெடுப்பு நடத்துவதற்கான ஐநா ஆணையமும் அமைக்கப்பட்டது.

காசுமீர் இந்தியாவின் பிரிக்கவொண்ணாப் பகுதி என்றால் இந்திய அரசு ஐநாவுக்குச் சென்றது ஏன்? வாக்கெடுப்பு நடத்த ஒப்புக்கொண்டது ஏன்?

காசுமீர் இந்தியாவின் பிரிக்கவொண்ணாப் பகுதி என்பது வரலாற்று உண்மையும் அல்ல, அரசியல் நீதியும் அல்ல. காசுமீர் மீதான இந்தியாவின் உரிமை என்பது திருட்டுப் பொருள் மீது திருடனுக்குள்ள உரிமையே தவிர வேறல்ல. இந்த உண்மையைக் காசுமீரிகள் தெளிவாக உணர்ந்துகொண்டார்கள். ஆனால் இதே நிலையிலிருந்தும் தமிழர்கள் உணரவில்லை என்பதுதான் வருத்தத்துக்குரிய வேறுபாடு.

இணைப்புக்குப் பின் இத்தனை ஆண்டுகள் கழித்தும் காசுமீர் மக்கள் இந்தியாவிடமிருந்து அயன்மைப்பட்டிருப்பதை இந்திய அரசாலேயே மறுக்க இயலவில்லை. காசுமீர் பள்ளத்தாக்கு முழுவதையும் சிறைக்கூடாக மாற்றித்தான் காசுமீரை இந்தியாவுக்குள் வைத்திருக்க முடியுமென்றால், காசுமீர் இந்தியாவின் பிரிக்க முடியாத பகுதி என்று சொல்வது போல் கொடுமை வேறு என்ன?

## இந்திய அரசமைப்பு தேசிய இனங்களின் அடிமை முறியே!

மதியவன் இரும்பொறை

கேள்வி: காஷ்மீர் சிக்கல் எழுந்ததும், இந்திய அரசமைப்புச் சட்டத்தைப் பற்றிப் பலரும் பலவிதமாகப் பேசுகிறார்கள். கம்யூனிஸ்டுகளும் வேறு சிலரும் இந்திய அரசு இந்தியாவின் கூட்டாட்சித் தத்துவத்திற்கு எதிராக நடந்துகொள்கிறது என்கிறார்கள். கூட்டாட்சி மாண்புகளைப் பாதுகாப்போம் என்கிறார்கள். பன்மைத்துவத்தை அரசமைப்புச் சட்டம் அங்கீகரிக்கிறது என்கிறார்கள். திராவிட இயக்கத்தினர் இந்திய அரசமைப்புச் சட்டத்தை அரைக் கூட்டாட்சி (quasi-federal Constitution) என்கிறார்கள். தமிழ்த் தேசியர்களோ தேசிய இனங்களின் உரிமை பறிக்கப்படுகிறது என்கிறார்கள். நீங்களும் உங்களுடைய பதிவில், காஷ்மீர் காஷ்மீரிகளுக்கே! தமிழ்நாடு தமிழருக்கே! என்கிறீர்கள். இந்திய அரசமைப்புச் சட்டத்தை தேசிய இனங்களின்

அடிமை சாசனம் என்கிறீர்கள். இவ்வளவும் இந்திய அரசமைப்புச் சட்டம் கொடுத்த பேச்சுரிமையில்தானே பேசுகிறீர்கள்? உங்கள் கருத்து என்ன? இந்தியா கூட்டாட்சியா? அரசமைப்புச் சட்டத்தில் என்ன இருக்கிறது அல்லது என்ன இல்லை? எதற்காக அதனை அடிமை சாசனம் என்கிறீர்கள்? தமிழ்நாடு தமிழருக்கே என்பது சாத்தியமா? அரசமைப்புச் சட்டம் அனுமதிக்குமா? (--- திராவிட செல்வன், தேனி)

இந்திய அரசமைப்பினை மாண்புகளென்றும் மரபுகளென்றும் மானசிகமாக அணுகுவது மார்க்சியர்களுக்கு அழகன்று. அரசமைப்பு உருவாக்கத்தின் போது, அவையில் கூட்டாட்சிக் கொள்கை 'நோக்கமாக' இருந்து விவாதிக்கப்பட்டது என்பது உண்மைதான். இந்தக் காரணத்திற்காகவே இந்திய அரசமைப்பு கூட்டாட்சி அமைப்பு என்று ஏற்க இயலுமா? புறவய மெய்ம்மை என்னவென்று பார்க்க வேண்டாமா?

சோசலிசக் கொள்கைகள் கூட இந்திய அரசமைப்பின் இலக்குகளாகவும், உள்ளடக்கமாகவும் இடம்பெற்றிருப்பதாக அம்பேத்கர் கூறுகிறார். "இறைமையுள்ள சோசலிச மதச்சார்பற்ற சனநாயகக் குடியரசு" என்று அரசமைப்பின் முகப்புரையிலேயே கூட 'சோசலிசத்தைச் சேர்த்தும் விட்டார்கள். அதற்காக, இந்தியா சோசலிசக் கொள்கையுடைய தேசம் என்று கூற முடியுமா? அது மக்களை ஏய்ப்பதாகும்தானே? சோசலிசத்திற்கு அறிவியல் அடிப்படையில் பொருள்கொள்ளும் மார்க்சியர்கள் கூட்டாட்சிக்கு மட்டும் மானசிகமாகப் பொருள்கொள்ள முடியுமா?

எந்தவோர் அரசமைப்பும் ஆளும்வர்க்க நலன்களை நேரடியாக வெளியிடுவதாகவோ, ஆளும்வர்க்க நலன்களை மட்டுமே வெளியிடுவதாகவோ அமைந்திடாது. கடந்தகாலப் போராட்ட வரலாற்றையும், சமூக விழிப்புநிலையையும் பொறுத்து, ஆளும்வர்க்க நலன்களுக்கு உட்பட்டு, பல்வேறு வர்க்கங்களின் நலன்களையும் வெளியிடுவதாகவே அமையும். இருப்பினும், இறுதி நோக்கில் ஆளும்வர்க்க நலன்களுக்குப் பயன்படுவதாகவும், ஆளும்வர்க்க நலன்களை உறுதிசெய்வதாகவுமே அமையும். அவ்வகையில் இந்திய அரசமைப்பின் கூட்டாட்சிச் சாயலும் கூட, பல்வேறு தேசிய இனங்கள் கட்டுண்டுள்ள மெய்மை எதிர்மறையாக வெளிப்படும் தவிர்க்கவியலாச் சுவடு தானே தவிர, சாயலே சாறமாகி விடாது. இந்திய அரசமைப்பு இறுதிநோக்கில் அப்பட்டமான இந்தி மேலாதிக்க, இந்திய வல்லாதிக்கச் செயல்திட்டமே ஆகும். இதை மறைத்து இந்திய அரசமைப்பு கூட்டாட்சித் தன்மையுடையது, கூட்டாட்சி மாண்புகள் கொண்டது, பன்முகத் தன்மையை ஏற்கிறது என்று சொல்லி, இந்தியக் கட்டமைப்பின்

பண்பினையும், அரசமைப்பின் சாறத்தையும் மறைத்து தப்பெண்ணங்கள் விதைப்பது இந்திய ஆளும்வர்க்கத்திற்கு வால்பிடிப்பதே ஆகும்.

இந்திய அரசமைப்புதான் எனக்கு (நமக்கு) பேச்சுரிமை வழங்கியது என்கிறீர்கள். இது அதனளவில் முழு உண்மையன்று. எதுவொன்றையும் கடந்த கால வரலாற்றுத் தொடர்ச்சியாகப் பார்க்கத் தவறினால், நிகழ் காலத்தைப் புரிந்துகொள்ளவும் இயலாது, எதிர்கால நோக்கத்திற்குக் களம் அமைக்கவும் இயலாது. இந்திய அரசமைப்பு இயற்றப்படுவதற்கு முன் பேச்சுரிமை இருந்திருக்கவில்லையா? பிரித்தானிய ஆட்சியில் மாநாட்டு மேடைகளில் வாயைப் பொத்திக்கொண்டு மணிக்கணக்கில் அமர்ந்துவிட்டு எழுந்து சென்றார்களா? என்று திருச்சி செல்வேந்திரன் அவர்கள் வேடிக்கையாகக் கேட்டதுதான் நினைவுக்கு வருகிறது. ஒருவேளை அரசமைப்பு பேச்சுரிமையை மறுத்தாலும் கூட, நாம் போர்த்திக்கொண்டு படுத்திருக்க மாட்டோம் என்று நம்புகிறேன்.

அகண்ட பாரதக் கனவு போல, இந்தியாவில் கூட்டாட்சி என்பது மாண்புகளாகவும் மரபுகளாகவும் இருக்கிறது என்று நம்புவதற்கும் பேசுவதற்கும் அரசியல் செய்வதற்கும் எவர்க்கும் உரிமை உண்டு! அது தமிழர்களின் தாலியறுக்கும் அரசியல் என்று சொல்வதற்கு நமக்கும் உரிமையுண்டு!

**அரசமைப்பில் என்ன இருக்கிறது?**

இந்திய அரசமைப்பு ஒரு "எழுதப்பட்ட அரசமைப்பு" ஆகும். அதாவது, எழுதப்பட்ட அரசமைப்பு என்பதும் எழுதப்படா அரசமைப்பு என்பதும் சட்டவியலில் அரசமைப்பு வகைகள் ஆகும். எழுதா அரசமைப்பு என்பது, பெருமளவில் வரலாற்று வழியில் பழக்கவழக்கங்களாகவும் மரபுகளாகவும் மானசிகமாகவும் நடைமுறையிலிருக்கும் சமூக விதிகள், வெவ்வேறு காலங்களில் நடைமுறைக்கு வந்த ஒப்பந்தங்கள் சாற்றுரைகள் சட்டவிதிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய தொகுப்பாகும். எழுதப்பட்ட அரசமைப்பு என்பது திட்டமிட்டு இயற்றப்பட்டு குறிப்பிட்ட நாளிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும் சட்டவிதிகளின் அமைப்பு ஆகும். இது தெளிவானது. ஆவணமாக இருப்பது. எழுதப்பட்ட இந்திய அரசமைப்பிற்கு மானசிக விளக்கம் கொடுப்பதெல்லாம் சுப்பிரமணியன் சுவாமிகளின் வேலை. நாம் அதைச் செய்ய வேண்டாம்.

கூட்டாட்சிக்கான இலக்கணத்தையும், கூட்டாட்சிக் கோட்பாட்டின் விளக்கங்களையும் சற்று

விரிவாகவும் உதாரணங்களுடனும் பார்த்தால்தான், இந்திய அரசமைப்பில் என்ன இருக்கிறது, என்னவாக இருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள இயலும். அரசமைப்பியல் வல்லுநர் கே.சி.வியர் கூட்டாட்சி அமைப்புக்கான இலக்கணமாகக் கூறுவது "மைய அரசும் மாநில அரசுகளும் தங்களுக்குள் ஒத்துழைப்புடனும் சுதந்திரமாகவும் இயங்கும் வகையில் அதிகாரங்களைப் பிரித்துக்கொள்ளும் ஆட்சிமுறை" என்பதாகும். கே.சி.வியர்தான் இந்திய அரசமைப்பை quasi-federal Constitution என்று முதன்முதலில் கருத்துரைத்தவரும் ஆவார். Quasi-federal Constitution என்பதன் பொருள் அரைக் கூட்டாட்சி அரசமைப்பு என்பதன்று. கூட்டாட்சிச் சாயலுடைய அரசமைப்பு என்பதே ஆகும்.

ஒரு நல்ல கூட்டாட்சி அரசமைப்பு என்பது, ஒன்றிய அரசை விட அதாவது மைய அரசை விட மாநில அரசுகளுக்குச் சாதகமானதாக அமைய வேண்டும். கூட்டாட்சி அமைப்பில் மைய அரசும், மாநில அரசுகள் ஒவ்வொன்றும் தனக்கெனத் தனியானதொரு அரசமைப்பைக் கொண்டிருக்கும். குடிமக்கள் இரட்டைக் குடியுரிமை கொண்டவர்களாக இருப்பர். அதாவது கூட்டரசின் குடியுரிமையும் தங்களது மாநில அரசின் குடியுரிமையும் பெற்றிருப்பர். மாநில அரசாங்கம் தனது குடிமக்களுக்கு முன்னுரிமை வழங்கும் அதிகாரம் கூட்டாட்சி அரசமைப்பிலேயே உறுதிசெய்யப்பட்டிருக்கும். அமெரிக்க ஐக்கிய நாடுகள்தான் இதற்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டு. சற்றொப்ப இதே வடிவில் சுவிட்சர்லாந்தும் ஆஸ்திரேலியாவும் ஒன்றுக்கும் மேற்பட்ட குடியுரிமை முறையும், அரசமைப்புடைய மாநிலங்களும் கொண்ட கூட்டாட்சி அமைப்புகளாகும். (சோசலிசக் கூட்டாட்சிக் கோட்பாட்டின் அடிப்படையில் அமைந்த சோவியத் அரசமைப்பு இதன் உயர்ந்த வகையாக இருந்தது)

இந்தியாவில் நிலைமை என்ன? இந்திய அரசமைப்பில், ஒரு மாநிலம் தனக்கெனத் தனியானதொரு அரசமைப்புடன் இயங்க அனுமதியுண்டா? இல்லை! இந்திய விடுதலைக்குப் பிறகு இந்தியாவுடன் இணைந்த ஜம்மு-காசுமீரத்தின் அரசமைப்பையும் கூட. படிப்படியாக இந்திய அரசு தனது மையப்படுத்தப்பட்ட அதிகாரத்தைப் பயன்படுத்தி விழுங்கிவிட்டது. மணிப்பூரின் அரசமைப்பைத் துடைத்தெறிந்துவிட்டுத்தான், மணிப்பூர் இந்திய ஒன்றியத்தில் இணைக்கப்பட்டது.

இந்தியாவில் இரட்டைக் குடியுரிமை உண்டா? "இந்தியா என்பது பல்வேறு தேசிய இனங்களைக்கொண்ட ஒன்றியம்" என்று நாளை ரஜினிகாந்த் கூறினாலும் வியப்பதற்கில்லை. தமிழர்களின் நீண்ட நெடிய போராட்டங்களின் விளைவாக 'இந்த உண்மை' சில

கல்லுளிமங்கன்களைத் தவிர அனைவராலும் அறிந்தேற்கப்பட்டிருக்கிறது. ஆனால், இந்திய அரசமைப்பு இந்தியாவில் உள்ள மக்களினங்களை தேசங்களாகவோ தேசிய இனங்களாகவோ கூட ஒப்புக்கொள்ளவில்லை. ஒருவர் எந்தத் தேசிய இனத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் இந்தியர் என்ற குடியுரிமையே வழங்கப்படுகிறது. இந்தியாவில் உள்ள பல்வேறு தேசிய இனங்கள், இந்தியர் என்ற ஒற்றை அடையாளத்திற்குள் கரைக்கப்பட்டு இந்திய வல்லாதிக்கம் உருப்பெறவும் வலுப்பெறவுமே இந்திய அரசமைப்பு துணைசெய்கிறது.

கூட்டாட்சி அமைப்பில் ஒரு மாநிலத்தின் எல்லையை மைய அரசால் திருத்தியமைக்க இயலாது. மாநில அரசின் அதிகாரங்களில் அதற்கு இடமில்லை. இந்தியாவில் ஒரு மாநில அரசு தனது மாநிலத் தகுநிலையையோ, தனது சட்டமன்றதையோ, தனது அரசையோ கூட காப்பாற்றிக்கொள்ள இயலாது. காசுமீரச் சிக்கலில் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இந்தியாவிலுள்ள மாநில அரசுகள், அமெரிக்கா போன்ற கூட்டாட்சி அமைப்பில் இருக்கும் மாநில அரசுகளைப் போன்ற அரசுகளல்ல. அரசுகள் என்ற மெய்யான பொருளில் இவை அரசுகளேயன்று. அதாவது, இவற்றுக்கு இறைமை (இறையாண்மை) கிடையாது. மைய அரசு மறுத்தால், தமிழ்நாடு என்ற பெயரைக் கூட தமிழக அரசால் காப்பாற்றிக்கொள்ள இயலாது. தமிழ்நாட்டுக்குத் தமிழ்நாடு என்று பெயர் சூட்டி தமிழக சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு 'மைய அரசு ஏற்பளித்ததால்தான்' தமிழ்நாடு என்ற பெயர் நடைமுறைக்கு வந்தது, தொடர்ந்துவழங்கியும்வருகிறதுஎன்பதைக் கருத்தில் கொள்க! கச்சத்தீவிற்கானாலும் கதிராமங்கலத்திற்கானாலும் தமிழக அரசு தீர்மானம் மட்டுமே நிறைவேற்ற முடியும். மைய அரசு மனது வைத்தால்தான் எதுவும் சட்டமாகும்.

மாநிலப் பட்டியலில் அதிகாரங்கள் உள்ளனவே? என்று கேட்கலாம். மாநில அரசுகளின் அதிகாரங்கள் என்று இறுதியாக எதுவும் இல்லை! மைய அரசின் அதிகாரப் பட்டியல் துறைகளிலும், மாநில அரசின் அதிகாரப் பட்டியல் துறைகளிலும், மைய மாநில அரசுகளுக்கு இடையிலான பொது அதிகாரப் பட்டியல் துறைகளிலும், இவையல்லாத எஞ்சிய அதிகாரங்களிலும் மைய அரசின் அதிகாரமே இறுதியானது ஆகும். மாநிலப் பட்டியலில் உள்ள சொற்பத் துறைகளைக் கூட மைய அரசினால் எளிமையாக கைப்பற்றிக்கொள்ள இயலும். மாநிலங்களவைக்கு அந்த அதிகாரம் உண்டு.

கல்வி நமக்கோர் அண்மைய உதாரணம். மாநிலப் பட்டியலில் இருந்த கல்வித்துறை பொதுப் பட்டியலுக்கு எளிமையாக மாற்றப்பட்டது. பொதுப்பட்டியலில் உள்ள துறையில் மைய அரசு சட்டம் இயற்றினால், மாநில அரசு இயற்றும் சட்டம் செல்லாது. எனவே நீட் தேர்வை நம்மால் சட்ட வழியில் விரட்ட முடியவில்லை. மைய அரசு ஒடுக்க வேண்டும் என்று நினைத்துவிட்டால், இத்துணைச் சிரமப்பட வேண்டியதில்லை. மாநிலப் பட்டியலிலேயே இருந்தாலும் கூட ஆளுநர் ஒப்புதலளிக்கவில்லை எனில் சட்டமன்றத்தில் இயற்றப்படுவது சட்டம் ஆகாது! மாநிலப் பட்டியலாக இருந்தாலும், இறுதி அதிகாரம் மைய அரசிற்கே என்பது நமக்குப் புரிகிறதுதானே? இதில் கூட்டாட்சி எங்கே இருக்கிறது?

கூட்டாட்சி அமைப்பு குறித்து நமது ஆசான் எங்கெல்சின் கருத்தையும் பார்த்துவிடுவோம். தனியொரு அரசிலிருந்து கூட்டரசு வேறுபடும் இரண்டு விடயங்களை எங்கெல்ஸ் இங்கே குறிப்பிடுகிறார். "முதலாவதாக, கூட்டரசைச் சேர்ந்த உறுப்பு அரசு ஒவ்வொன்றும், அதாவது மாநிலம் ஒவ்வொன்றும், அதற்குரிய குடிமை மற்றும் குற்றவியல் சட்ட அமைப்பும் நீதிமன்ற அமைப்பும் உடையதாயிருக்கும். இரண்டாவதாக, மக்களவையுடன் கூடவே, பெரியதாயினும் சிறியதாயினும் ஒவ்வொரு மாநிலமும் தனியொன்றாக வாக்களிக்கும் கூட்டரசு அவையையும் உடையதாயிருக்கும்" என்கிறார்.

இதிலுள்ள சட்ட மற்றும் நீதிமன்ற அமைப்புகள் குறித்து பின்னால் பார்ப்போம். இங்கு நாம் பார்த்துக்கொண்டிருப்பது இரண்டாவது கருத்தைத் தான். ஒரு மாநிலம் சிறியதாயினும் பெரியதாயினும் தனியொன்றாக வாக்களிக்கும் கூட்டரசு அவை பெற்றிருக்க வேண்டும் என்கிறார் எங்கெல்ஸ். அதுவே மேலவை அல்லது மாநிலங்களவை ஆகும். அதாவது, மாநிலங்களுக்கிடையில் நிலப்பரப்பின் அளவிலும், மக்கள்தொகை அளவிலும் எத்துனை வேறுபாடுகள் இருப்பினும், ஒவ்வொரு மாநிலமும் மாநிலங்களவையில் சம எண்ணிக்கையிலான பிரதிநிதிகளைப் பெற்றிருப்பதே கூட்டாட்சிக் கொள்கை ஆகும். அமெரிக்க ஐக்கிய நாடுகளில் உள்ள செனட் எனப்படும் மேலவையில், ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் சமமாக இரண்டு பிரதிநிதிகளே இடம்பெறுகின்றனர்.

இந்திய மாநிலங்களவையின் நிலை என்ன? மணிப்பூர், மேகாலயா, மிசரோம், நாகாலாந்து, திரிபுரா, அருணாசலப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் ஒவ்வொன்றும் ஒரே ஒரு பிரதிநிதியை மட்டுமே மாநிலங்களவைக்கு அனுப்ப முடிகிறது. பெரும அளவில் உத்திரப்பிரதேசத்திலிருந்து

31 பிரதிநிகள் இடம்பெறுகிறார்கள். குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படும் பிரதிநிதிகளின் எண்ணிக்கை மட்டுமே 12 பேர். மாநிலங்ளவைப் பிரதிநிதிகளே இல்லாத ஒன்றியப் பிரதேசங்களும் உண்டு. இவர்கள் சமைத்திருக்கும் அரசமைப்பில் தேசிய இனங்களுக்கிடையில் உப்புப்புளிக்கேனும் சனநாயகம் உண்டா? இதைக் கூட்டாட்சி என்று சொல்ல இயலுமா?

எங்கெல்சின் கூட்டரசுக் கருத்தில் முதற்கூறு, மாநில அரசுகள் ஒவ்வொன்றும் அதற்குரிய 'குடிமை மற்றும் குற்றவியல் சட்ட அமைப்பையும் நீதித்துறை அமைப்பையும் பெற்றிருக்கும்' என்பது. இந்திய அரசமைப்பில் இதுவும் இல்லை. இந்திய நீதித்துறை ஒரே கட்டமைப்பாகத்தான் இருக்கிறது. இந்தியா முழுமைக்கும் ஒரே குற்றவியல், குடியியல் சட்ட அமைப்புதான். இவை மட்டுமன்று. அரசமைப்பில் நெருக்கடிநிலை பிறப்பிக்க வழிவகை செய்யப்பட்டிருப்பதும், I.A.S., I.P.S போன்ற ஆட்சித்துறை அதிகாரிகளை ஒன்றியப் பொதுப் பணிக் கழகமே தேர்வு செய்வதும், இவற்றில் புதிய பணியிடங்களை உருவாக்கும் அதிகாரம் மாநிலங்களவைக்கு அளிக்கப்பட்டிருப்பதும், மைய அரசுக்கு மாநில அரசுகளைக் கலைக்கும் அதிகாரம் வழங்கும் 356ஆவது உறுப்பும், இந்திய அளவிலான தேர்தல் ஆணையம் என்பதும், குடியரசுத்தலைவர் மற்றும் ஆளுநர் பதவிகளும் கூட்டாட்சிக்கு முரணானவையே ஆகும். சாறமாகச் சொன்னால் இந்திய அரசமைப்பே கூட்டாட்சிக்கும், தேசிய இனங்களுக்கிடையிலான சனநாயகத்திற்கும் விரோதமானது ஆகும்.

பிற தேசிய இனங்களின் மீதான இந்தியத்தின் ஒடுக்குமுறையும், இந்தித் திணிப்பும், இந்தி மேலாதிக்கமும் ஆட்சியாளர்களின் எண்ணங்கள் தொடர்பானவை மட்டுமன்று. இந்திய அரசமைப்பே இத்தன்மையிலானதுதான் என்பதே உண்மை. காட்டாக, இந்தியா இந்தியை இந்தி பேசாத பிற தேசிய இனங்களின் மீது அரசமைப்பின் வழியாகவே திணிக்கிறது! ஆம், இந்திய அரசமைப்பின் 17ஆவது பகுதி இந்திதான் இந்தியா முழுமைக்கும் ஆட்சி மொழி என்கிறது! இப்பகுதியின் பிற உறுப்புகள் சகல வழிகளிலும் இந்தியைத் திணிப்பதற்கு வழிசெய்கிறது. இந்தி பேசாத பிற தேசிய இனங்களின் 'சிறும அளவிலான' 'அடிப்படை' உரிமைக்கே எதிரானது இந்த 17ஆம் பகுதி. இந்தப் பகுதியைத் திருத்துவதாலேயே இந்தி மேலாதிக்கமோ, இந்திய வல்லாதிக்கமோ ஒழிந்துவிடப்போவதில்லை என்றாலும் திருத்த முடிந்ததா? இந்த 17ஆம் பகுதியைத் தான் தி.மு.க தீயிட்டுக் கொளுத்திப் போராடியது. இந்த 17ஆம் பகுதிக்கு எதிராகத்தான் தமிழர்கள் மகத்தான மொழிப்போர் நடத்தினார்கள். இந்த 17ஆம் பகுதிக்கு

எதிராகத்தான் தமிழ் ஆசிரியர்கள், மாணவர்கள், இளைஞர்கள், சிறுவர்கள், பாட்டாளிகள் என்று 500க்கு மேற்பட்டவர்கள் தீக்குளித்தும் குண்டடிபட்டும் செத்தார்கள். ஆனால் இன்று வரை இந்த 17ஆவது பகுதியின் காற்புள்ளியோ அரைப்புள்ளியோ கூட மாற்றப்படவில்லையே!

இவ்வளவு ஏன்... சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழை வழக்காடு மொழியாக்க, பெரும்பான்மை எதுவும் தேவையில்லை. குடியரசுத் தலைவர் இசைவுடன் ஆளுநர் அதிகாரம் கொடுத்தால் போதும். தமிழன்னை மீது இந்தியப் பேய் அடித்திருக்கும் இந்த சுள்ளாணியைப் பிடுங்க முடிந்ததா? முடியவில்லையே! ஒரு தேசிய இனம் தனது சட்டமன்றத்தில் ஒருமனதாக முடிவெடுப்பதைக் கூட நடைமுறைப்படுத்த முடியாத ஒரு கட்டமைப்பைக் கூட்டாட்சி என்று கூற இயலுமா? மருந்துக்கேனும் இதில் கூட்டாட்சித் தன்மை உண்டா? சனநாயகம் உண்டா?

இந்திய அரசமைப்பு இயற்றப்பட்ட பேரவையிலேயே சனநாயப் பிரநிதித்துவம் இருந்திருக்கவில்லையே. அரசமைப்புப் பேரவையின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தவர்கள் அன்றைய மாகாணச் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆவர். இந்தச் சட்டமன்ற உறுப்பினர்கள் எப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டனர்? 1935 (பிரித்தானிய) இந்தியச் சட்டத்தின் அடிப்படையில் வரிசெலுத்தும் நிலவுடைமையாளர்கள் மட்டுமே வாக்களிக்கும் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். இஃதல்லாமல், அரசமைப்பு அவையில் இருந்த 93 பேர் சமஸ்தானங்களால் நியமிக்கப்பட்டவர்கள்!. "இந்திய மக்களாகிய நாம், ...இந்த அரசமைப்புச் சட்டத்தை இயற்றி நமக்கு நாமே வழங்கிக்கொள்கிறோம்" என்ற அரசமைப்பின் முகப்புரை வாசகத்திற்கு ஏதேனும் பொருளுண்டா? அரசமைப்பு உருவாக்கத்தில், இந்தியா என்ற கட்டமைப்பில் இணைக்கப்பட்ட மக்களினங்களின், தேசிய இனங்களின் பிரதிநித்துவம் இருந்ததா? அவர்களின் ஒப்புதல் கேட்கப்பட்டதா? இல்லையெனில், இதைக் கூட்டாட்சி என்று அழைக்க இயலுமா?.

இந்திய அரசமைப்பில் 'ஒன்றியம்' என்ற சொல்லுக்குப் பதிலாக 'கூட்டரசு' சொல்லைச் சேர்க்க முன்மொழியப்பட்ட போது அம்பேத்கர் அதை மறுத்தார். இந்தியா ஒரு கூட்டரசாக இருக்கப் போகிறது என்றாலும், அரசமைப்பில் 'கூட்டரசு' என்று குறிப்பிட இயலாது என்றார். ஏனென்றால் "இது மாநிலங்களுக்கிடையிலான ஒப்பந்தத்தின் அடிப்படையிலான கூட்டரசன்று. எனவே இந்தக் கூட்டரசிலிருந்து எந்த அரசும் பிரிந்து செல்ல முடியாது. ... இந்தக் கூட்டரசை அழிக்க முடியாது

பதிவு எண் :R.Dis. No. 1964/2014

என்பதால் ஒன்றியம் என்றழைக்கப்படுகிறது" என்றார் அம்பேத்கர்.

அதாவது, அரசுகளின் விருப்பத்தின் அடிப்படையில் கட்டப்படாத அமைப்போ, அரசுகளுக்கிடையில் அதிகாரங்கள் திட்டவட்டமாகப் பங்கிட்டுக்கொள்ளப்படாத அமைப்போ கூட்டாட்சி அமைப்பாகாது. அதே போல, அரசுகள் பிரிந்துசெல்லும் உரிமையை மறுக்கும் அமைப்பை ஒற்றையாட்சி அமைப்பென்றே துணிந்து சொல்லலாம். எனவேதான் "இந்திய அரசமைப்பு முழுக் கூட்டாட்சியுமன்று, அரைக் கூட்டாட்சியுமன்று! கூட்டாட்சிச் சாயல்கொண்ட ஒற்றையாட்சி அமைப்பு என்கிறோம்!"

இந்தியா தேசிய இனங்களின் சிறைக்கூடம் என்று தோழர் தமிழரசன் கூறியது சத்திய வார்த்தைகள் இல்லையா? இந்தச் சிறை, இந்தியச் சிறை என்றைக்காவது நம்மை விடுவிக்குமா? 'விடுவிக்காது' என்றுதானே அம்பேத்கரும் சொல்கிறார்! அது தானே நமது பட்டறிவும் கூட!

இந்திய அரசமைப்பு தேசிய இனங்களின் 'அடிமை முறி' என்று இந்தப் பொருளில் தான் கூறுகிறோம்! தமிழ்நாடு தமிழருக்கே என்பதை 'புரட்சி' முழக்கமாகத் தான் வைக்கிறோம்!

## அணு மின்சாரப் போர்வையில் அணு ஆயுதமா?

சமந்தா

அணுவாற்றல் தேவையான தீங்கு என்றும் தூய எரிபொருள் எனவும் மீண்டும், மீண்டும் வலிந்து நம் தலையில் கட்டப்படுகிறது.

பசுமையழிப்பு வெப்ப வாயுக்களை உருவாக்காததால் மட்டுமே அணுவாற்றலைத் தூய ஆற்றல் எனக் கூறுவது மிகத் தவறான சொல்லாடல். இந்தியாவின் அணு உலைகளின் ஆயுட்காலம் வெறும் 35 ஆண்டுகள்தான். ஆனால் அணுவாற்றல் உற்பத்தியில் உருவாகும் அணுக் கழிவுகளின் ஆயுட்காலமோ ஒப்பீட்டளவில் நிரந்தரமானது, அவை ஆயிரக்கணக்கான ஆண்டுகள் தொடர்ந்து கதிரியக்கத்தை உமிழ்ந்து கொண்டே இருக்கும். ஆகையால் அவற்றைப் பாதுகாப்பாக முதலில் தற்காலிகமாக 75-100 ஆண்டுகளுக்கு சேமிக்க வேண்டும் (Interim storage), பிறகு நிரந்தரமாக பூமிக்கு அடியாழத்தில் ஆழ்நிலைக் கருவூலத்தில் (Deep geological repository) புதைக்க வேண்டும். ஆயிரக்கணக்கான ஆண்டுகள் மனிதர்களுக்கு அபாயம் ஏற்படுத்தாத

வகையில் அணுக் கழிவு களைப் பாதுகாப்பது நடைமுறையில் சாத்தியமில்லாதது. அணு உலைகள் உள்ள நாடுகள் யாவும் வளர்ந்த நாடுகள். எவ்வாறு அணுக் கழிவுகளைப் பாதுகாக்கின்றன எனப் பொறுத்திருந்து பார்க்கும் கொள்கையையே கொண்டுள்ளன (wait and see policy). உலகளவில்இதுவரை ஃபின்லாந்தில் மட்டுமே உலகின் முதல் ஆழ்நிலைக் கருவூலம் 2004இலிருந்து அமைக்கப்பட்டு வருகிறது, பூமிக்கு அடியில் 450 மீ ஆழத்தில் சுற்றிலும் 70கிமீ சுரங்கப் பாதைகளையும், பலஅடுக்குப் பாதுகாப்பு அரண்களைக் கொண்ட இந்தக் கருவூலம் 100 ஆண்டுகளுக்கான அணுக் கழிவுகளை 1 லட்சம் வருடங்களுக்கு சேமிக்கும் வகையில் 27 ஆயிரம் கோடி செலவில் கட்டப்பட்டு வருகிறது. இவ்வளவு ஆடம்பரமான ஆபத்தை அவசியம் விலை கொடுத்து வாங்க வேண்டுமா? ஃபின்லாந்திலோ, மற்ற மேற்கத்திய நாடுகளிலோ மக்கள் அடர்த்தி குறைவு, அங்கே மக்கள் வசிக்காத பகுதிகளில் அணுக் கழிவு களை சேமிக்க முடியும் என வைத்துக் கொண்டாலும், மக்கள் அடர்த்தி அதிகமாக உள்ள இந்தியாவில் அணுக் கழிவு களுக்கு எங்கே இடம் இருக்கிறது?

ஒரு புறம் நெகிழிகளின் பயன்பாட்டைக் குறைக்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டே, மறுபுறம் அணு ஆற்றலையும் அணு உலைகளையும் ஆதரிப்பது முரண் இல்லையா? நெகிழிகளைக் காட்டிலும் அதிக அழிவேற்படுத்தும் அணுக் கதிரியக்கக் கழிவுகள் அபாயகரமானவை.

நம் முன்னோர்கள் சங்க இலக்கியங்களைத் தந்து நம்மைப் பெருமையடையச் செய்துள்ளார்கள். நம்முடைய வருங்காலச் சந்ததியினருக்கு நாம் என்ன விட்டுச் செல்லப் போகிறோம்? பேராபத்திற்குரிய அணுக் கழிவு களையா? அவ்வளவு பொறுப்பற்றவர்களாகத்தான் நாம் அறிமுகமாக வேண்டுமா?

சரி. இவ்வளவு ஆபத்தான தொழில்நுட்பத்தால் நாட்டின் மின்தேவையாவது கணிசமான அளவிற்கு நிவர்த்தி செய்யப்படுகிறதா என்றால் அதுவும் இல்லை.

நாட்டின் மொத்த மின் தேவையில் 3.22% மட்டுமே 6780 மெகாவாட் அணுவாற்றல் அளிக்கிறது. மற்ற மின்சார உற்பத்தி முறைகளைக் காட்டிலும் அணு மின்சாரத்தின் உற்பத்திச் செலவு குறைவா என்றால் அதுவும் இல்லை. பாதுகாப்பு வசதிகள் அதிகமாக அதிகமாக நவீன அணு உலைகளுக்கான செலவும் மிக அதிகமாகிறது. கூடங்குளம் அணு உலைகளிலிருந்து தயாரிக்கப்படும் ஓரலகு மின்சாரத்தின் விலைரூ.3.50-4.00. நவீன உலைகளில் ஒவ்வொரு மெகாவாட்டுக்கும் ரூ.15-20 கோடிஆவதால் 7ரூ-க்கு குறைவாக விற்பனைசெய்யமுடியாது.

இந்தியாவில் மின்கடத்திகளின் மின்தடையால் ஏற்படும் மின் இழப்பைத் தவிர்க்க மெல்லிழை

மின்கடத்திகளைத் தரைக்கடியில் புதைத்தாலே 30-40% மின்சாரத்தை சேமிக்க முடியும்.

அணுவாற்றல் புதுப்பிக்கக் கூடிய ஆற்றல் அல்ல. இன்று உற்பத்தி செய்யும் வீதத்தில் அணு ஆற்றலை உற்பத்தி செய்தால் இன்னும் 160 ஆண்டுகளிலே அணு ஆற்றலின் பிரதான மூலமான யுரேனிய வளம் தீர்ந்து விடும். யுரேனிய வளம் உலகிலே அதிகம் காணப்படும் ஆஸ்திரேலியாவில் ஒருஅணு உலை கூட இல்லை என்பது ஆச்சரியமளிக்கிறதா? சுவிட்சர்லாந்து 2034க்குள் எல்லா அணு உலைகளையும் மூடத் திட்டமிட்டுள்ளது. ஆனால் இந்தியாவோ 2027ல் இன்று போல் இன்னும் 117% அணுவாற்றலை அதிகப்படுத்தவே திட்டமிட்டுள்ளது.

**<u>அணு உலைகள் இல்லாத நாடுகள்:</u>**

ஆஸ்திரேலியா, ஆஸ்திரியா, பெலிஸி, கம்போடியா, கொலம்பியா, கொஸ்டாரிகா, கிரீஸ், அயர்லாந்து, இத்தாலி, லத்வியா, லிதுவெனியா, நேபாளம், நியூசிலாந்து, பெரு, லிச்டென்ஸ்டெய்ன்

அணு உலைகளை மூட இருக்கும் நாடுகள் அல்லது

அணு ஆற்றலுக்கு விடைகொடுக்க உறுதியெடுத்த நாடுகள்:

பெல்ஜியம், டென்மார்க்,ஜெர்மனி, ஜப்பான், ஸ்காட்லாந்து, ஸ்பெயின், ஸ்வீடன், சுவிட்சர்லாந்து.

**<u>குடிசார் அணுவாற்றல் ஒப்பந்தங்கள்?</u>**

இந்தியா ஆக்கவழியில் அணு ஆற்றலை ஊக்குவிப்பதாகப் பல்வேறு நாடுகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொண்டு இறக்குமதி செய்யும் அணு உலைகள் மக்களுக்கு ஆற்றலை விட அச்சுறுத்தலையே தருகின்றன. சமீபத்தில் இந்தியா அமெரிக்காவுடன் இணைந்து 6 புதிய அணு மின்நிலையங்களைக் கொண்டுவர முடிவு செய்துள்ளது.

இந்திய அரசு இதுவரை அமெரிக்கா, பிரான்ஸ், ரஷியா, கனடா, ஐக்கியமுடியரசு, வடக்கு அயர்லாந்து, ஃபிரன்ஸ், அர்ஜெண்டினா, சிறிலங்கா, கஜகஸ்தான், வடகொரியா, பங்களாதேஷ், வியட்நாம், ஜப்பான், மங்கோலியா, நமீபியா, தென்கொரியா ஆகிய நாடுகளுடன் அணுவாற்றல் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது.

2008இல் ஐக்கிய அமெரிக்க நாட்டுடன் மேற்கொண்ட ’123’-அணுவாற்றல் ஒப்பந்தத்திற்குப் பிறகு இந்தியாவிற்குப் பிற நாடுகளிடமிருந்து அணுவாற்றல் தொடர்புடைய எரிபொருள் மற்றும் தொழில்நுட்ப வணிகத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. இதனால் அணுவாயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தில் கையொப்பமிடாத போதும் அணுவாற்றல் வணிகம் செய்ய அனுமதிக்கப்படிருக்கும்

முதல் அணுவாயுத நாடாக இந்தியா அறியப்படுகிறது.

இந்தியா அணுவாற்றல் வழங்குவோர் குழுமத்தில் உறுப்பு நாடாகவும் தொடர்ந்து முயற்சி செய்து வருகிறது.

அணுவாற்றலால் நன்மை என்பதைக் காட்டிலும் தீமைகளே ஓங்கி நிற்கின்றன. புதிப்பிக்கத்தக்க மின்னாக்கத் தொழில்நுட்பங்களால் சூரியஒளி, காற்றாலை, இவை இரண்டையும் ஒருங்கிணைத்த புதிய தொழில்நுட்பம் (Solar-wind hub), கடலலை, கரிமக் கழிவுகள், எரிவாயு, எனப் பல்வேறு மின்னாக்க மூலங்கள் உள்ள போது ஏன் இந்தக் காலாவதியான ஆபத்திற்குரிய அணு மின்சாரத் தொழில்நுட்பத்தைக் கட்டிக்கொண்டு அழ வேண்டும்?.

அதற்கும் ஒரு முக்கியமான காரணம் இல்லாமல் இல்லை. இந்தியா அணுவாற்றல் திட்டங்களை அதிகமாக ஊக்குவிப்பதே அணுஆயுதத் தயாரிப்பிற்காகத்தான் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

**<u>இந்தியாவின் அணுவாயுதக் கொள்கை:</u>**

1957இல் ஜவஹர்லால் நேரு முதலில் அணுசக்தி ஆராய்ச்சி நிலையம் தொடங்கிய போது அமைதி நோக்கத்துக்காகவே அணுவாற்றல் பயன்படுத்தப்படும் என உறுதிமொழி கொடுத்தார்.

ஆனால் இந்நிலை அதிக காலம் தொடரவில்லை என்பதை அடுத்து நிகழ்ந்த அணுவாயுத சோதனைகளே மெய்ப்பித்து விட்டன. அமைதியை விரும்பும் அணிசேரா நாடாகத் தன்னைக் காட்டிக் கொண்ட இந்தியா அணுவாயுத சோதனை செய்ய வேண்டிய அவசியம் என்ன? 1971 முதல் அணுவெடி சோதனையின் போது பாதுகாப்பு நோக்கங்களுக்காகவே அணுவாற்றல் என இந்திராகாந்தி அறிவித்தார். மேலும் அணுவாயுதத் தயாரிப்பிற்காகத்தான் அணுக் கழிவு (spent fuel) மீள்பதனீட்டிற்கு (reprocessing) உட்படுத்தப்படுவதாகவும் தெரிவித்தார். இந்தியாவின் மேல் வேறு நாடுகள் இராணுவத் தாக்குதல் நடத்தாத போது அணுவாயுத சோதனையை மேற்கொண்டு அதை இந்தியாவின் பாதுகாப்பிற்காகத்தான் செய்தோம் என நியாயம் கற்பிப்பதில் ஏதாவது ஏரணம் உள்ளதா?

1974இல் ராஜஸ்தானின் பொக்கரானில் புத்தர் சிரித்தார் என அணுவெடி சோதனை செய்து மீண்டும் ஒரு முறை புத்தர் கொல்லப்பட்ட போதிலிருந்தே புத்தரின் நாடு அணுவாயுத நாடாகவே அறியப்படுகிறது. பிறகு மீண்டும் அதே பொக்கரானில் 1998இல் பாஜக ஆட்சியில் சக்தி என்ற பெயரில் அணுவாயுத சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

அணுவாயுத சோதனைகள் மேற்கொண்ட போதிலும் அணுவாயுதத் தாக்குதலை முதலில் தொடுக்கும் நாடாக இந்தியா இருக்காது. இந்தியாவின் அணுவாயுதங்கள் அச்சுறுத்தும் நோக்கம்

மட்டுமே கொண்டவை. தாக்கப்பட்டால் திருப்பித் தாக்குவது என்ற கொள்கையை இந்தியா கடைப்பிடிக்கும் என்பதே இந்தியாவின் அணுவாயுதக் கொள்கையாக இருந்தது..

அண்மைக் காலமாக, அணுவாயுதக் கொள்கையில் மாற்றம் கொண்டு வருவதற்கு பா.ஜ.க அரசு முனைப்புக் காட்டுகிறது. இதற்கான முன்னெடுப்பு மனோகர் பாரிக்கர் பாதுகாப்புத் துறை அமைச்சராக இருக்கும் போதே மேற்கொள்ளப்பட்டது. ”இந்தியாவுக்கு எதற்கு இந்த ‘முதலில் அணுவாயுதங்களைப் பயன்படுத்துவதில்லை’ என்ற கொள்கை” என்று அவர் கேள்வியெழுப்பியிருந்தார். இந்தியாவின் அணுவாயுதக் கொள்கையான " முதல் பயன்படுத்தாமைக் கொள்கையை பின்பற்றுவதில்லை" என்றும் தெரிவித்தார்.

தற்போது பாதுகாப்புத் துறை அமைச்சராக உள்ள ராஜ்நாத்சிங் அணுவாயுதத்தை முதலில் பயன்படுத்த மாட்டோம் என்ற இந்தியாவின் கொள்கையில் மாற்றம் வரலாம். எதிர்காலத்தில் சூழ்நிலைக்கு ஏற்றவாறு அணுவாயுதக் கொள்கை மாறலாம் என்று சொல்லித் தெற்காசியப் பிராந்தியத்தில் அணுவாயுதப் போருக்கான அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளார்.

இந்தியாவில் அணு**வா**யுதம்:

இந்தியா அணுவாயுத சோதனைத் தடை ஒப்பந்தத்திலோ, அணுவாயுதப் பெருக்கத்திற்கு எதிரான ஒப்பந்தத்திலோ இது வரை கையொப்பமிடவில்லை.

இந்தியா 0.54 டன்னுக்கு மேல் அணுவாயுதத்தர புளூடோனியம் வைத்துள்ளது. இது குறித்த விவரங்கள் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தில் வருவதால், நாம் வெளிப்படையாக அறிந்து கொள்ள வாய்ப்பே இல்லை.

உயர்நிலை அணுக் கழிவுகளின் மீள்பயன்பாட்டில் புளூடோனியம் பெற்று அணுவாயுதமாகப் பயன்படுத்த முடியும் என்பது மிகப்பெரும் அச்சுறுத்தலாகவே இருந்து வருகிறது

இந்தியாவில் இரண்டு அணுவாயுத உலைகள் உள்ளன.

சிரஸ் - 1963இலிருந்து 2010 வரை செயல்பட்ட இந்த அணுவாயுத உலையில் ஆண்டுதோறும் 4 - 7 கிகி புளூடோனியம் உற்பத்தி செய்யப்பட்டது.

துருவா - 1988இல் ஏற்படுத்தப்பட்ட இந்த அணுவாயுத உலையில் ஆண்டுதோறும் 11 - 18 கிகி புளூடோனியம் உற்பத்தி செய்யப்படுகிறது.

மேலும் விசாகப்பட்டினத்தில் மூன்றாம் அணுவாயுத உலை அமைக்கத் திட்டம் உள்ளது.

**அணுவாயுத நீர்மூழ்கிக் கப்பல்கள்:**

இந்தியாவிடம் ஐ.என்.எஸ். அரிஹந்த், ஐ.என்.எஸ். சக்ரா என்று இரண்டு அணுவாயுத நீர்மூழ்கிக் கப்பல்கள் உள்ளன. மேலும் அடுத்த தலைமுறை அணுவாயுத நீர்மூழ்கிக்

கப்பல்களைத் தயாரிக்க இந்திய அரசால் 1 லட்சம் கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் உலகப் போரில் - 1945இல் - அமெரிக்காவால் ஜப்பானின் ஹிரோசிமாவில் போடப்பட்ட ‘சின்னப்பையன்’ 'என்ற யுரேனிய அணுகுண்டாலும், நாகசாகியில் போடப்பட்ட ‘குண்டுமனிதன்' என்ற புளூட்டோனிய அணுகுண்டாலும் அந்த இடங்களே மயானமாயின, இரண்டு லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டனர், தப்பிப் பிழைத்தவர்கள் கடுமையான உடல்நலக் கேடுகளால் வதைபட்டனர், குழந்தைகளும் ஊனமாகவே பிறந்தன. இது போன்ற பேரழிவு இன்னொரு முறை ஏற்படாமல் தடுக்க வேண்டியது நம் ஒவ்வொருவரின் கடமை என உறுதியேற்போம்.

**அணுவுலைகள்:**

அணுவாயுதம்தான் பேரழிவு ஏற்படுத்தும், அணுவுலைகள் பாதுகாப்பானவை என்று ஒருவராலும் உத்தரவாதம் கொடுக்க முடியாது. நம்மிடமிருந்து தொலைதூரத்தில் உள்ள சூரியன் மட்டுமே பாதுகாப்பான அணுவுலையாக அறியப்படுகிறது. இது வரை உலகெங்கும் 11 பெரிய அணுவுலை விபத்துகள் நேர்ந்துள்ளன. அணுவுலை விபத்துகளைப் பற்றி அறியுமுன் அணுவுலைகளைப் பற்றிச் சுருக்கமாகப் பார்ப்போம்.

**கதிரியக்கம்:**

முதலில் கதிரியக்கத்தைப் பற்றிப் பார்ப்போம். நிறை எண் அதிகம் கொண்ட தனிமங்கள் இயற்கையிலேயே கதிரியக்கத் தனிமங்களாக உள்ளன. இத்தனிமங்களின் அணுக்கரு நிலைத்தன்மையற்று அணுக்கருப் பிளவு ஏற்பட்டு அதிக அளவு வெப்பத்தையும் கதிரியக்கத்தையும் (ஆல்ஃபா, பீட்டா, காமா கதிர்கள்) வெளியிடுகிறது. எடுத்துக்காட்டு: யுரேனியம், தோரியம், ரேடியம்.

**அணு மின்சாரம் எவ்வாறு தயாரிக்கப்படுகிறது?**

அணுக்கருப் பிளவின் போது ஏற்படும் வெப்ப ஆற்றலிலிருந்தே அணு மின்சாரம் தயாரிக்கப்படுகிறது. அணு மின்சாரம் பெருமளவில் யுரேனிய எரிகோல்களிலிருந்தே பெறப்படுகிறது.

இயல் யுரேனியம் யுரேனிய ஐசோடோப்புகளின் (யுரேனியம் 235, யுரேனியம் 238) கலவையாக உள்ளன. யுரேனியம் 235 கதிரியக்கத் தன்மை கொண்டது. யுரேனியம் 238 கதிரியக்கத் தன்மை அற்றது. அணு உலையின்தொடர்வினையின்போது, யுரேனியம் 238 ஒரு நியூட்ரானை ஏற்று புளூடோனியம் 239 ஆக மாறுகிறது. புளூடோனியம் 239ஐப் பிரித்தெடுத்து அணுவாயுதம் தயாரிக்கலாம். அணு உலையின் எரிகோல்களில் அணுக்கருப் பிளவை நியூட்ரான் மூலத்தின்




மூலம் ஊக்குவிக்கும் போது வெப்பமும் புதிய நியூட்ரான்களும் உருவாகும் அவை மீண்டும் அணுக்கருப் பிளவையும், நியூட்ரான்களையும் உருவாக்கித் தொடர்வினையாகும். இதனால் கிடைக்கும் அபரிதமான வெப்பம் நீராவியாக்கப்பட்டு மின் உற்பத்தி டர்பைன்களை இயக்கி மின்சாரத்தை உற்பத்தி செய்கிறது. அணு உலையின் வெப்பத்தையும், நியூட்ரான்களின் எண்ணிக்கையையும் தொடர்ந்து கண்காணித்துக் கட்டுக்குள் வைக்க வேண்டும். இல்லையேல் அணு உலை வெடித்து விடும். இதற்காக வெப்பத் தணிப்பான்களும் (வெப்பக்கடத்தி), நியூட்ரான் தணிப்பான்கள் (மிதவாக்கி), நியூட்ரான் அழிப்பான்களும் பயன்படுத்தப்படுகின்றன.

**<u>மூன்று கட்ட அணுவாற்றல் திட்டம்:</u>**

ஹோமிபாபாவால் இந்தியாவில் அதிகம் கிடைக்கும் தோரியத்தை ஆற்றல் மூலமாகப் பயன்படுத்த வேண்டும் என்ற இலக்கின் அடிப்படையில் மூன்று கட்ட அணுவாற்றல் திட்டம் 1950களில் உருவாக்கப்பட்டது

**<u>முதல் கட்ட அணு உலைகள்:</u>**

இந்தியாவில் பயன்பாட்டில் உள்ள எல்லா அணுமின் உலைகளும் யுரேனியத்தை எரிபொருளாகக் கொண்ட முதல் கட்ட அணு உலைகளே.

**<u>இரண்டாம் கட்ட அணு உலைகள்:</u>**

முதல்கட்ட அணு உலைக் கழிவில் கிடைக்கும் புளூடோனியத்தையும், இயல் யுரேனியத்தையும் எரிபொருளாகப் பயன்படுத்தும் வேகப் பெருக்க உலைகள்.

**<u>மூன்றாம் கட்ட அணு உலைகள்</u>**:

இரண்டாம் கட்ட அணு உலையிலிருந்து கிடைக்கும் புளூடோனியமும், தோரியமும் எரிபொருளாகப் பயன்படுத்தப்படும்.

இந்தியா மூன்று கட்ட அணுவாற்றல் திட்டத்தின் முதல் கட்டத்தில்தான் உள்ளது. இரண்டாம் கட்டத்திற்கான பரிட்சார்த்த முயற்சிகள் முழுமையாக வெற்றியடையவில்லை.

இந்தியாவில் தற்போது 7 அணுமின் நிலையங்கள், 24 அணு உலைகள் (22 அணுமின் உலைகள், 2 அணுவாயுத உலைகள்) உள்ளன. இவற்றை நான்கு வகையாகப் பிரிக்கலாம்.

**1.கொதிநீர் அணுமின் உலை (boiled water reactor)**

இவை முதல் தலைமுறையைச் சேர்ந்தவை. இவ்வகை அணு உலையே அமெரிக்காவின் உதவியுடன் தாராப்பூரில் முதலில் நிறுவப்பட்டது. இதில் எரிபொருளாக 2% செறிவூட்டப்பட்ட யுரேனிய எரிகோல்கள் பயன்படுத்தப்படுகின்றன. சாதாரண நீரே மிதவாக்கியாகவும், வெப்பக் கடத்தியாகவும் பயன்படுத்தப்படுகிறது. இதில் உலையிலே நேரடியாக நீராவி உருவாவதால் கதிரியக்கத்திற்கு உள்ளாக அதிக வாய்ப்பு உள்ளது.

**2. கனநீர் அழுத்த உலை (pressurized heavy water reactor)**

இவ்வகை அணு உலைகள் கனடாவின் உதவியுடன் ராஜஸ்தானில் உருவாக்கப்பட்டவை. இதில் எரிபொருளாக இயல்வள யுரேனிய எரிகோல்களும், மிதவாக்கியாகவும், வெப்பக் கடத்தியாகவும் கனநீரும் பயன்படுகிறது. இந்த வகை அணு உலைகளே கல்பாக்கத்தில் உள்ளன.

**3. அழுத்த மென் நீர் உலை (pressurized light water reactor)**

இவ்வகை அணு உலைகளில் மூன்றாம் தலைமுறையைச் சேர்ந்த விவிஇஆர் (vver) வகை அணு உலைகளே கூடங்குளத்தில்உள்ளன. இதில் செறிவூட்டப்பட்ட யுரேனிய எரிகோல்கள் பயன்படுத்தப்படுகின்றன. இதில் சாதாரண நீரே வெப்பக்கடத்தியாகவும், மிதவாக்கியாவும் உள்ளது. இதில் கொதிநீர் அணுமின் உலையில் உள்ளது போல் உலைக்கலனில் நேரடியாக நீராவி உருவாகாமல், அதற்குப் புறத்தே உள்ள வெப்பக் கடத்தியின் மூலம் உருவாக்கப்படுவதால் கதிரியக்கத்திற்கு உள்ளாகும் (direct contamination) வாய்ப்புக் குறைவு. வெப்பத் தணிப்பானாக அழுத்தத்திற்குட்படுத்தப்பட்ட நீரைப் பயன்படுத்துவதால் நீர் ஆவியாகாமல் தடுக்கப்படுகிறது.

**4.வேகப்பெருக்க உலைகள் (fast breeding reactors):**

இவ்வகை உலைகளில் வேக நியூட்ரான்கள் பயன்படுத்தப்படுகின்றன. நியூட்ரான் மிதவாக்கிகள் பயன்படுத்தப்படுவதில்லை. சோடியம், குளிர்ப்பானாகப் பயன்படுகிறது. சோடியம் எளிதில் தீப்பிடிக்கக் கூடியது ஆகையால் மிகுந்த எச்சரிக்கையுடன் பயன்படுத்த வேண்டும்.இவை அதிக ஆற்றல் தரும் திறன் வாய்ந்தவை. இவ்வகை வேகப்பெருக்க முன்மாதிரி உலைகள் கல்பாக்கத்தில் இரண்டும் கூடங்குளத்தில் ஒன்றும்உள்ளன. மேலும்

நான்கு புதிய வேகப்பெருக்க உலைகளை உருவாக்க அரசு திட்டமிட்டுள்ளது.

2004இல் கல்பாக்கத்தில் ஆரம்பிக்கப்பட்ட முன்மாதிரி வேகப்பெருக்க உலை இன்னும் முழுச் செயல்பாட்டிற்கு வரவில்லை. கூடங்குளத்திலும் முதல் மாதிரி வேகப் பெருக்க உலை தொழில்நுட்பப் பிரச்சனைகளால் செயல்பாட்டிற்கு வரவில்லை.

**அணுக் கழிவுகள்:**

அணு உலையிலிருந்து வெளிவரும் கழிவுகளில் புற்றுநோயை ஏற்படுத்தும் யுரேனியம், புளூடோனியம், இரத்தக் கசிவை ஏற்படுத்தும் சீசியம், எலும்பை உருக்கும் ஸ்ட்ரான்சியம், கடும் உடல்நலக் கோளாறுகளை ஏற்படுத்தும் ஆக்டினாய்டுகள் உள்ளன.

அணு உலையின் ஆயுட்காலம் 35 ஆண்டுகள்தான்

அணுக் கழிவுகளின் அரை ஆயுட்காலத்தைப் பாருங்கள்:

யுரேனியம் 235 - 704 மில்லியன்ஆண்டுகள்

யுரேனியம் 238 - 4.47 பில்லியன்ஆண்டுகள்

புளூடோனியம் 239 - 24000 ஆண்டுகள்

புளூடோனியம் 240 - 6560 ஆண்டுகள்

தோரியம்232 - 14.05 பில்லியன்ஆண்டுகள்

**தீர்ந்த எரிகோல்கள் (spent nuclear fuel):**

அணுவாற்றல் உற்பத்திக்குப் பின் எஞ்சிய எரிகோல்கள் தீர்ந்த எரிகோல்கள் (spent fuel) எனப்படுகின்றன. அவை அதிகக் கதிரியக்கமும், வெப்பமும் (8000 பாகை) கொண்ட வீரியமான உயர்நிலைக் கழிவுகள் (high level waste).

தீர்ந்த எரிகோல்கள் மூன்று நிலைகளில் சேமிக்கப்படுகின்றன.

**அணு உலைகளிலேயே சேமித்தல் (At reactor):**

தீர்ந்த எரிகோல்களை 5 - 7 ஆண்டுகள் வரை உலையிலேயே அதற்கான நீர்க் குளத்தில் ஆறப் போட வேண்டும். இந்த அமைப்பு தொடர்ந்து நீரினால் குளிரூட்டப்படும். ஓரளவு வெப்பம் தணிந்த பின்புதான் அவற்றை உலைக்கு வெளியே எடுத்துச் செல்வார்கள்.

**அணு உலைக்கு வெளியே தற்காலிகமாக சேமித்தல் (Away from reactor):**

அணு உலையில் சேமிக்கப்பட்ட தீர்ந்த எரிகோல்களைத் தற்காலிகமாக அதற்கான கட்டமைப்பில் 70 ஆண்டுகளுக்குச் சேமிக்கலாம். இதில் இருமுறைகள் உள்ளன.

**ஈரநிலைச் சேமிப்பு:**

அதிக செலவேற்படுத்தும் இம்முறையில் தீர்ந்த எரிகோல்கள் ஆழமான உலோக நீர்க்குளங்களில் சேமிக்கப்படும். இதைக் குளிரூட்ட, வெளியிலிருந்து மின்சாரம், தண்ணீர் தேவை. இம்முறையில் உலோகம் துருப்பிடிக்க அதிக வாய்ப்பு உள்ளது, இதை இடப் பெயர்ச்சி செய்ய வேண்டுமென்றால் வேறு கலனுக்கு மாற்ற வேண்டும் அதனால் கதிரியக்கம் பரவ வாய்ப்புள்ளது. மேலும் தண்ணீரின் தூய்மை, வெப்பம் ஆகியவற்றைத் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும்

**உலர்நிலைச் சேமிப்பு:**

இம்முறையில் தீர்ந்த எரிகோல்கள் உலோக பீப்பாய் அல்லது கான்கிரீட் பீப்பாயில் சேமிக்கப்படும். வெப்பச் சலன முறையில் குளிரூட்டப்படுவதால் தண்ணீரோ, மின்சாரமோ, தேவையில்லை என்பதால் துருப்பிடிக்க வாய்ப்பில்லை. பீப்பாய்களை அப்படியே இடம் பெயர்க்கலாம், வேறு கலனில் மாற்ற வேண்டியதில்லை என்பதால் கதிரியக்க அபாயம் குறைவு, இதற்கான செலவும் குறைவு.

**அணு உலைக்கு வெளியே சேமிக்கும் மையங்கள் (AFR):**

இந்தியாவில் தீர்ந்த எரிகோல்களை அணு உலைக்கு வெளியே சேமிக்கும் அணுக் கழிவு ச் சேமிப்பகங்கள் இரண்டு இடங்களில் உள்ளன. ஒன்று தாராபூரிலும், இரண்டாவது ராவத்பட்டாவிலும் உள்ளது. ராவத்பட்டாவில் இன்னொரு சேமிப்பகம் கட்டுமானப் பணியில் உள்ளது.

**ஆழ்நிலைக்கருவூலம் (Deep geological repository):**

உலகின் முதல் ஆழ்நிலைக் கருவூலம் ஃபின்லாந்தில் கட்டப்பட்டு 2020ல் செயல்பாட்டிற்கு வருகிறது. இம்முறையில் அணுக் கழிவு கள் மனிதர்களுக்கு நேரடியாக ஆபத்து ஏற்படுத்தாத வகையில் பூமிக்கு அடியாழத்தில் பல பாதுகாப்பு அரண்களுடன் நிரந்தரமாகப் புதைக்கப்படுகிறது.

**தீர்ந்த எரிகோல்களின் மீள்பதனீடு:**

இந்த முறை அதிகச் செலவை ஏற்படுத்தும். தீர்ந்த எரிகோல்களை மீள்பதனீட்டிற்கு உட்படுத்தி அதில் உள்ள புளுடோனியமும், யுரேனியமும் பிரித்தெடுக்கப்படுகிறது. இதை ஆற்றலுக்கும்

அணுவாயுதத்திற்கும் பயன்படுத்தலாம்.

இந்தியாவில் கல்பாக்கம், ட்ராம்பே,. பாபா அணு ஆய்வு மையம் ஆகிய மூன்று இடங்களில் தீர்ந்த எரிகோல் மீள்பயன்பாட்டு மையங்கள் உள்ளன.

**அணு உலை விபத்துகள்:**

**மூன்று-மைல் தீவு விபத்து**

1979இல் அமெரிக்காவில் அணு உலையின் குளிரூட்டும் சுற்றில் ஏற்பட்ட சிறிய பிழையால், வெப்பம் அதிகமாகி அணு உலை தானாகவே செயல்பாட்டை நிறுத்திய போதும், ஒரு வால்வு மூடாததை கண்காணிப்புக் கருவி காட்டாததால், முதன்மைக் குளிர்விப்பான் ஆவியாகி, உலையின் அதிக வெப்பத்தால் யுரேனிய எரிகோல்கள் உருகியதால் விபத்து நேர்ந்தது.

**செர்னோபிள் விபத்து:**

1986இல் சோவியத் ரஷ்யாவில் செர்நோபிள் அணு உலையில் மின்வெட்டு ஏற்பட்டதால் அணு உலையின் வெப்பத்தைத் தணிக்கத் தேவையான மின்சாரத்தை அதன் மின்னாக்கியிலிருந்தே பெறுவதற்கான சோதனை முயற்சியைத் தானியக்கக் கட்டுப்பாட்டை முழுவதும் நீக்கிய நிலையில் செய்ததால் நேர்ந்தது. நியூட்ரான் மிதவாக்கியாக திரள்கரியின் அதிக வெப்பம், நீரிலிருந்து வெளிவரும் ஹைட்ரஜன் தீப்பற்றி வெடிக்கக் காரணமானது. அணு உலைக்கு கான்கிரீட் அரண் இல்லாததால் கதிரியக்கம் சுற்றுவெளியெங்கும் பரவியது. இந்த விபத்தால் 4 இலட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 60,000 பேர் இறந்துள்ளனர்.

**புகுஷிமா விபத்து:**



2011இல் ஜப்பானில் 9 ரிக்டர் நிலநடுக்கத்தாலும், சுனாமித் தாக்குதலாலும் புக்குஷிமாவில் இருந்த 4 அணு உலைகளும் நிறுத்தமாகி, அபாய வெப்பத் தணிப்பு நீரின்றி மூன்று உலைகளில் யுரேனிய எரிகோல்கள் உருகின. நீராவியின் ஹைட்ரஜன் வாயுவால் வெடிப்புண்டாகி அணு உலையின் மேல்தளங்கள் நொறுங்கின. மேலும் தீர்ந்த எரிகோல்கள் சேமிக்கப்பட்ட குளத்தின் நீர்மட்டம் குறைந்ததாலும், தீயும் வெடிப்பும் நேர்ந்தன. இந்த விபத்தில் 1600 பேர் உயிரிழந்துள்ளனர்.

வெளியே அணுவாற்றல் ஆக்கத் திட்டங்களுக்காகத்தான் செயல்படுத்தப்படும் என்று

கூறினாலும் உண்மையில் அவை அழிவுத் திட்டங்களுக்கு வழிவகுப்பனவாகவே அமைகின்றன. போதி சத்துவரின் கையிலிருந்தால் மட்டும் அணுகுண்டு வெடிக்காமல் போய் விடுமா என்ன? நல்ல நோக்கங்களின் அடிப்படையில் மட்டும் திட்டங்களை செயல்படுத்தினால் நல்ல விளைவுகளே ஏற்படும் என்ற கருத்தியப் பார்வையில் சமூகத் திட்டங்களைச் செயல்படுத்துவது அறிவியலாகுமா? விளைவுகளை அடிப்படையாகக் கொண்டு நோக்கங்களை செயல்படுத்துவதே தொலைநோக்கு. அணு மின்சாரத்தின் மறுபக்கம் அணுவாயுதமாகவே அச்சுறுத்துகிறது. ஒரு பக்கம் அணு உலையாகப் பார்த்தாலும் சரி, மறு பக்கம் அணுகுண்டாகப் பார்த்தாலும் சரி, அதில் எஞ்சும் அணுக்கழிவாகப் பார்த்தாலும் சரி, எல்லாப் பக்கத்திலும் அணுவாற்றல் அழிவாற்றலாகவே அச்சுறுத்துகிறது. எட்டாத காலத்தை எட்டிப் பார்த்தாலும் சரி, கிட்டப் பார்த்தாலும் சரி, ஆக்க அணுவாற்றல் நம்கைமீறி அழிவுஅணுவாற்றலாகவே விளைகிறது . இந்த அடிப்படையில்அணுவாற்றலை நாம் புரிந்துகொண்டால்தான் பேரழிவுகளிலிருந்து நம்மை, நம் புவியை, நம் வருங்கால சந்ததிகளைப் பாதுகாக்க முடியும்.

**<u>கூடங்குளம் அணுக் கழிவு மையம்:</u>**

திருநெல்வேலி மாவட்டம் கூடங்குளத்தில் மக்களின் கடும் எதிர்ப்பையும், அறப் போராட்டங்களையும் மீறி ரஷ்யத் தொழில்நுட்பத்தில், இரண்டு அணு உலைகள் செயல்படுகின்றன. இன்னும் நான்கு அணு உலைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

அணுவாற்றல் ஒழுங்காற்று வாரியத்திடம் உரிய உரிமம் பெறுவதற்கு ஆறு மாதங்கள் முன்பாகவே கூடங்குளம் அலகு 1இன் வர்த்தகச் செயல்பாட்டைத் தொடங்குவதாக இந்திய அணுவாற்றல் நிறுவகத் தலைமையகம் டிச 31, 2014இலேயே அறிவித்துள்ளதாகத் தணிக்கையர் அறிக்கை கூறுகிறது.

கூடங்குளம் அணு உலை1,2இல் உருவாகிய அணுக் கழிவுகள் இதுவரை அணு உலைஅருகிலே சேமிக்கப்பட்டுள்ளன. தற்பொழுது அந்த அணுக் கழிவுகளை அணு உலை வளாகத்திலேயே 75 ஆண்டுகள் தற்காலிகமாக சேமிப்பதற்கான அணுக் கழிவு சேமிப்பகத்தை 538 கோடி செலவில் கட்டுவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது. ஒரு தொட்டிக்குள் அமைந்த உலோகம் பூசிய தண்ணீர்த் தொட்டியாக இதன் வடிவமைப்பு இருக்கும். இந்தத் தண்ணீர்த் தொட்டியிலேயே தீர்ந்த யுரேனிய எரிகோல்கள் சேமிக்கப்படும். அந்த வளாகத்திலேயே 0.35 ஹெக்டேர் பரப்பு நிலத்தில் இந்த சேமிப்பகத்தை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

5.4 கிமீ நீளமும், 2.5 கிமீ அகலமும் கொண்டு 13.5 ச.கிமீ மொத்தப்பரப்பு கொண்ட கூடங்குளம்

அணுமின் நிலைய வளாகத்தில் ஏற்கெனவே 6 அணு உலைகள், உப்பு நீக்க ஆலைகள், நிர்வாக அலுவலகங்கள் உள்ளன. முதல் இரண்டு அணு உலைகளுக்கும் அடுத்த இரண்டு அணு உலைகளுக்கும் இடையே 804 மீ. இடைவெளியே உள்ளது. அதேபோல் 3 - 4 உலைகளுக்கும் 5 - 6 உலைகளுக்கும் இடையே 344 மீ. இடைவெளியே உள்ளது. இந்த நெருக்கடியில் அணுக் கழிவு சேமிப்பகம் வேறு கட்ட எங்கே இடம் உள்ளது என்று அணு உலைக்கு எதிரான போராட்டக் குழுவினர் கேள்வி எழுப்பியுள்ளனர்.

முதலாவது அணு உலை 2013இல்செயல்பாட்டுக்கு வந்ததால் அடுத்த ஐந்தாண்டுகளுக்குள் (2018) தற்காலிக அணுக் கழிவு மையம் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். 2018ஆம் ஆண்டிற்குள் அணுக் கழிவு மையம் அமைக்கப்படாததற்கு காரணம் என்ன? என்று 2018 ஏப்ரல் 23ஆம் தேதி உச்சநீதிமன்றம் கேட்ட போது, மத்திய அரசின் கூடுதல் தலைமை வழக்கறிஞர் துஷார் மேத்தா கூடங்குளம் அணுமின்உலைகள் மென்நீரில் இயங்கக் கூடியவை என்பதால் தற்காலிகஅணுக் கழிவு மையத்திற்கான தொழில்நுட்பம் மிகவும் சிக்கலானது, அது இன்னும் எங்களுக்கு முழுமையாகக் கிடைக்கவில்லை என்றே கூறியிருக்கிறார் எனப் பூவுலகின் நண்பர்கள் தெரிவித்துள்ளனர்.

உச்ச நீதிமன்றம் 2022க்குள் அணுக் கழிவு கள் சேமிப்பு மையத்தைக்கட்டி முடிக்க இறுதிக் கெடு விதித்துள்ளது. கூடங்குளம் வளாகத்திற்கு உள்ளேயே, அணுக் கழிவுகள் சேமிப்பு மையம் கட்ட ஆகஸ்டு 10இல் ராதாபுரத்தில் கருத்துக் கேட்பு கூட்டம் நடக்கும் என மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் அறிவித்திருந்தது.

இத்திட்டத்தைக் கடுமையாக எதிர்த்துக் கருத்துக் கேட்புக் கூட்டத்தை மக்கள் புறக்கணித்துள்ளனர். மக்களுக்குக் கருத்துக் கேட்பு கூட்டங்களில் நம்பிக்கை இல்லை, 99% மக்கள் கூடங்குளம் அணுமின் நிலையம் அமைவதற்கு எதிர்ப்பு தெரிவித்தும் கூட, ஆளுநர் மத்திய அரசுக்கு இசைவளித்து அறிக்கை அனுப்பியதைச் சுட்டிக்காட்டி, அதனாலே அங்குள்ள மக்களில் ஒரு பிரிவினர் எல்லா அரசியல் கட்சிப் பிரதி நிதிகளும் கருத்துக் கேட்பு கூட்டங்களில் பங்கேற்று மக்களின் நிலைப்பாட்டைத் தெரிவிக்க வேண்டும் என்றும், மக்கள் கருத்து புறக்கணிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்ய ஒரு பன்னாட்டு நோக்கரும் தேவை என்றும் கோரிக்கை விடுத்ததாக அணு உலைக்கு எதிரான போராட்டக் குழுவின் தலைமை ஒருங்கிணைப்பாளர் உதயகுமார் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் மற்ற அணு உலைக் கழிவுகளையும் கூடங்குளத்தில் சேமிக்கப்படலாம் என மக்கள் அஞ்சுகிறார்கள். இத்திட்டம் திருநெல்வேலி, தூத்துக்குடி,கன்னியாகுமரி மாவட்ட

மக்களுக்கு அபாயமூட்டுவதாகவே அமையும் என்றும் முதலில் அரசு எங்கு நிரந்தரக் கழிவு மையத்தை அமைக்கவிருக்கிறது என்பதை அறிவிக்க வேண்டும் என்றும் உதயகுமார் தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்தை எதிர்ப்பதோடு, கூடங்குளத்தின் அணு உலை விரிவாக்கப் பணிகளையும் எதிர்த்து நிரந்தரமாக உலைகளை மூடத் தொடர்ந்து அங்குள்ள மக்கள் போராடுகிறார்கள்.

நிரந்தர அணுக் கழிவு மையத்தை கர்நாடக மாநிலம் கோலார் தங்கவயலில் உள்ள சுரங்கங்களில் அமைக்கலாம் என 2012ஆம் ஆண்டு தீர்மானிக்கப்பட்டது. ஆனால், அதற்கு மிகக் கடுமையான எதிர்ப்பு எழுந்த நிலையில், அங்கு நிரந்தர மையம் அமைக்கும் திட்டம் கைவிடப்பட்டது. அதன்பின் புதிய இடம் இன்னும் தேர்ந்தெடுக்கப்படவில்லை

2011இல் வெளியிடப்பட்ட கூடங்குளம் அணு உலையின் பாதுகாப்பு குறித்த அறிக்கை அணு உலை விபத்துகளில் ஏற்பட்ட இழப்புகளையெல்லாம் மறைத்தே எழுதப்பட்டுள்ளது. புற்று நோயை உருவாக்கும் பல்வேறு காரணிகளில் கதிரியக்கமும் ஒன்றுதானே தவிர அதுவே புற்றுநோய்க்கான காரணமாகாது என்றும், அணு உலை மிகவும் பாதுகாப்பானது. அணு உலைகளுக்கு அருகில் உள்ள இடங்களில் புற்று நோய்த் தாக்கம் அதிகமானதற்கான சான்றுகள் ஏதும் இல்லை என அப்பட்டமாகப் பொய் சொல்கிறது. கல்பாக்கத்தில் அணு உலை அமைக்கப்பட்டதற்குப் பின்னால் அதன் சுற்றுப்புறத்தில் கதிரியக்கம் குறைந்தது போன்ற தரவுகளைத் தருகிறது. அந்த அறிக்கையை வாசிப்பவருக்கு மற்ற இடங்களைக் காட்டிலும் அணு உலையே வசிப்பதற்குப் பாதுகாப்பான இடம் என்பது போன்ற தோற்றத்தை ஏற்படுத்தும்ன் விதத்திலே அந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் இந்திய அணுவாற்றல் திட்டம் மூடிய எரிபொருள் சுழற்சியைப் பின்பற்றுவதால் (closed fuel cycle) தீர்ந்த எரிகோல்களைக் கழிவுகளாகக் கருதாது என்றும், அவை சேமிக்கப்பட வேண்டிய சொத்துக்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் கூடங்குளத்தில் அணுக் கழிவு கள் தற்காலிகமாகவே சேமிக்கப்படும் என்றும் பிறகு மீள்பதனீட்டு மையத்திற்கு அனுப்பப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் தற்போது கூடங்குளம் அணுக் கழிவு சேமிப்பு மையத்திற்கான திட்ட அறிக்கையில் (2019) கூடங்குளத்தின் அணுக் கழிவுகள் மீள்பதனீட்டிற்கு உட்படுத்தப்படும் என்பதைப் பற்றியோ, எந்த மீள்பதனீட்டு மையத்துக்குக் கொண்டுசெல்லப்படும் என்பதைப் பற்றியோ குறிப்பிடவேயில்லை.. இது குறித்து 2011 அறிக்கையில் உள்ளதை 2019 செயல்பாட்டுத் திட்டத்தில் விரிவாக எடுத்துரைத்துத்

தெளிவுபடுத்தாமல், அதைப் பற்றி மௌனம் காப்பதன் பொருள் என்ன? அணுக் கழிவுகளைத் தற்காலிகமாகச் சேமிப்பதற்கும், மீள்பதனீட்டிற்குக் கொண்டுசெல்வதற்கும் உலர்சேமிப்பு முறையே சிறந்ததாகவும், சிக்கனமானதாகவும் பரிந்துரைக்கப்படும் போது எதற்காக ஈரநிலை சேமிப்பைத் தேர்ந்தெடுக்க வேண்டும்? என்பன போன்ற விடைதெரியா பல கேள்விகள் உள்ளன.

இந்தியாவின் அணுவாற்றல் கொள்கையின் படி கூடங்குளத்தில் உருவாகும் அணுக் கழிவுகளை மீள்பதனீடு செய்யாமல் அப்படியே நிரந்தரமாகப் புதைக்க வாய்ப்பில்லை. இந்தியாவில் கல்பாக்கம், ட்ராம்பே, பாபா அணு ஆராய்ச்சி மையம் ஆகிய மூன்று இடங்களில் உள்ள தீர்ந்த எரிகோல் மீள்பதனீட்டு மையங்களில் எங்கே கூடங்குளத்தின் அணுக் கழிவு களைக் கொண்டுசெல்லத் திட்டமிட்டுள்ளனர் என்பதையும் மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும். அணுக் கழிவுகளை உலைக்கு வெளியே ஈரநிலையில் சேமிக்கும் திட்டத்தையும், அணு உலை விரிவாக்கப் பணிகளையும் அரசு கைவிட வேண்டும். நிரந்தரமாக அணுக் கழிவுகளுக்கான ஆழ்நிலைக் கருவூலம் எங்கே அமைக்கப்படவுள்ளது என்பதையும் தெரிவித்து அப்பகுதி மக்களின் கருத்தின் அடிப்படையிலே இத்திட்டத்தின் அடுத்த கட்ட நகர்வு அமைய வேண்டும். அணு உலைக்கு எதிரான கூடங்குள மக்களின் அறப் போராட்டத்தில் நாமும் இணைந்து வலிமை சேர்ப்போம். அணுஅழிவுத் திட்டங்களுக்கு விடைகொடுத்து நம் பூவுலகைக் காப்போம்.

## நாடற்றவர்களாக முகாம்களில் உள்ள மலையகத் தமிழர்களுக்கு இந்தியக்குடியுரிமைவேண்டும்!

மு.சி.கந்தையா

சிரிமா-சாஸ்திரி உடன்படிக்கை என்பது இலங்கை மலையகத் தமிழர் வாழ்வில் மறக்க முடியாத ஒன்று. 1948ஆம் ஆண்டுமுதல் 1964ஆம் ஆண்டு வரை நாடற்ற நிலையில் இருந்த பத்துலட்சம் தமிழர்களின் குடியுரிமைப் பிரச்சனையைத் தீர்ப்பதற்காக 1964ஆம் ஆண்டு அக்டோபர் 30ஆம் நாள் இலங்கைப் பிரதமர் சிரிமாவோ பண்டாரநாயக்காவும் இந்தியப் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரியும் செய்து கொண்ட ஒப்பந்தமே அது.

இலங்கையில் 1948ஆம் ஆண்டு 'விடுதலை'க்குப் பின் முதலாவதாக நடைபெற்ற முதல் பொதுத்தேர்தலில் இந்திய வம்சாவளியினரான ஏழு உறுப்பினர்கள் மலையகத்தமிழர்களால் நாடாளுமன்றத்திற்குத் தேர்வு செய்யப்பட்டார்கள்.

காலனி ஆதிக்கத்திலிருந்து இலங்கை விடுதலை பெற்ற பின்பு, ஆட்சி அதிகாரத்திற்கு வந்த அரசு, 1948ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் குடியுரிமை தொடர்பான சட்ட மசோதாவை

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றியது. இந்திய வம்சாவளி மலையகத் தமிழர் பத்துலட்சம் பேர்களின் குடியுரிமைப் பறிப்புக்கு இந்தச் சட்டம் வழிவகுத்தது..

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கமுதல் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த கிராமங்களிருந்து இலங்கையில் உள்ள மலைப் பகுதிகளில் புதிதாக உருவாகவிருக்கும் காபிப் பயிர் உற்பத்திக்காக இலட்சகணக்கானோர் அழைத்துச் செல்லப்பட்டார்கள்.தமிழகத்தில் நிலவிய கொடும் பஞ்சத்தை காலனிய ஆட்சியாளர்கள் பயன்படுத்திக் கொண்டு,.தங்களின் அதிகாரத்தில் உள்ள காலனி நாடுகளுக்குக் கூலிகளாக இவர்களை அழைத்துச் செல்லத்தொடங்கினர். தாய்மண்ணிலிருந்து குடிபெயர நிர்ப்பந்திக்க வைத்த அவலநிலை இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம் வரையும் நடந்துள்ளதை வரலாறு பதிவு செய்துள்ளது.

தொடக்கக் காலத்தில் சென்ற பலரும் தமது தாய்மண்ணுக்குத் திரும்பவே இல்லை. அந்த மண்ணோடு மண்ணாகிப் போனதால் இவர்களின் சந்ததிகள் மலைபகுதியோடு இரண்டற மானார்கள். பெருந் தோட்ட உருவாக்கத்திற்காகவும், நெடுஞ்சாலை நிர்மாணப்பணிகளிலும் தங்களது உழைப்பையும் உயிரையும் வழங்கியவர்களின் சந்ததிகள், நூறு ஆண்டுகள் கடந்தபின், தங்களின் தேசியத்தைப்பற்றிய கேள்விகள், பேரினவாத அரசியல் களத்தில் உருவெடுத்துள்ளதை எதிர்கொண்டனர்.

1927ஆம் ஆண்டுஅமைக்கப்பட்ட டொனமூர் குழுவினர் முன்மொழிந்த சர்வசன வாக்குரிமையை இந்திய வம்சாவளியினரான மலையகத் தமிழர்களுக்கு வழங்கக் கூடாது என சிங்களத் தலைவர்கள் கடுமையாக எதிர்த்தனர். நாட்டின் பொருளாதாரத்திற்கு முகெலும்பாக உள்ள பல்லாயிரக்கணக்கான இந்திய வம்சாவளியினருக்கு வாக்களிக்கும் உரிமையை டொனமூர் குழுவழங்கியது

1880களில், பௌத்தமத மறுமலர்ச்சி இயக்கத்தின் மூலமாகத் தொடங்கிய மதவாதம், சிங்கள பெரும்பான்மைவாதத்திற்கும், ஏனைய மதச்சிறுபான்மை இனங்களுக்கெதிரான உணர்வுகளை உருவாக்கவும் காரணியானது.

1920களில் வெளிப்பட்ட சிங்களப் பெரும்பான்மை இனவாதம் ஒட்டுமொத்தத் தமிழர்களுக்கெதிரான செயல்பாட்டுத்தடத்தை வடிவமைக்க தொடங்கியது.பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்தால்விதைக்கப்பட்டுள்ள இனவாத வித்துக்களின் வேர்கள் இடையறுந்துபோகவில்லை என்பதை,1936ஆம் ஆண்டு சிங்களவர்களை மட்டும் உள்ளடக்கிய மந்திரி சபையினரின் நடவடிக்கை வெளிப்படுத்தியது.

1936ஆம் ஆண்டுக்குப் பின்பு, இனவாதம் தீவிரத்தன்மையைப் பெற்றது. தமிழர்களின்

உரிமைகளை பறிக்கும் சட்டங்கள் நாடு விடுதலையடைவதற்கு முன்பே தொடங்கிவிட்டதை, 1920 காலம் முதல் தொடர்ந்துவரும் இனரீதியிலான ஆதிக்க நிகழ்வுகள் அரசியல் களத்தில் தொடர்ந்து அரங்கேறி வந்துள்ளதைக் காணலாம்..

1956ஆம் ஆண்டு நடந்த செல்வா-பண்டாரநாயக்க உடன்படிக்கையை எதிர்த்து, பௌத்த பிக்குகள் நடத்திய போராட்டங்களும், பண்டாரநாயக்கா படுகொலையும், பௌத்த மத அமைப்புகளுக்குள் இனவாதம் உள்வாங்கப்பட்டுள்ளதன் உச்சத்தை இது வெளிப்படுத்தியது..

மலையகத் தமிழர்களின் குடியுரிமையைப் பறிப்பதற்கான சட்ட விதிகளை, அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்கிய சோல்பரி ஆணைக் குழுவினருடன் நெருக்கத்தை உருவாக்கிக் கொண்ட டி.எஸ்.சேனநாயக்கா, ”இலங்கையருக்கான குடியுரிமை சட்டத்தை இலங்கை நாடாளுமன்றம் உருவாக்கிக் கொள்ளும்” என்று, அரசியல் அமைப்பு. சட்டவிதிகளில் இடம்பெறும் வாய்ப்பை சோல்பரி ஆணைக் குழுவினருடன், ஏற்படுத்திக் கொண்டார்.

நாடாளுமன்றத்தில் மொத்தமுள்ள 90 தொகுதிகளில் 42தொகுதி களில் வெற்றி பெற்ற ஐக்கிய தேசியக்கட்சி, சுயேச்சைகளின் ஆதரவோடு அதிகாரத்தைக் கைப்பற்றியது.

குடியுரிமை மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேறியதும், குடியுரிமைப் பறிப்பு ஒட்டுமொத்தத் தமிழர்களுக்கெதிரானது என்று கூறிய தந்தை செல்வா, “இன்று மலையகத் தமிழர்களுக்கு நாளை நமக்கு” என்று எச்சரித்தார்.

சிரிமா - சாஸ்திரி உடன்படிக்கை என்பது, சம்பந்தப்பட்ட மக்களிடம் களஆய்வு நடத்தாமல் இரு நாடுகளுக்கிடையில் நிறைவேற்றப்பட்ட பண்ட மாற்று உடன்படிக்கையைப் போல் நடந்தேறியது.

இந்த உடன்படிக்கையின்படி 9,75,000 பேர்கள் நாடற்றவர்களாக இனங்காணப்பட்டனர். இதில் 5,25,000 பேர்களை இந்திய அரசு ஏற்றுக்கொள்வதென்றும், 3 லட்சத்தை இலங்கை அரசு ஏற்றுக்கொள்வதென்றும் தீர்மானிக்கப்பட்டு உடன்படிக்கை நிறைவேறியது. மிகுதியாகவுள்ள 1,50,000 பேர்களின் குடியுரிமையைப் பின்வரும் காலங்களில் தீர்மானித்துக்கொள்ள இரு அரசுகளும் இணங்கின.

1974 ஆம் ஆண்டு நடந்த இந்திரா - சிரிமா உடன்படிக்கையின் படி, 1964 ஒப்பந்தத்தில் உட்படுத்தாத 1,50,000 பேர்களை இரு நாடுகளும் 75,000 ஆயிம் வீதம் ஏற்றுக் கொள்வதென்று முடிவானது.

1966ஆம் ஆண்டு முதல்மன்னாருக்கும் இராமேஸ்வரத்துக்கும் இடையில் நடைபெற்ற கப்பல்போக்குவரத்து மூலம், தாயகம் திரும்புவோர் என்ற அடையாளப்படுத்தலுடன் .இவர்கள்

தமிழகம் வரத் தொடங்கினார்கள்..1976ஆம் ஆண்டுகளில் தொடங்கிய தனி ஈழம் கோரிய ஆயுதப் போராட்டம். 1983ஆம் ஆண்டு காலத்திற்குப் பின்பு, தீவிரமடையத் தொடங்கியது.

மலையகப்பகுதியிலிருந்து மன்னார் வரையும் தொடர்ந்த தொடர்வண்டி சேவையை 1984ஆம் ஆண்டில் அரசு நிறுத்திக் கொண்டது. அது வரை நடத்தப்பட்டு வந்த மன்னார்-இராமேஸ்வரம் கப்பல் போக்குவரத்தும் நிறுத்தப்படும்நிலை உருவானதால், . உடன்படிக்கையின்படி தாயகம் திரும்புவோரின் பயணமும் நிறுத்தப்பட்டது.

உடன்படிக்கையின்படி இந்தியாவிற்கு வரவேண்டிய ஆறு லட்சம் பேர்களில், 1984 ஆம் ஆண்டு இறுதி வரையும் 4,45,591 பேர்கள் மட்டுமே தாயகம் திரும்பி இருந்தனர் (1964முதல் 1984 வரையும் இவர்கள் மத்தியில் உருவாகியுள்ள இனப்பெருக்கத் தொகையும் இதில் அடங்கும்) என்ற புள்ளிவிவரம் உள்ளது.

இந்தியா வந்துசேர வேண்டிய 6,00,000 பேர்களில் 1,54,409 பேர்களும் இலங்கையில் தங்கிவிட்டனர்.(இனப்பெருக்கத்தை முறையாகக் கணக்கிட்டால் இந்த எண்ணிக்கை அதிகமாகும்)

1989ஆம் ஆண்டு நாடாளுமன்றதில் கொண்டுவரப்பட்ட சட்டத் திருத்தத்தின் மூலம் நாடற்றவர்களாக இருந்த அனைவரும் இலங்கையர்களுக்கான குடியுரிமையைப் பெறும் வாய்ப்பை இலங்கை அரசு உருவாக்கியது.

1977 முதல் 1983 காலப்பகுதிவரையும் தொடர்ந்து நடத்தப்பட்ட இனவன்முறையால் பாதிக்கப்பட்ட மலையகத் தமிழர்களை வடக்கு கிழக்கில் குடியேறும்படி, ஈழத் தமிழர் தலைவர்கள் கோரினார்கள். இதை ஏற்று, வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டகளப்பு போன்ற பகுதிகளில் ஆயிரக்கணக்கானோர் குடியேறினார்கள்

தொடக்கத்தில் இப்பகுதி பாதுகாப்பான நிலப்பகுதியாக தோன்றிய போதும் சில ஆண்டுகளில் இதுவும் பாதுகாப்பற்ற பகுதியாக மாறியது. இப்படிக் குடியேறியவர்களில் இந்தியக் குடியுரிமைக்கு விண்ணப்பித்தவர்களும் இந்திய கடவுச்சீட்டுப் பெற்றுள்ளவர்களும் அடங்கியிருக்கக் கூடும். குடியேறிய இடங்களில், தங்களது இருப்பைத் தொடர்ந்து தக்கவைத்து கொள்ள முடியாமல் போன பலர் தமிழகத்தை நோக்கிப் படகுகள் மூலம் வரத் தொடங்கினர். இப்படி வந்தவர்களின் எண்ணிக்கை பல ஆயிரங்களைக் கடந்தது.

1983ஆம் ஆண்டுகளில் நடந்த இனவன்முறையில் தங்களைத் தற்காத்துக்கொள்வதற்காக, இலங்கை அரசு வழங்கிய ‘அவசரகால’ கட்வுசீட்டைப் பெற்று விமான மூலமாக தமிழகத்திற்கு வந்த பலர் பல்வேறு மாவட்டங்களில் குடியேறியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாக அகதிகள் என்ற அடையாளத்தோடு தமிழக

முகாம்களிலும் வெளியிலும் இவர்கள் (மாவட்ட காவல்தலைமை நிலையங்களில் இருப்புக்கான அனுமதியை நீடித்துக்கொண்டு) வாழ்ந்து வருகிறார்கள்

ஈழத்தமிழர்களுடன் முகாமில் உள்ள இந்திய வம்சாவளி மலையகத்தமிழர்களில் சிலர் மதுரை உயர்நீதிமன்றத்திற்குச் சென்று தங்களது குடியுரிமை தொடர்பாக வழக்குத் தொடுத்துள்ளனர். நீதிமன்றமும் இவர்களின் பிரச்சனையை மனிதநேயத்தோடு அணுகும்படி அரசை கேட்டுக் கொண்டுள்ளது.

நீதிமன்றத்திற்கு இந்த வழக்கை எடுத்துச் சென்றவர்களாலும் போதிய ஆவணங்களை சேகரித்து வழங்கமுடியாமல் போனது வருந்தத்தக்கது.

சிரிமா - சாஸ்திரி உடன்படிக்கையின்படி சட்டபூர்வமாக இந்நாட்டுக்கு வந்து சேரவிருந்த பலரும் தங்களது ஆவணங்களை வன்முறையின் போது இழந்து விட்டதாகக் கூறுகின்றனர். இவர்கள் 1964ஆம் ஆண்டு உடன்படிக்கையின்படி இந்தியக் குடியுரிமைகோருவது முறையாகும். ஆனால்,முறையான ஆவணங்கள் இவர்களிடம் இல்லாத நிலையில், எப்படிக் கோருவது.?

"இலங்கை பாராளுமன்ற தொடர் இல 6. தமிழ்நாட்டில் அகதி முகாம்களில் உள்ள இந்திய வம்சாவளியினரானஆட்களுக்கு இலங்கை பிரசா உரிமை வழங்கும் பொருட்டு 2003ஆம் ஆண்டில் 35ஆம் இலக்க பிரசா உரிமை சட்டத்தை திருத்துவதற்கும் ஏனைய வசதிகளும் ஏற்பாடு செய்வதற்குமான பாராளுமன்ற தெரிவுக் குழுவை (அரசியல் கட்சிப் பிரதிநிதிகளைக் கொண்ட22 பேர்அடங்கிய குழுவை) இலங்கை நாடாளுமன்றம் கடந்த 2007 ஆகஸ்ட் 21ஆம் நாள் அமைத்தது."

இந்தக் குழுவின் அறிக்கை "இலங்கையில் பிரசா உரிமை பெற முடியாதுள்ளவர்களும் எமது நாட்டுப் பிரசா உரிமைக்காகக் கோரிக்கை விடுத்துள்ளவர்களும் தற்போது "நாடற்றவர்களாக" உள்ளவர்களுமான ஏறத்தாழ28,500 பேர்களுக்கு பிரசாவுரிமை வழங்க இயலுமாகக் கூடிய விதத்தில்" எனக் குறிப்பிடுகிறது.

"2008 பெப்ரவரி 14 அன்று உள்ளவாறு தமிழ் நாட்டிலுள்ள 117 முகாம்களில் 95,219 இலங்கை அகதிகள்வசித்து வருவதாகவும் அவர்களுள் 28,489 பேர்கள் நாடற்றவர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் சென்னைக்கான இலங்கைப் பிரதி உயர் ஸ்தானிகர், இக்குழு முன்னிலையில் தெரிவித்தார்" (பாராளுமன்றத் தொடர் இல.06 ப.8) தமிழகத்தில் உள்ள அகதிகள் முகாம்களில் உள்ள 28,489 பேர்கள் நாடற்றவர்கள் என்பதை இலங்கை நாடாளுமன்றத்தால் அமைக்கப்பட்ட பிரதிநிதிக் குழுவால் இனம் காணப்பட்டுள்ளதை அறியலாம்.

சிரிமா- சாஸ்திரி உடன்படிக்கைக்கு உட்பட்டவர்களும் தமிழக முகாம்களில் தற்பொழுது

அகதிகளாக உள்ளனர் என்பதை இந்த அறிக்கை உறுதிபடுத்தியுள்ளது. இந்த உடன்படிக்கையின்படி இந்தியக் குடியுரிமை பெற்று இந்தியா வரவேண் டிய 6,00,000 பேர்களில் 4,45,519 பேர்கள் மட்டுமே வந்துள்ள நிலையில், ஆவணங்கள் ஏதுமின்றி முகாம்களின் உள்ள இந்திய வம்சாவளி இன மலையகத் தமிழர்களின் குடியுரிமை குறித்த ஆய்வைமத்திய மாநில அரசுகள் 1964ஆம் ஆண்டு உடன்படிக்கையோடு இணைத்தே அணுகவேண்டும்.

இவர்களின் குடியுரிமை குறித்த விருப்பத்தை அறிவதன் மூலம். நாடற்றவர்களாக முகாமிலும், முகாமிற்கு வெளியிலும் உள்ளவர்களை சிரிமா-சாஸ்திரி உடன்படிக்கைக்கு உட்படுத்தி, தாயகம் திரும்பியவர்கள் என்ற அடையாளத்துக்குள் இவர்களை, நடுவண் அரசு கொண்டுவரவேண்டும். இதன் மூலம் நாடற்றவர்களாக உள்ள இவர்களுக்கும் நீதி கிடைக்கும் என்று நம்பலாம்.

# தமிழகமும் தமிழீழமும்

# கூட்டுச் சாலையில் தமிழ்த் தேசங்கள்

**செங்காட்டான்**

இந்தியத் துணைக்கண்டத்தில் தேசிய இன எழுச்சியில் காசுமீரம், வட கிழக்கு நீங்கலாகத் தமிழ்த் தேசம்தான் எப்போதுமே முன்னணியில் இருந்து வந்துள்ளது. இந்தியாவில் பிரித்தானியக் காலனியாதிக்கத்தின் போதே ஒருபுறம் முற்போக்கான இந்தியத் தேசியத்தின் உறுப்பாகவும், மறுபுறம் பிற்போக்கான இந்தியத் தேசியத்தின் மறுப்பாகவும் தமிழ்த் தேசியம் முகிழ்த்தது.

இந்தித் திணிப்புக்கு எதிரான முதல் மொழிப் போராட்டத்தின் போது தமிழ்நாடு தமிழருக்கே! என்ற முழக்கம் பிறந்தது. இதுவே தமிழ்த் தேசியத்தின் முதல் அரசியல் முழக்கம். இடைக்காலத்தில் திராவிடம் என்பது தமிழ்த் தேசியத்தின் உருத்திரிந்த வெளிப்பாடாகவே இருந்தது. தமிழ்த் தேசிய இனத்தின் தன்தீர்வுரிமை (சுய நிர்ணய உரிமை), விடுதலை என்ற குறிக்கோள்களோடு பிறந்த இயக்கங்கள் பதவி அரசியலில் சிக்கி இந்தியத்திடமோ திராவிடத்திடமோ அடைக்கலமாகிப் போயின.

1965 தமிழக மாணவர்களும் மக்களும் நடத்திய ஈகஞ்செறிந்த இந்தி எதிர்ப்புப் போராட்டம் என்பது உண்மையில் தமிழ்த் தேசிய எழுச்சியாகவே அமைந்தது. இந்த எழுச்சியலையின் விளிம்பேறித்தான் தமிழ்நாட்டின் மாநில ஆட்சியை திமுக கைப்பற்றியது. அத்தோடு தமிழ் மக்களின் தேசிய எழுச்சியும் வற்றங்கண்டது. அது மீண்டும் ஏற்றங்கண்டு எழக் காரணம் ஈழத்தின் 1983 கறுப்பு யூலைதான்.

தமிழீழத்திலிருந்து வரும் செய்திகள் எப்போதும் தமிழகத்தில் எதிரடிப்பது இயல்புதான். 1972இல் சிங்களப் பேரின மேலாட்சியத்தின் சட்ட வடிவமாகப் புதிய அரசமைப்பு இயற்றப்பட்டு சிறிலங்கக் குடியரசு அறிவிக்கப்பட்ட போது தந்தை செல்வா தமிழ்நாட்டுக்கு வந்து தந்தை பெரியாரை சந்தித்ததும் அப்போது பெரியார் "நாங்களும் அடிமையாகத்தான் இருக்கிறோம்" என்று கூறியதும் வரலாற்று வழியில் பொருள்பொதிந்த நிகழ்வுகளாகும்.

1976 வட்டுக்கோட்டை தீர்மானமும், 1977 பொதுத் தேர்தலில் தமிழீழத் தனியரசுக் குறிக்கோளுக்கு மக்கள் தந்த குடியாட்சியக் கட்டளையும் தமிழகத்தில் கூர்ந்து கவனிக்கப்பட்ட நிகழ்வுகள். தமிழ்மக்களின் அரசியல் வேணவாவுக்குச் சிங்கள அரசு ஆறாம் சட்டத்திருத்த வடிவில் தடை போட்டு அறப்போராட்ட வழிகள் அனைத்தையும் அடைத்துப் பூட்டி விட்ட போது ஆய்தப் போராட்டம் தவிர்க்க முடியாததாயிற்று. சிங்கள அரசின் அடக்குமுறை ஒருபுறம் 1983 கறுப்பு யூலையில் உச்சம் கண்டு அரசத் திகிலியமாக (அரசப் பயங்கரவாதமாக) முற்றியது என்றால், மறுபுறம் ஆய்தப் போரட்ட ஊழி முழுமையாக வந்து விட்டது என்பதை தமிழ்மக்களுக்கு உணர்த்துவதாகக் கறுப்பு யூலை அமைந்தது.

இந்தியத் துணைக் கண்டத்தில் ஒரு தேசிய இனம், அதிலும் தமிழினம் விடுதலை பெறும் வாய்ப்பை இந்தியப் பேரரசால் ஏற்க முடியவில்லை. அதேபோது தெற்காசியப் பகுதியில் ஈழச் சிக்கலைத் தன் புவிசார் அரசியலுக்குப் பயன்படுத்திக் கொள்ளும் ஆசை அதற்கு எப்போதும் இருந்தது, இப்போதும் இருக்கிறது. இன்னுங்கூட முகமையான ஒரு காரணி தமிழகத்தின் எழுச்சியையும் அதனால் விளையும் அழுத்தத்தையும் இந்திய அரசால் அலட்சியம் செய்ய முடியவில்லை. போராளிக் குழுக்களுக்குப் பயிற்சி உள்ளிட்ட உதவிகள், அதே போது உளவுத்துறை வழியாக ஊடுருவும் முயற்சிகள், எந்நிலையிலும் ஒன்றுபட்ட இலங்கை என்ற பெயரில் ஒற்றையாட்சிக்குப் பணிந்து போகும் கருத்தை வலியுறுத்துதல்... இந்தப் போக்கை இந்தியா தொடர்ந்து கடைப்பிடித்தது.

1985 திம்பு பேச்சு வாயிலாக ஒன்றுபட்ட ஒற்றையாட்சி இலங்கைக்குள் ஒரு சரணாகதித் தீர்வைத் திணிக்க முயன்று தோற்றது இந்தியா. மறுபுறம் தமிழீழ அரசியலுக்கு ஒன்றுபட்டதொரு கொள்கை அடிப்படை திம்புவிலிருந்து கிடைத்தது. தமிழீழ மக்களைத் தேசிய இனமாகவும் வடக்கு கிழக்கை அவ்வினத்தின் வரலாற்றுத் தாயகமாகவும் ஏற்றுக் கொள்ளல், அம்மக்களின் தன்தீர்வுரிமையை அறிந்தேற்றல், இலங்கைத் தீவு எங்கிலும் தமிழர்களின் உரிமைக் கோரிக்கைகளை ஏற்றல் என்ற நான்கு சிறுமக் (குறைந்தபட்ச) கோரிக்கைகள் அடிப்படைக் கொள்கைகளாக வரையறுக்கப்பட்டன. வட்டுக்கோட்டை தீர்மானம், 1977 தேர்தல்

முடிவு என்ற வரிசையில் திம்புக் கொள்கைகள் தமிழீழத்துக்கான கருத்தியல் உறுதிப்பாட்டுக்கு அளவுகோல்கள் ஆயின.

1987 இந்திய-இலங்கை ஒப்பந்தம் உட்பட ஒவ்வொரு தீர்வுப் பொதியும் போராடும் ஆற்றல்களின் கொள்கையுறுதிக்குத் தேர்வு வைத்த போது பிரபாகரன் தலைமையிலான விடுதலைப் புலிகள் மட்டுமே அந்த வரலாற்றுத் தேர்வில் வெற்றியுடன் வெளிப்போந்தனர். இந்த உண்மையைக் காலப்போக்கில் மாற்றாரும் ஏற்க வேண்டியதாயிற்று.

அமைதிப் படை என்ற பெயரில் இந்தியா ஈழ மண்ணை வன்கவர்வு செய்த போது, பொதுவாகத் தமிழக மக்கள் புலிகளிடமே பரிவு கொண்டிருந்தார்கள். இந்த ஒரு நேர்வில் மட்டுமே ஒரு போரில் இந்தியப் படை தோற்க வேண்டும் என்று தமிழக மக்கள் உண்மையிலேயே விரும்பினார்கள். இந்தியாவின் தொடர்ச்சியான பொய்ப்பரப்புரை தமிழக மக்களிடம் எடுபடவில்லை. திலீபனின் ஈடிணையற்ற ஈகம் தமிழகத்தில் கொண்ட தாக்கம் சொல்லில் அடங்காது.

இடையில் நடந்த இராசிவ் கொலை என்னும் அந்தத் துன்பியல் நிகழ்ச்சி தமிழகத்தில் தமிழீழ ஆதரவு இயக்கத்துக்கு மட்டுமின்றி, பொதுவாகத் தமிழ்த்தேசிய இயக்கத்துக்கே பெரும் பின்னடைவைத் தோற்றுவித்தது. இன்றளவும் நம் இனப் பகைவர்கள் இராசிவ் பெயரைச் சொல்லி அரசியல் செய்வது முடியவில்லை. இராசிவ் கொலைக்குப் பின் பொய்யான காரணங்களுக்காகத் தமிழீழ விடுதலைப் புலிகள் மீது விதிக்கப்பட்ட தடை (இன்றளவும்) தொடர்ந்த போதிலும் இந்தத் தடையையும் மீறித் தமிழக மக்கள் ஈழ விடுதலையையும் விடுதலைப் புலிகளையும் ஆதரித்தே வந்தார்கள். 2002 முதலான போர்நிறுத்தக் காலத்தில் தமிழகத்துக்கும் தமிழீழத்துக்குமான உறவுகள் வலுப்பெற்று நம்மையெல்லாம் உவகை கொள்ளச் செய்தன.

ஆனால் சிங்கள ஆட்சியாளர்களும் இந்திய ஆட்சியாளர்களும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும் அதன் முன்னணிப் படையாகிய விடுதலைப்புலிகளையும் நசுக்கியழிக்கத் திட்டமிட்டு அணியமாகிக் கொண்டிருந்தார்கள். 2008-09இல் இராசபட்சே நடத்திய இனவழிப்புப் போர் குறித்துச் சொல்ல வேண்டியதனைத்தும் சொல்லியாகி விட்டது. ”போரை நிறுத்து!” என்ற ஒற்றைக் கோரிக்கைக்காகத் தமிழகத்தின் அனைத்துப் பிரிவு மக்களும் கிளர்ந்தெழுந்து போராடினார்கள். வீரத்தமிழன் முத்துக்குமார் தொடங்கி 18 தமிழர்கள் தீக்குளித்து மாண்டார்கள். இந்திய அரசு அசைந்து கொடுக்கவே இல்லை என்பது மட்டுமல்ல, சிங்கள அரசுக்குப் பின்னாலிருந்து போரையே நடத்தியது. மாநில அரசு போரை நிறுத்தக் கோரும் தமிழ்மக்களின்

போராட்டங்களை அடக்கி ஒடுக்கியதோடு, அன்றைய மாநில முதல்வர் நயவஞ்சகமாக நாடகமாடி சிங்கள, இந்தியக் கொலைகாரர்களுக்கு உடந்தையாகவும் இருந்தார்.

*முள்ளிவாய்க்கால் முன்னும் பின்னும்* என்ற தலைப்பில் தமிழிலும் ஆங்கிலத்திலும் ஒரு குறுநூல் 2010இல் எழுதினேன். முள்ளிவாய்க்காலில் தமிழீழத்துக்கான வரலாற்றுத் தேவை மூழ்கிப் போய் விடவில்லை. பார்க்கப் போனால் அந்தத் தேவை பன்மடங்கு பெருகியே உள்ளது. ஆனால் அந்தத் தேவையை நிறைவு செய்வதற்கான அடிப்படை ஆற்றலாகிய தமிழீழ மக்கள் இனவழிப்பால் சிதைந்து சின்னாபின்னமாகிக் கிடக்கும் நிலையைச் சுட்டி இந்த முரண்பாட்டுக்குத் தீர்வு காண்பது குறித்து அந்நூலில் விவாதித்திருந்தேன்.

கடந்த பத்தாண்டு காலத்தில் இனவழிப்புக்கு ஈடுசெய் நீதி கோரும் போராட்டத்தில் நாம் எந்த அளவுக்கு முன்சென்றுள்ளோம்? ஐநாவோ உலக நாடுகளோ நடந்தது இனவழிப்பு என்ற உண்மையை அறிந்தேற்கவே இல்லை. தமிழக மக்களாகிய நம்மால் இந்திய அரசைக் கூட இவ்வகையில் நெருக்கியழுத்தி இனவழிப்பு என்ற உண்மையை ஏற்கச் செய்ய முடியவில்லை. இப்படிப் பார்த்தால் இது தோல்விதான். ஆனால் இன்றைய உலக ஒழுங்கில் நீதிக்கான போராட்டம் எளியதன்று. அது மலையேற்றம் போல் கடினமானது. அரும்பாடுபட்டு சில வெற்றிகளைப் பெற்றுள்ளோம். ஐநா மனிதவுரிமைப் பேரவையின் 2009, 2012 அமர்வுகளுக்குப் பின் 2013 அமர்வின் போது தமிழகம் விழித்துக் கொண்டது. பாலச்சந்திரன், இசைப்பிரியா படங்களோடு மாணவர்கள் இளைஞர்கள் தெருவிலிறங்கிப் போராடினார்கள். இந்தப் போராட்டங்கள் புலம்பெயர் தமிழர்களின் போராட்டங்களோடு சேர்ந்து தாயகத்திலும் மக்கள் போராடுவதற்கு வழியும் வெளியும் அமைத்துக் கொடுத்தன. நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் சிறிலங்காவைப் பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்தில் கூண்டிலேற்றக் கோரி நடத்திய கையொப்ப இயக்கத்தில் உலகெங்கும் 14 இலட்சம் கையொப்பங்கள் பெறப்பட்டன. தமிழகத்தில் மட்டும் பத்து இலட்சம்!

சிங்கள அரசு பொறுப்புக் கூறலுக்கோ மீளிணக்கத்துக்கோ சிறிதளவும் முன்வரவில்லை என்பதை உலகம் கண்டது. 2014இல் முகமையான ஒரு முன்னேற்றம் காண முடிந்தது. ஐநா மனிதவுரிமை உயராணையர் அலுவலகம் சிறிலங்கா குறித்துப் புலனாய்வு செய்யப் பேரவையில் தீர்மானம் இயற்றப்பட்டது. இந்தப் புலனாய்வில் விளைந்த அறிக்கை (OISL Report எனப்படுவது) தமிழர்களின் போராட்டத்தால் கிடைத்துள்ள அருமையானதொரு படைக்கலன்! நீதிக்கும் விடுதலைக்குமான படைக்கலன்!

இந்த அறிக்கைக்குப் பிறகு பன்னாட்டு அரங்கில் நடந்திருப்பவை மிகவும் அண்மைய வரலாறு

என்பதால் விரிவஞ்சித் தவிர்க்கிறேன், ஐநா மாந்தவுரிமைப் பேரவையில் சிறிலங்காவின் நிலை புதைச்சேற்றில் கால்வைத்த யானையின் நிலையைப் போன்றது. தன்னை ஒப்புக்குக் குறை சொல்வது போன்ற தீர்மானங்களைக் கூட எதிர்த்து வாக்களித்து வந்த அந்நாடு 2015 அக்டோபர் தொடங்கி தானும் மற்ற அரசுகளோடு சேர்ந்து கூட்டாகத் தீர்மானமியற்றுவது (co-sponsor) என்ற வழியைக் கையாளத் தொடங்கிற்று. இப்படித்தான் 2015 அக்டோபர் தீர்மானத்தில் ”நிலைமாற்ற நீதிப்பொறிமுறைகளில் காமன்வெல்த் உள்ளிட்ட அயல்நாட்டுப் பங்கேற்பை” ஏற்றுக் கொள்ள உறுதியளித்தது. ஆனால் அது இந்த வகையில் உருப்படியாக எதுவும் செய்யவில்லை என்பதற்கு ஒவ்வொரு முறையும் ஐநா மனிதவுரிமை உயராணையர் அளித்துள்ள அறிக்கைகளே சான்று. இப்போதைய உயராணையர் மிசேல் பசலே ஜெரியா அம்மையார் கடைசியாக இந்த ஆண்டு அளித்த அறிக்கையை மதிக்காமல்தான் உலக நாட்டாமைகளான வல்லரசுகள் சிறிலங்காவுக்கு முட்டுக் கொடுத்துள்ளன. சிறிலங்கா தானும் சேர்ந்து கூட்டாகத் தீர்மானம் கொண்டுவருவதால் அதை மதித்து நடக்கும் என்று கருதவேண்டாம். இதை ஐநா மனிதவுரிமைப் பேரவையிலேயே அந்த நாட்டின் அயலுறவு அமைச்சர் வெளிப்படையாக அறிவிக்கிறார், ஏனென்றால் பன்னாட்டுப் பங்கேற்புடனான நீதிப்பொறிமுறைக்கு சிறிலங்காவின் சட்ட அமைப்பில் இடமில்லையாம். இனவழிப்புச் செய்வதற்கும் போர்க்குற்றங்கள் புரிவதற்கும் குழந்தைகள் உள்ளிட்ட சரணடைந்தவர்களைக் காணாமலடிப்பதற்கும் பெண்களைப் பாலியல் வன்கொடுமை செய்வதற்கும் அந்தச் சட்ட அமைப்பில் இடமுண்டா என்று கேட்க அந்தப் பேரவையில் ஒரு நாதியில்லை.

இனவழிப்புச் செய்தும் போர்க்குற்றங்கள் புரிந்தும் நிலம்பறித்தும் போர்க்கைதிகளை சிறையிலடைத்தும் பிடிபட்டவர்களையும் சரணடைந்தவர்களையும் காணாமலடித்தும் படைகளைக் குவித்து வைத்தும் சிங்கள அரசு சாதித்தது என்ன? தமிழ் மக்கள் போராட்டத்தை ஒடுக்க அதனால் முடிந்ததா? இல்லை. இல்லவே இல்லை. தமிழ்த் தலைமைகளை வேண்டுமானால் தன்னக்கட்டலாம், தமிழ் மக்களைத் தன்னக்கட்ட முடியாது என்பதை ஒவ்வொரு நாளும் பார்த்து வருகிறோம். தாயகமாகவும் புலம்பெயர் தமிழுலகமாகவும் பிரிந்து கிடக்கும் தமிழீழத் தேசம் விடாமல் போராடி வருகிறது. புதிய சூழலுக்கேற்ற புதிய குடியாட்சிய (ஜனநாயக) அமைப்பு வடிவங்களை அது வார்த்துக் கொண்டுள்ளது. தமிழகம் தக்க புரிதலோடு இந்தப் போராட்ட முயற்சிகளில் தோழமை கொண்டு நிற்கிறது.

சிறிலங்காவை பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்தில் கூண்டிலேற்றும் கோரிக்கை அடைய முடியாத இலக்கன்று. ஐநாவின் கையிலிருக்கும் சான்றுகள் உலகம் தன் மடியில் கட்டி

வைத்திருக்கும் குண்டுகளைப் போன்றவை. அடிமேல் அடிகொடுத்துப் போராடும் உறுதியும் தெளிவும் நமக்கிருந்தால் போதும் நீதிக்கான போராட்டம் வெற்றி நோக்கி முன்னேறும்.

போராட்டங்களை இல்லாமற்செய்ய முடியவில்லை என்பது சிங்கள அரசின் முதல் தோல்வி என்றால், ஏற்புடைய அரசியல் தீர்வு எதையும் முன்வைக்க முடியவில்லை என்பது இரண்டாம் தோல்வியாகும். இருபெரும் சிங்களக் கட்சிகள் கூட்டுச் சேர்ந்து தேசிய அரசாங்கம் அமைத்து விட்டதால் அரசியல் தீர்வு இதோ தொட்டு விடும் தூரம்தான் என்று வித்தை காட்டியவர்கள் ஏமாந்தே போனார்கள். புதிய அரசமைப்புவழி 'சமஷ்டி'த் தீர்வு என்பதெல்லாம் பகற்கனவாகவே கரைந்து போய் விட்டது. சிங்கத்தின் வாலை நிமிர்த்த முடியாது என்று மீண்டும் மெய்ப்பிக்கப்பட்டு விட்டது. ஈழம் தவிர எல்லாம் தருவதாகச் சொன்னவர் இரணசிங்க பிரேமதாசா. அவராலும் சரி, எந்த சிங்களத் தலைவராலும் தமிழ்மக்கள் ஏற்கும் படியான எந்தத் தீர்வும் தர முடியவில்லை. தாயகம், தேசியம், தன்னாட்சி என்ற முப்பெரும் தூண்களை விடுத்து வேறு ஏதேதோ 'நான்கு தூண்' கொள்கை பேசியவர்கள் காணாமல் போய் விட்டார்கள்.

இப்போது இந்தியாவின் தயவில் தீர்வு விரைவில் என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆசை காட்டுகிறார். எது தீர்வு என்பதை அவர் முதலில் தெளிவுபடுத்தட்டும். அதை இந்தியா எப்படி எங்கே வாங்கிக் கொடுக்கும் என்பதையும் விளக்கிச் சொல்லட்டும். அரசதந்திரம் என்பதன் பொருள் வல்லரசுகளைக் காக்காய் பிடிப்பதன்று. இலங்கை இந்தியப் பெருங்கடலின் நடுவில் உள்ளதென்றால் தமிழீழமும் தமிழகமும் கூட அதே இடத்தில்தான் உள்ளன. தெற்காசியாவில் எவரின் ஞாயமான புவிசார் அரசியல் நலனுக்கும் தமிழீழத்தால் கேடில்லை என்கிறோம். பொறுப்புக்கூறலும் நீதியும் சார்ந்த மீளிணக்கத்துக்குத் தமிழ்மக்கள் எதிரானவர்கள் அல்ல. இனவழிப்பின் வழியிலன்று, இனவழிப்புக்கு நீதி கிடைக்கச் செய்வதன் வழியில்தான் உண்மையான மீளிணக்கமும் அமைதியும் வயப்படும்.

தமிழீழத்துக்கு மாற்று என்று எதையும் முன்னிறுத்துவதில் சிங்களத் தலைமை தோற்று விட்ட நிலையில் தமிழ்த்தேசிய இனம் தன் வாழ்வைத்தானே தீர்வு செய்து கொள்ளும் தன்தீர்வுரிமையைப் பயன்படுத்தி ஒரு பொதுவாக்கெடுப்பின் ஊடாகத் தனக்கு வேண்டிய அரசியல் தீர்வை தானே அடைந்து கொள்ளப் பன்னாட்டுலகம் வழிசெய்ய வேண்டும். இந்தக் கோரிக்கைக்கான போராட்டத்தை பாக்கு நீரிணையின் இரு புறமும் மட்டுமன்று, தமிழர் வாழும் புவிப் பரப்பெங்கும் முன்னெடுப்போம்.

தமிழீழம் மட்டுமன்று, உலகெங்கும் அரசுகளற்ற தேசங்கள் இறைமை மீட்புக்காகப் போராடி வருகின்றன. இந்தியாவில் தமிழகமும் அந்த வரிசையில்தான் வருகிறது. ஆற்றுநீர் உரிமை,

காற்றுத் தூய்மைக்கான உரிமை, கல்வியுரிமை, சமூக நீதியுரிமை, மொழியுரிமை, பண்பாட்டுரிமை … ஒவ்வொன்றுக்காகவும் ஒவ்வொரு நாளும் தமிழக மக்கள் போராடிக் கொண்டிருக்கின்றார்கள். தமிழீழம் பற்றி நாங்கள் தெரிந்து வைத்திருப்பது போல் தமிழகம் பற்றி நீங்கள் தெரிந்து வைத்துள்ளீர்களா? என்று ஈழத்தமிழர் ஒவ்வொருவரிடமும் கேட்பேன். தமிழகம் என்பது வெறும் திரையுலகம் அன்று, தமிழகம் என்பது வானத்தையே வில்லாக வளைக்கும் சொல்வித்தைக்காரர்களின் தேர்தல் அரசியல் களம் மட்டுமன்று. கூடங்குளமும் நெடுவாசலும் கதிராமங்கலமும் தூத்துக்குடியும் தமிழகத்தில்தான் உள்ளன. நாங்கள் கோப்பப்பிலவு போராட்டம் பற்றி அறிவோம். நீங்கள் கூடங்குளம் போராட்டம் பற்றி அறிவீர்களா?

தமிழீழமும் தமிழகமும் ஒரே தமிழ்க்கொடியில் பூத்த இரு மலர்கள். இரண்டுமே கனல் மணக்கும் பூக்கள். இந்த நூற்றாண்டின் முதல் இனவழிப்புக்கு நம் தமிழினம் முகங்கொடுத்துள்ளது, இனியோர் இனவழிப்பு இப்புவியில் நிகழக்கூடாது என்பதை உறுதிசெய்யும் பெருங்கடன் பட்டு நிற்கிறோம். இவ்வகையில் புவியுலகிற்கே புதுவழி காட்ட நம்மிரு தேசங்களுக்கும் வாய்த்துள்ளது. நமது தோழமை என்பது பூங்காவில் காற்று வாங்கும் தோழமையன்று, போராட்டப் புயல் வீச்சில் கைகோத்துச் செல்லும் தோழமை. நாம் ஒரு கூட்டுச்சாலையில் நிற்கிறோம். இங்கே நம்முன் இருவழிகள்: நீதிக்கும் விடுமைக்குமான போராட்டம் ஒரு வழி. ஆண்டைகளிடம் அடைக்கலமாகி இடுகாட்டின் அமைதியைத் தழுவிக் கொள்வது மறுவழி. என்ன செய்யப் போகிறோம்?

## தோழர் பெ. மணியரசனுக்கு மறுமொழி

### இது வரை சுருக்கமாக…

**தியாகு**

**தேசியம் என்றால் என்ன? தமிழ்த் தேசியம் என்றால் என்ன?**

தேசியம் என்பதன் அடிப்பொருளைத் தோழர் பெ.ம. கருத்தில் கொள்ளவில்லை. தேச விடுதலை அல்லது இறையாண்மை கோருவதைத் தேசியத்தின் இன்றியமையாக் கூறாக அவர் வரையறுக்கிறார். தேசியம் எனபதன் அடிப்பொருள் நாம் என்கிற மனநிலையைக் குறிக்கும்; அது வளர்ந்து சென்று தேசிய விடுதலை என்னும் அரசியல் குறிக்கோளை வரித்துக் கொள்ளும் போது முழுமையடைந்து தேசியம் என்னும் அரசியல் கருத்தியலாக மலர்கிறது.

**தேசியம்: கலைக்களஞ்சியங்களும் பேரகராதிகளும் வகுத்தளிக்கும் இலக்கணம்**

தேசியம் என்பதை ஒற்றைப் பொருளுடையதாகப் பார்க்கிறார். நான் குறைந்தது இரட்டைப் பொருளுடையதாகப் பார்க்கிறேன். விக்கிபீடியா கலைக்களஞ்சியம், மரியம் வெப்ஸ்டர் அகரமுதலி, கொலம்பியா எலக்ட்ரானிக் கலைக் களஞ்சியம், ஸ்தான்ஃபோர்டு மெய்யியல் கலைக்களஞ்சியம், தி ஃபிரீ டிக்சனரி கலைக்களஞ்சியம், சோவியத்துப் பெருங்கலைக்களஞ்சியம் ஆகியவை தேசியம் என்ற சொல்லுக்குத் தரும் இலக்கண விளக்கங்கள் என் கருத்துக்கு ஆதரவாக உள்ளன.

**தேசிய இனச் சிக்கலில் ஸ்டாலின் செய்த கோட்பாட்டுப் பங்களிப்பு**

தேசம் என்பதற்குரிய இலக்கண வரையறை தொடர்பாக ஸ்டாலின் கூறுவதை பெ.ம. ஏற்றுக் கொள்கிறார் ,நானும் ஏற்றுக் கொள்கிறேன். இதை அப்படியே நீட்டி ,தேசத்திலிருந்து தேசியத்தை வரவழைத்து ,அதற்கும் ஸ்டாலினை சாட்சியாக்குவதுதான் சிக்கல். ஏனென்றால் தேசியம் என்பதற்கு பெ.ம. சொல்வது போன்ற வரையறையை ஸ்டாலின் ஒருபோதும் சொன்னதில்லை. பொதுப்பண்பாட்டில் விளையும் உளத்தியல் அமைவைத்தான் ஸ்டாலின் தேசியத் தன்மை என்கிறார். தேசம் இல்லாத தேசியம் இருக்கலாம். ஆனால் தேசியம் இல்லாத தேசம் இருக்க முடியாது.

**ஆய்வின் பெயரால் அவதூறு**

**”சமூக வளர்ச்சி வரலாற்றில் மொழி, தேசிய இன உருவாக்கம், தேச உருவாக்கம் ஆகியவை வகித்த குறிப்பிடத்தக்க பாத்திரத்தை மார்க்சியம் உரியவாறு கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை” என்று பெம சொல்வதை நான் மறுக்கிறேன்.** தேச விடுதலைப் போராட்டம், தேசியத் தன்னுரிமை, (Self-Determination) ஆகியவற்றை எந்தெந்தக் கட்டத்தில் ஆதரிக்கலாம், எந்தெந்தக் கட்டங்களில் ஆதரிக்கக் கூடாது என்று இலெனின் சொன்னார்” என்று பெ.ம. சொல்வதற்குச் சான்று ஏதுமில்லை. இது அவதூறு என்கிறேன். மொழியும் மொழிவழித் தேசியமும் சமூக வளர்ச்சி வரலாற்றில் வகித்த பங்கினை மார்க்சியம் உரியவாறு கணக்கில் கொண்டது என்பதே உண்மை. தோழர் மணியரசன் ஆய்வு என்ற பெயரில் அவதூறு செய்கிறார்.

**இந்தியத் தேசியம் பொய்யா?**

இந்தியா சமூக அறிவியல்படி ஒரு தேசமாகாது என்று பெ.ம. சொல்வது சரியானது. ஆனால் இதையே இந்தியத் தேசியம் பொய் என்பதற்கான சான்றாக அவர் முன்வைப்பதில்தான் சிக்கலே உள்ளது. தேசத்துக்கும் தேசியத்துக்குமான இயங்கியல் உறவை அவர் கணக்கில் கொள்ளவே இல்லை. தமிழ்த் தேசியமே தமிழ்த் தேசத்துக்கு முற்பட்டதுதான். தேசமல்லாத தேசியத்துக்கு

தென் ஆப்பிரிக்கத் தேசியம் ஓர் எடுத்துக்காட்டு. அரபுத் தேசியம், சிங்களத் தேசியம், தமிழீழத் தேசியம் எல்லாமே தேசத்துக்கு முற்பட்ட தேசியங்கள்தாம். இந்தியத் தேசியம் வரலாற்று வழியில் பிற்போக்கானது என்றும் அது பொய்த் தேசியம் என்றும் பெ.ம. சொல்வது தன்முரண்பாடாகும். இந்தியத் தேசியத்தில் முற்போக்கும் உண்டு பிற்போக்கும் உண்டு. சுதந்திரப் போராட்டக் காலத்தில் தமிழ் மக்களிடம் இந்தியத் தேசியம், தமிழ்த் தேசியம் ஆகிய இரு போக்குகளும் காணப்பட்டன.

(சோவியத் தேசியம் என்ற ஒன்று வரலாற்றில் இருந்ததுண்டா? எதிர்வகைத் தேசியம் என்ற ஒன்று இருக்க முடியுமா? தோழர் பெ.ம. கேட்கிறார். அடுத்த பகுதியில் மறுமொழி. ஆறாம் பகுதி அடுத்த இதழில் - தியாகு)

## பூகம்பமாக ஐட்ரோகார்பன் திட்டம்

சமந்தா



ஒரு நாட்டின் இயற்கை வளங்கள் அந்நாட்டு மக்களுக்கே சொந்தம். மக்களின் வாழ்விற்கு பாதிப்பு ஏற்படுத்தாமல் சுற்றுச்சூழலையும் தாக்காத வண்ணம் அவ்வளங்களை முறையாக வரம்போடு பயன்படுத்த வேண்டியது ஒரு மக்கள்நல அரசின் கடமை. இந்திய ஒன்றியமோ மக்களை வெளியேற்றி, மக்களின் வளங்களைப் பெருமுதலாளிகள் வரம்பின்றிக் கொள்ளையடிக்க ஏதுவான மக்கள்விரோதத் திட்டங்களையே மக்கள்நலத் திட்டங்களாகக் கண்கவர் வண்ணங்களில் விளம்பரப்படுத்தி அரங்கேற்றுகிறது. அதன் பெரும் நீட்சியாகவே வந்துள்ள ஐட்ரோகார்பன் திட்டம் நம்மை அச்சுறுத்துகிறது.

உலக அளவில் இந்தியா கச்சா எண்ணெய், பெட்ரோலியப் பொருட்களை அதிகம் நுகரும் மூன்றாவது நாடாக உள்ளது. எண்ணெய் மற்றும் எரிவாயுவிலிருந்தே 34.4% எரிபொருள் கிடைக்கிறது. .கச்சா எண்ணெய் இறக்குமதி 2015-16இல் 78.5%இலிருந்து 81%ஆக உயர்ந்த நிலையில்,இந்தியாவின் மரபுசார் எரிபொருட்களின் உற்பத்தி குறைந்துள்ள நிலையில் 2022க்குள் 10% கச்சா எண்ணெய் இறக்குமதியைக் குறைக்கும் நோக்கத்துடன் இதுவரை நடைமுறையிலிருந்த புதிய துரப்பண உரிமத் திட்டத்திற்கு (NELP) பதிலாக ஐட்ரோ கார்பன் துரப்பண உரிமத் திட்டம் (HELP) மார்ச் 2016இல் அனுமதிக்கப்பட்டுள்ளதாக அரசு தரப்பில்

கூறப்படுகிறது.

இந்தியாவின் மொத்தப் படிமப் பரப்பு 3.14 மில்லியன் சதுர கிமீ.

ஐட்ரோ கார்பன் என்பது ஹைட்ரஜன், கார்பன் கொண்ட கரிமச் சேர்மங்கள் அனைத்துக்குமான பொதுப் பெயர். மீத்தேன்,-சமையல் எரிவாயு, நிலக்கரி, களிமப் பாறை வாயு, கச்சா எண்ணெய் அனைத்துமே ஐட்ரோ கார்பன்கள் என்றே அழைக்கப்படுகின்றன.

**மரபுசார் எரிபொருட்கள்**: கச்சா எண்ணெய், நிலக்கரி, இயற்கை எரிவாயு போன்ற --- இதுவரை பெருமளவில் பயன்பாட்டிலுள்ள எரிபொருட்கள்.

**மரபுசாரா எரிபொருட்கள்:** களிமப் பாறை வாயு (Shale gas), களிமப் பாறை எண்ணெய், வாயு நீர்மம், இறுகிய வாயு போன்ற --- அண்மைக் காலமாய் எரிபொருளாகப் பயன்படுத்தப்பட்டு வரும் எரிபொருட்கள்.

**துரப்பணத் திட்டங்கள்:** இந்தியாவில் 1970கள் வரை எண்ணெய் எரிவாயு துரப்பணப் பணிகளுக்கான உரிமங்கள் தேசிய எண்ணெய் நிறுவனங்களான எண்ணெய் இயற்கை எரிவாயு நிறுவனம் (ONGC) மற்றும் இந்திய எண்ணெய் (OIL) அமர்த்தமுறை அடிப்படையில் வழங்கப்பட்டது.

இதனால் இந்தக் காலகட்டம் அமர்த்தமுறைக் காலம் என அழைக்கப்படுகிறது.

1980-1997 காலத்தில் ஐட்ரோகார்பன் வளங்களைக் கண்டறிவதற்காக 28 ஆய்வு மண்டலங்கள் தனியார்நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டன, ஐட்ரோகார்பன் கண்டறியப்பட்ட பின் அந்த மண்டலங்களில் இணைந்து செயல்பட ஓ.என்.ஜி.சி. மற்றும் ஆயில் நிறுவனங்கள்உரிமம் பெற்றிருந்தன. இதில் 5 பொதுத்துறை நிறுவனங்கள், 15 தனியார் நிறுவனங்கள், 15 வெளிநாட்டு நிறுவனங்கள் என மொத்தம் 35 நிறுவனங்கள் ஈடுபட்டன.

1991பொருளாதாரச் சீர்திருத்தத்திற்குப் பிறகு நவீன தாராளமயத்தின் அடிப்படையில் எண்ணெய், எரிவாயு துரப்பணப் பணிகளைத் தனியாரிடம் தாரை வார்க்கவும், அந்நிய முதலீட்டை ஈர்க்கவும் 1997ல் புதியதுரப்பண உரிமத் திட்டம் கொண்டுவரப்பட்டது (HELP). 1999இல் செயல்படுத்தப்பட்ட இத்திட்டத்தில் மத்திய ஐட்ரோகார்பன் இயக்குநரகம் எண்ணெய் வயல்களை அடையாளம் செய்து, அதை அரசு அல்லது தனியார் நிறுவனங்களுக்கு ஏலம் விட்டது. 9 ஏலச்சுற்றுகளில் 254 துரப்பண மண்டலங்களுக்கு ஒப்பந்தங்கள் அளிக்கப்பட்டன. இதில் ரிலையன்ஸ், எஸ்ஸார், ஜுபிலண்ட் போன்ற 58 தனியார் நிறுவனங்களும், 48 வெளிநட்டு நிறுவனங்கள், 11 பொதுத்துறை

நிறுவனங்கள் என 117 நிறுவனங்கள் பங்கேற்றன.

புதிய துரப்பண உரிமத் திட்டத்தில் கச்சா எண்ணெய், இயற்கை எரிவாயு, நிலக்கரிப் படுகை மீத்தேன், களிமப்பாறை வாயு,களிமப்பாறை எண்ணெய் என ஒவ்வொரு வகை ஐட்ரோகார்பன் எடுக்கவும் தனித்தனி உரிமம் பெற வேண்டும்

அமர்த்தமுறைக் காலத்தின் 28 மண்டலங்கள், புதிய துரப்பண உரிமத் திட்டத்தின் 254 மண்டலங்கள், கண்டறிந்த வயல்கள் என மொத்தமுள்ள 311 மண்டலங்களில் தற்போது 178 மண்டலங்கள் மட்டுமே செயல்பாட்டில் உள்ளன. புதிய துரப்பண உரிமத் திட்டத்தில் உற்பத்தி பகிர்வும் அடிப்படையில் நிறுவனங்கள் துரப்பணப் பணிகளை மேற்கொண்டன. இதன்படி தனியார் நிறுவனங்கள் தங்கள் உற்பத்தி மூலதனத்தை முழுவதும் ஈட்டிய பிறகே அரசுடன் வருவாய் பகிரப்பட்டது. இதில் தனியார் நிறுவனங்களின் முறைகேடுகளினாலும் உற்பத்தி மூலதனத்தைஊதிப்பெருக்கிக் காட்டி அதிக லாபம் பெற்றதாலும் அரசுக்குப் பெரும் வருவாய் இழப்பு ஏற்பட்டது. அந்நிய முதலீடும் அரசு எதிர்பார்த்த அளவிற்கு கிடைக்கவில்லை.

இந்நிலையில் நாட்டின் படிம வளங்களை தனியார் மற்றும் அந்நிய நிறுவனங்கள் விருப்பம் போல் கொள்ளையடிக்கவும், விரும்பிய விலையில் விற்கவும், சந்தைபடுத்தி லாபம் பெறவும் ஏதுவாக விதிகளை மேலும் எளிமையாக்கி தளர்த்தி அந்நிய முதலீடுகளை அதிகம் ஈர்ப்பதற்காக கொண்டுவரப்பட்ட ஐட்ரோகார்பன் துரப்பண உரிமத் திட்டத்திற்கு மார்ச் 2016இல் அனுமதியளிக்கப்பட்டது, அரசால் கண்டறியப்பட்ட மண்டலங்களை, வருவாய் பங்கீடு அடிப்படையில் தனியாரிடம் விற்கும் திறந்த வெளி உரிமத் திட்டம் 2017 ஜூனில் கொண்டுவரப்பட்டது.

ஐட்ரோகார்பன் துரப்பண உரிமத் திட்டத்தில் மரபுசார், மரபுசாரா எரிபொருட்கள் என பூமிக்கடியில் உள்ள கச்சா எண்ணெய், இயற்கை எரிவாயு, நிலக்கரிப் படுகை மீத்தேன், களிமப்பாறை எண்ணெய், களிமப்பாறை வாயு, வாயு நீர்மங்கள் என எல்லா வகை ஐட்ரோகார்பன்களை எடுப்பதற்கும், தயாரிப்பதற்கும் ஒற்றை உரிமம்.பெற்றாலே போதும்.

நிறுவனங்கள் நாட்டின் எரிபொருள் வளங்கள் குறித்த இருபரிமாண, முப்பரிமாண வரைபடங்கள் கொண்ட தேசிய தகவல் தொகுப்பகத்தை (National Data Repository), முழுமையாகப்

பயன்படுத்திக் கொண்டு விரும்பிய இடங்களைத் தேர்ந்தெடுத்து அரசிடம் உரிமம் பெறுவதற்கு விருப்பத்தை தெரிவிக்க வேண்டும் (EOI), பிறகு அது ஏலத்திற்கு விடப்படும், எந்த நிறுவனம் அதிகப் பங்கை அரசுக்கு அளிக்கிறதோ அந்த நிறுவனத்திற்கு உரிமம் வழங்கப்படும்..

**துரப்பணத் திட்டங்களால் சீரழியும் தமிழகம்:**

நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் என தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் எண்ணெய் உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சுற்றுச்சூழல் விதிமுறைகளை ஓ.என்.ஜி.சி சரியாகக் கடைபிடிப்பதில்லை.தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியமும் அதை சரியாக அமுல்படுத்தவில்லை. ஓ.என்.ஜி.சி நிறுவனத்தின் எண்ணெய் கிணறுகள் சரியாகப் பராமரிக்கப்படாமல் நிலத்திற்கு அடியில் புதைக்கப்பட்ட குழாய்களிலிருந்து எண்ணெய் கசிந்து வயல் வெளிகளையும் பாசனக் கால்வாய்களையும், நிலத்தடி நீரையும் பல முறை சேதப்படுத்தியுள்ளது. இந்த நிலங்களைமறு சீரமைக்க முடியவில்லை, பல முறை முறையீடு செய்தும் மிகக் குறைந்த இழப்பீட்டுத் தொகையே கிடைத்தது. விளைநிலங்கள், நீராதாரம் அனைத்தும் பாழாக்கப்பட்ட நிலையில் எரிவாயு கசிவு, தீப்பற்றும் அபாயம் என மக்கள் கடும் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் வாழ்கின்றனர்

.

**நெடுவாசல்:**

2015 ஃபிப்ரவரியில் அரசு சிறு கண்டறிந்த வயல் உட்பட எல்லா ஐட்ரோகார்பன் திட்டங்களுக்கும் அனுமதி வழங்கியது. சிறு கண்டறிந்த வயல்களுக்கான ஏலத்தில் தமிழ்நாட்டின் நெடுவாசல் (10 ச.கிமீ), புதுச்சேரியின் காரைக்கால் (10.4 ச.கிமீ) உட்பட 31 இடங்களுக்கான ஒப்பந்தங்கள் 22 நிறுவனங்களுக்கு (15 புதிய நிறுவனங்கள்) வழங்கப்பட்டது. நெடுவாசல் திட்டத்திற்கான சூழலியல் தாக்கீது மேற்கொள்ளப்படவில்லை..காவிரி டெல்டாவில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் பற்றி வெளியிடப்பட்ட சூழலியல் தாக்கீது அறிக்கைகளில் நெடுவாசல் இடம்பெறவேயில்லை..

ஜெம் என்ற தனியார் நிறுவனத்திடம், நெடுவாசலில் ஐட்ரோகார்பன் படிமங்களிலிருந்து எண்ணெய், எரிவாயு எடுக்கும் ஒப்பந்தம் வழங்கப்பட்டது. மக்களின் கடும் போரட்டத்திற்குப் பிறகு ஜெம் நிறுவனம், திட்டத்தைக் கைவிடுவதாக அறிவித்தது.

**கதிராமங்கலம்:**

2002இல் மத்திய அரசின் நிறுவனமான ஓ.என்.ஜி.சி, எண்ணெய் எடுக்கும் திட்டத்தைக் கதிராமங்கலத்தில் செயல்படுத்தியது. 9 இடங்களில் இதற்கான குழாய்களை அமைத்துத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. அங்கிருந்துதான் குத்தாலத்திலுள்ள எண்ணெய்வயல்கிடங்குக்கு எண்ணெய் எடுத்துச் செல்லப்படுகிறது.

அவ்வப்போது பூமியில் புதைக்கப்பட்டுள்ள குழாய்கள் வெடித்து விபத்து ஏற்படுகிறது. இத்திட்டம் செயல்படுத்தப்பட்டதிலிருந்தே அப்பகுதியின் நீராதாரம் கடுமையாகக் குறைந்து, எண்ணெய் கலந்து மாசடைவதால் மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

2017இல் கதிராமங்கலத்தில் விளைநிலங்களில் ஐட்ரோகார்பன்களை வெளியெடுக்க ஓ.என்.ஜி.சி. நிறுவனம் எரிவாயு குழாய்களை பதித்ததை எதிர்த்து மக்கள் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.

**ஐட்ரோகார்பன் திட்டம்:**

ஐட்ரோகார்பன் துரப்பண உரிமத் திட்டத்தின்படி நாடு முழுவதும் புதிய எண்ணெய் வளப் பகுதிகளை அடையாளமிட்டு, அங்கு ஆய்வு மற்றும் துரப்பணப் பணிகளை மேற்கொள்வதற்கான சர்வதேச ஏல அறிவிப்பு, ஐட்ரோகார்பன் இயக்குநரகம் (DGH) மூலமாக கடந்த ஜனவரி 19ஆம் தேதி வெளியிடப்பட்டது.

தமிழகத்தின் மூன்று மண்டலங்கள் உட்பட மொத்தம் 59,282 சதுர கி.மீ. பரப்புக் கொண்ட 55 சூழலியல் முக்கியத்துவம் வாய்ந்த மண்டலங்களில் முதல்கட்டமாக 1000-க்கும் மேற்பட்ட கிணறுகள் அமைக்க ஏலம் விடப்பட்டது.

தமிழ்நாட்டில் இத்திட்டத்தைக் காவிரி வடிநிலத்தைச் சேர்ந்த மூன்று மண்டலங்களில் செயல்படுத்தவுள்ளனர்.

1) முதல் மண்டலத்தில், குள்ளஞ்சாவடி முதல் தரங்கம்பாடி வரையிலான 731 சதுர கிலோ மீட்டர் நிலப்பரப்பில்ஐட்ரோ கார்பன் எடுப்பதற்கான உரிமம் ஓ.என்.ஜி.சி நிறுவனத்துக்கு வழங்கப் பட்டுள்ளது.

2) மரக்காணம் முதல் கடலூர் வரையிலும்

3) பரங்கிப்பேட்டை முதல் வேதாரண்யம் வரையிலுமாக இரண்டு மண்டலங்கள்

பிரிக்கப்பட்டுள்ளன. மொத்தம் 2, 574 சதுர கிலோ மீட்டர் கடற்பரப்பைக் கொண்ட இந்த மண்டலங்களுக்குள் ஐட்ரோகார்பன் எடுக்கும் உரிமம் வேதாந்தா நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது

. இத்திட்டத்தால் விவசாயத்தையும், மீன்பிடிப்பையும் மட்டுமே நம்பியுள்ள இப்பகுதி மக்களின் வாழ்க்கையே கேள்விக்குறியாகும். இதனால் விளை நிலங்களும், நிலத்தடி நீரும் நஞ்சாகி வேளாண் மண்டலங்கள் பாலைவனமாகி கடல்வளம் அழியும் அபாயம் உள்ளது.

**அபாயகரமான நீரழுத்த விரிசல் முறை:**




மரபுசார் எரிபொருட்களான எண்ணெய், எரிவாயு தயாரிப்பிற்கு 1500 முதல் 6000 மீ துரப்பணப் பணிகள் மேற்கொள்ளப்படும். பூமிக்கு மிக ஆழத்திலுள்ள மரபுசாரா எரி பொருட்களான படிம மீத்தேன், களிமப் பாறை வாயு, களிமப் பாறை எண்ணெய், வாயு நீர்மங்கள், இறுகிய வாயு ஆகியவை அபாயகரமான நீரழுத்த விரிசல் முறையில் பிரித்தெடுக்கப்படுகிறது. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் இது பூமிக்குள் ஒரு பூகம்பத்தை- நில அதிர்வை ஏற்படுத்தும் முறை. நீரழுத்த விரிசல் முறையில் 10 ஆயிரம் மீட்டருக்கும் கீழே பூமிக்குள் ஆழமாக துளையிடப்பட்டு, பின்னர் அங்கிருந்து பக்கவாட்டில் 2 கிலோ மீட்டர் வரைதுளை போடப்படும். பின்னர் பூமியின் மேலிருந்து மிகுந்த அழுத்தத்தில் வேதி நுண்துகள்கள் கலந்த நீர் துளைக்குள் செலுத்தப்படும். பின்பு பூமியின் மேலிருந்து மிகுந்த அழுத்தத்தில் வேதி நுண் துகள்கள் கலந்த நீர் துளைக்குள் செலுத்தப்படும். அவ்வாறு செலுத்தும்போது பக்கவாட்டு துளைகளில் செல்லும் நீரானது அந்த துளைகளின் மேலும் கீழும் விரிசல்களை உண்டாக்கும். அந்த விரிசல்கள் வழியே அடைபட்டு கிடந்த எரிவாயு நீரில் ஒன்றாகக் கலக்கும். அவற்றை உறிஞ்சி பூமியின் மேல்பரப்புக்கு எடுத்து வந்து நீர் தனியாக, வாயு தனியாக சுத்திகரிக்கப்பட்டு பிரித்து எடுக்கப்படும். ஒரு முறை ஹைட்ராலிக் ஃபிராக்சரிங் செய்ய 15 கோடி லிட்டரிலிருந்து 20 கோடி லிட்டர் வரை தண்ணீர் தேவைப்படும்.

நீரழுத்த விரிசலுக்கு உபயோகிக்கும் திரவத்தில் 0.5 - 2% வரை டன் கணக்கில் எதிலின்

கிளைகால், மெதனால், ஐட்ரோ குளோரிக் அமிலம், ஃபார்மால்டிஹைடு, அக்ரலமைடு, உயிர்க் கொல்லிகள் என சுமார் 600 வகையான ரசாயனங்களையும் பயன்படுத்துகிறார்கள்.

அதன் கழிவுநீரில் ஆர்சனிக் காரீயம், பாதரசம், கேட்மியம், குரோமியம், பேரியம் போன்ற உலோகங்களும், ஸ்ட்ரான்சியம், யுரேனியம், ரேடியம் போன்ற கதிரியக்கத் தனிமங்களும் காணப்படுகின்றன.

இவை புற்றுநோய், நரம்பியல் குறைபாடு, ஆஸ்துமா போன்ற நோய்களை ஏற்படுத்துகிறது. குழந்தைப் பிறப்பையும், வளர்ச்சியையும் கடுமையாகப் பாதிக்கிறது.

நில மட்டத்தில் ஓசோன் அதிகம் வெளிப்படுத்தப்படுவதால் தாவரங்களின் வளர்ச்சியை பெரிதும் பாதிக்கிறது. நிலம், நீர், காற்று அனைத்தும் நஞ்சாக்கப்படுகிறது.

இதனால் நிலச்சரிவு ஏற்படும் ஆபத்தும் உள்ளது. பாறை அடுக்குகளிடையே உள்ள நீர் எண்ணெய், வாயுக்களை நீக்கும் போது அழுத்தம் குறைந்து, நிலச்சரிவையும், நிலநடுக்கத்தையும், ஏற்படுத்திக் கடல் மட்டம் உயரும் அபாயம் உள்ளது.

நிலத்தடி நீரிலும், வளி மண்டலத்திலும் மீத்தேன் கலக்கும் அபாயம் உள்ளது.

மீத்தேன் சிறிய அளவில் வெளிவந்தால் கூட பெருமளவில் உலக வெப்பமயமாதலை அதிகமாக்கும் .கார்பன்டை ஆக்ஸைடை விட 21 மடங்கு அதிகமாகப் பசுமைக் குடில் விளைவை ஏற்படுத்தும். மீத்தேன் வளிமண்டலத்தில் கார்பன் டை ஆக்ஸைடை விட 220 மடங்கு குறைவாகவே உள்ளது.

இந்தத் தொழில்நுட்பம் காலநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்துவதற்கு உருவாக்கப்பட்ட பாரிஸ் ஒப்பந்த நியதிகளுக்கு முற்றிலும் புறம்பானது.

பாரிஸ் ஒப்பந்தம் :இந்த நூற்றாண்டிற்குள் உலகின் வெப்பத்தைத் தொழில் மயமாக்கலுக்கு முன் இருந்த வெப்பத்தை விட 2 பாகைக்குள் கட்டுக்குள் வைக்கவேண்டும்.

**பேரழிவை ஏற்படுத்தும் சர்ச்சைக்குரிய இந்தத் தொழில்நுட்பத்தை எதிர்த்து உலகெங்கும் மக்கள் போராட்டம்**




அமெரிக்காவின் மிஸ்ஸிஸ்பி மற்றும் மிஸ்ஸோரி நீர்ப்படுகைகளின் கரையோரம் வசிக்கும் அமெரிக்கவாழ் பழங்குடியின மக்கள்.அந்த பகுதிகளில், டகோடா பைப்லைன் நிறுவனம் இயற்கை எரிவாயு எடுக்கும் முயற்சிகளுக்கு எதிராகத் தொடர்ந்து போராடி வருகின்றனர்.

**நீரழுத்த விரிசலுக்குத் தடை:**

ஃபிரான்ஸ், பல்கேரியா, இத்தாலி, அயர்லாந்து, ஆஸ்திரேலியாவின் விக்டோரியா மாகாணத்திலும், ஐக்கிய அமெரிக்க நாடுகளில் நியூயார்க், மேரிலாந்திலும் தடைசெய்ப்பட்டுள்ளது.

சுவிட்சர்லாந்து, ஸ்பெயினின் சில பகுதிகளிலும், இந்த முறை தடை செய்யப்பட்டுள்ளது. இத்தாலியில் இரண்டு திட்டங்கள் கைவிடப்பட்டன.

நியூஜெர்சி இத்திட்டத்தின் கழிவுகளைத் தன் பகுதிக்குள் விடாமல் தடை செய்தது.

**நிலநடுக்க அபாயம்:**

நீரழுத்த விரிசலால் ஐக்கிய முடியரசில் 2 இடங்களிலும், ஐக்கிய அமெரிக்க நாடுகளில் ஒகலஹாமோவில் அர்க்காண்சஸ் மாகாணத்திலும் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. ஒகியோவில் மட்டும் ஒரு மாதத்தில் 77 நிலநடுக்கங்கள் ஏற்பட்டுள்ளன. தினமும் ஐக்கிய அமெரிக்க நாடுகளில் இது தொடர்பான ஒரு விபத்து நடந்து கொண்டுதான் உள்ளது. மார்செல்ஸில் பெருமளவில் இயற்கை எரிவாயு உள்ளதால் இயற்கை வேளாண்ப் பகுதிகளான அவை தொடர்ந்து நாசமாக்கப்பட்டு வருகிறது.

பூமிக்கு மேலே மீத்தேன் வாயுவைத் தயாரிக்கப் பல்வேறு வழிகள் உள்ள போது பூமிக்குள் பூகம்ப0000ங்களை ஏற்படுத்தும் நீரழுத்த விரிசல் ஒரு காலாவதியான தொழில்நுட்பம். மேலும் காலநிலை மாற்றத்தைத் தடுக்க புதுப்பிக்கக் கூடிய ஆற்றல் வளங்களுக்கான புதியதொழில்நுட்பங்களே இன்றைய காலத்திற்குகந்த தொழில்நுட்பங்களாக அமையும். பேரழிவை ஏற்படுத்தும் இத்திட்டங்களுக்கு விடைகொடுத்து நம் பூமித் தாயைக் காப்போம்.

## நம்மவள் : கிரெடா த்யூன்பெர்க்

செம்போத்து



சுவீடன் பெற்ற சிட்டுக்குருவி
புவியைக் குளிர்விக்கும் அக்னிக் குஞ்சு
பூமித் தாயின் செல்லக் குட்டி கிரெடா
காலநிலை மாற்றத்தை 8 வயதில் கேள்விபட்டாள்
பள்ளியில் பல படங்களைப் பார்த்தவள்
பட்டினியில் பனியிலா பனிக்கரடி பார்த்துருகினாள்
நெகிழியால் அழும் கடல் கண்டு நெகிழ்ந்தழுதாள்
படங்கள் முடிந்ததும் பலர் அதை மறந்தனர்-எதையும்
எளிதில் கடந்து செல்லும் மனநிலையைக் கடந்தவளான
கிரெடா பெருங்கவலையால் பெருங்கோபத்துடன் தங்கினாள்
பொம்மைகளோடு விளையாடும் வயதில் போராளியானாள்




பொறுப்பற்ற பெரியோரிடம் பேச மறுத்தாள்
11வயதில் இரு மாதம் பேசாமல் சாப்பிடாமல்
பட்டினிப் போராட்டத்தால் பத்துகிலோ இழந்தாள்
காலநிலை பற்றியே ஆறாண்டு ஆய்ந்தாள்--பட்டத்திற்கா?
பதவிக்கா?பணத்திற்கா? இல்லை புவியைப் பாதுகாக்க
புவியை பாதிக்கும் அனைத்தையும் துறந்தாள்

யாருமறியா பேசாச்சிறுமி தன்னால்
என்ன செய்ய முடியும் என வருந்தியவள்
வாதத்தால் தம் பெற்றோரையே இசைவித்தாள்
வருந்துவதை விட்டு செயலால் சீர்படுத்தலாம்
என ஆட்டிசத்தையே ஆயுதமாக்கினாள்
பெருஞ்சினத்தை பெருஞ்செயலாக்கினாள்
தாய் தந்தையை தன் வழிக்கு மாற்றினாள்
பசுங்குடில்,காய்கறித்தோட்டம்,மிதிவண்டி,மின்னுந்து
எனக் குடும்பத்தையே பசுங்குடும்பமாக்கினாள்

சுவீடன் முற்போக்கான காலநிலை சட்டங்களுடன்
பெருமை கொண்டிருந்த போதும் தேர்தல் அரசியலில்
பேசப்படாத வடஐரோப்பிய வெப்ப அலை,அங்கிருந்து

பரவிய காட்டுத்தீ கிரேடாவைப் பற்றியது
பார்க்லாந்த் பள்ளிக் குழந்தைகளின் போராட்டத்தைப்
பார்த்தவள் புறப்பட்டாள்! பள்ளிக்கா? அல்ல..
போராட்டத்திற்கு,பதாகையுடன் நாடாளுமன்றத்தின் முன்
மூன்று வாரத் தொடர் போராட்டத்தைத் தொடங்கினாள்
பாரிஸ் ஒப்பந்தத்தை செயல்படுத்துங்கள் -2050ஐத்
தாண்டிப் பார்க்காத சுவீடன் முன்மாதிரியா?
பசுங்குடில் வாயுக்களை 80% குறைத்தாகவேண்டும்
தலைவர்களே உங்கள்அரசியல் தோற்றுவிட்டது
காலநிலை நீதிக்கான அரசியலை செயல்படுத்துங்கள்
எங்கள் எதிர்காலத்தில் ஏன் எச்சமிடுகிறீர்கள்
குழந்தைகளை விரும்புவதாகக் கூறி எங்கள்
எதிர்காலத்தை ஏன் கண் முன்னே திருடுகிறீர்கள்
என்று கிரெடா பெரியோரை சிறியோராக்கினாள்
கிரேடாவால் கதிகலங்கிய ஆட்சியர்களிடம்
குழந்தையின் கேள்விகளுக்கு பதிலில்லை
தேர்தல் முடிவுக்குப் பின் பள்ளி சென்று
பள்ளிகளையும் போராட்டக் களமாக்கினாள்
சிறியோரைப் பெரியோராக்கினாள், பள்ளிப் படையுடன்
வெள்ளிக் கிழமைகளில் போராட்டங்களைத் தொடர்ந்தாள்
வெள்ளிக் கிழமைகளை வருங்காலத்திற்காக்கினாள்

காலநிலைக்கு நீதி கேட்டப் போராட்டம் பனியிலும்
மழையிலும், வெயிலிலும், விடுமுறையிலும் தொடர்ந்தது
பள்ளி வகுப்புகள் வீணாகிறதே என்கிறீர்களே
பல பத்தாண்டுகளை செயலின்மையால் வீணாக்கிய
ஆட்சியாளர்களை நினைவூட்டுகிறேன்
எங்களுக்கு எதிர்காலமே இல்லாத போது
வருங்காலமே வராத காலமாகிய போது

பள்ளிகள் எதற்கு? படிப்பெதற்கு?

படிப்பது ஒன்று நேரில் பார்ப்பது ஒன்று

படித்ததை சமூகம் செயல்படுத்தாத போது

பள்ளி செல்வதில் என்ன பொருள்!

இருக்கையைத் தேய்க்கவா கல்வி

அறிவியலின் பின்னால் அணி திரளுங்கள்

பள்ளி வாரத்தில் ஒர் நாள் குறைவதால்

பூமி முடிவுக்கு வரப் போவதில்லை-நாங்கள்

வீட்டுப்பாடத்தை செய்துவிட்டேப் போராடுகிறோம்,

அவர்களோ வீட்டுப் பாடங்களை செய்யவில்லை

அறிவியலுக்கு இணங்கி எதிர்காலத்தைக் கொடுங்கள்

அடுத்த நொடியே பள்ளிக்குத் திரும்புகிறோம்

என வாக்கு கொடுத்தாள் கிரெடா




செயலையே சிறந்த சொல்லாகக் கருதும்

கிரெடாவின் கவனமெல்லாம் காலநிலையில்

2030க்குள் 50% பசுங்குடில் வாயுக்களை குறைக்காவிடில்

நம் கட்டுப்பாட்டை மீறி அழிவிற்கான மீளமுடியாத

தொடர்வினையில் சிக்கிக் கொள்ளுவோம்,

அது மனிதகுலத்தின் பெரும் தோல்வியாகிவிடும்

நம் சாதனைகள் ஒன்றுமில்லாமல் போகும்

பதிவு எண் :R.Dis. No. 1964/2014



தலைவர்களே உங்கள் தலைமை தோற்றுவிட்டது
நீங்கள் உரிய காலத்தில் செயல்படவில்லை.
அலட்சியத்தை, செயலின்மையைத் தேர்வு செய்ததால்
எக்காலத்திலும் மாபெரும் வில்லன்களாகவே
நீங்கள் நினைவு கூறப்படுவீர்கள் -2030க்குள்.
வளர்ந்து பொறுப்பேற்கும் நிலைக்கு
நாங்கள் வரும் வரை காலம் காத்திருக்குமா
வளரும் குழந்தைகளின் வருங்காலத்தைப்
பாதுகாக்க உம் இலக்குகள் போதாதுஎன்கிறாள்

எதிர்மறைகளேக் கூறக்கூடாது என்கிறார்கள்
நேர்நிறையே இல்லையெனில் பொய்நம்பிக்கையைப்
பரப்பலாமா? உண்மையை சொல்வோம்- நெருக்கடிகளை
நெருக்கடியாகக் கருதாமல் தீர்வு இல்லை- என்பவளிடம்
இந்திய ஆட்சியாளர்கள் கற்றுக் கொள்வார்களா?

தன் மீது கொட்டப்படும் வெறுப்பையும்
மாற்றத்தின் தொடக்கமாகப் பார்ப்பவள்
அவர்களை விமர்சிக்கும் போது என்னை
அவர்கள் பாராட்டுவது விசித்திரம் தான்
எதையுமே செயல்படுத்தவில்லையே?
என்பவளை நோபல்பரிசால் ஏமாற்ற முடியாது

எரிபடிமங்களை நிலத்துக்குள்ளே வைப்பதற்கு விதிகளில்லை

விதிகளை மாற்றி பூமியைக் காப்பாற்றுங்கள்

மாற்ற முடியாவிடில் அமைப்பையே மாற்றுவோம் எனும்

அவளைக் கண்டு ஒப்பாறி வைக்கிறது ஓபெக்

விமான பயணத்தை விலக்க விருதையே விலக்கியவள்

காலநிலைக் கருத்தரங்கிற்கு தனிவிமானத்தில் வந்தவர்களை

சாடியவள் விமான பயணத்தை அவமான சின்னமாக்கினாள்

கிரெடா விளைவால் சுவீடனில் விமானப் பயணங்கள் குறைந்தன

சுவீடனில் ஒவ்வொரு வீட்டிலும், அவள் பெயரும்,

காலநிலை மாற்றமும் பேசுபொருளாகியுள்ளது

கரிம வாயுவின் பசுங்குடில் விளைவை கண்டறிந்து

நோபல் பரிசு பெற்ற சுவந்தே அரீனியஸின் பேத்தி கிரெடா

நம் அன்பை ஆளும்  அய்யா நம்மாழ்வாரின் பேத்தியும் தானே!

சமூக நாகரிகத்தை பணத்தாசைக்குக் காவு கொடுத்துள்ள

சிலரின் ஆடம்பரங்களுக்கு  பலரின் இன்னல்களே விலையானது

அவர்கள் உருவாக்கிய குப்பைக்கு அவர்களே பொறுப்பேற்கட்டும்

விலைமதிக்கமுடியாதவை  காவு கொடுக்கப் பட்டுக் கொள்ளை

லாபத்திற்கு எங்கள் எதிர்காலம் விற்கப்பட்டுள்ளது என்கிறாள்

நம் அரசியல் தலைவர்கள் நம்மைத் தோற்கவைத்துள்ளனர்

நம் இருப்பே அச்சுறுத்தப்பட்டுள்ளது.இந்த மடமையான

வழியில் தொடர்ந்து போகக் காலம் இல்லை என

உலகத் தலைவர்களின் செயலின்மையைச் சாடி

ஐநாவையே அதிர வைத்தாள் கிரெடா

பன்னாட்டு அமைப்புகள், நாடாளுமன்றங்கள்

உதவாக்கரை பொம்மைகளாய் அவள் காலடியில்

எங்கள் எதிர்காலத்தை தொடர்ந்து அச்சுறுத்த முடியாது
உலகத் தலைவர்களின் ஆதரவுக்குப் பிச்சைகேட்டு
நாங்கள் இங்கு வரவில்லை,நீங்கள் எங்களைப்
புறக்கணித்தீர்கள். மீண்டும் புறக்கணிப்பீர்கள்
உங்கள் சாக்குபோக்குகள் முடிந்துபோயின
எங்கள் காலமும் முடியவுள்ளது.
விரும்புகிறீர்களோ இல்லையோ மாற்றம் வருகிறது
உண்மையான அதிகாரம் மக்களுக்கே!
மனிதர்களின் விதியை மாற்றப்போகிறோம்
காலநிலைநீதிக் கிடைக்கும் வரை மீண்டும் எழுவோம்

நாம் விதிகளின் படி பூமியை காப்பாற்ற முடியாது
ஏனென்றால் விதிகளே மாற்றப்பட வேண்டியவை
விதிகளை மாற்றி பூமியைப் பேரழிவிலிருந்து காப்போம்
அனைத்தையும் மாற்ற வேண்டும், அதை
இன்றிலிருந்தே தொடங்க வேண்டும்!
சினங்கொள்வோம்! செயல்படுவோம்!

விழித்தெழுங்கள் பெரியோரே மாற்றத்தின் வழியில்
வேறுபாடுகளைத் தள்ளி வைத்து ஒன்று படுங்கள்
அறிவியலுக்குப் பின் அணிசேர்ந்து செயல்படுங்கள்
எங்கள் கனவுகளை, நம்பிக்கையை மீட்டுத் தாருங்கள்!
படிம எரிபொருள் இல்லா புவியைப் பேரழிவிலிருந்து
காக்கும் மக்கள் நல அரசே நம் இலக்கு!
மாற்றத்தை உருவாக்க எவரும் சிறியவர் அல்ல என்பதற்கு
எடுத்துக்காட்டாக பள்ளிப்போராட்டத்தைப் பாரியக்கமாக்கினாள்
110 நாடுகளில் 2 கோடி மக்கள் இன்று அவள் வழியில்

உணர்வரசியலில் உலகே ஊறும் போது செயல்படும்
அரசியலை செயலாக்க முன்னணியில் முதல் ஆளாய்
உலகத்தலைவர்களை உலுக்கிப்போடுகிறாள் கிரெடா
மோடியும் அதானியும் டேவோஸில் வழிந்த போது
கார்ப்பரேட்டுகளைக் கஞ்சி காய்ச்சினாள் கிரெடா
இன்றைய பெருமுதலிய அரசியல் தோற்றுவிட்டது
அனைத்து அதிகாரமும் மக்களுக்கே என அறைகூவுகிறாள்

குழந்தைகளை அரசியல்படுத்துவது பெருங்குற்றமாக
கருதப்படுகையில் உலகில் முதன் முறையாக ஒரு குழந்தையாய்
குழந்தைகளை உலகளவில் ஒத்துழையாமை இயக்கத்திற்கு
ஒத்துழைக்கச் செய்து பெரியோர்களையும் ஒருங்கிணைத்து
பெருஞ்சாதனை படைத்த கிரெடா நம்மவள் அல்லவா!
நம்மவளை வாழ்த்துவோம்! வணங்குவோம்!
கிரெடாவிடம் கற்றுக் கொள்வோம்! கடைபிடிப்போம்!
கிரெடா விளைவால் புவியைக் குளிர்விப்போம்!

நம்பிக்கை நட்சத்திரங்களாய் பள்ளிக் குழந்தைகள்!
வெல்லட்டும் காலநிலைக்கான பள்ளிப் போராட்டம்!
வெள்ளிக்கிழமைகள் வருங்காலத்திற்காக!
நம் அவளின் வழி நம் வழி அல்லவா!

# நான் ஏன் தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத்தில் சேர்ந்தேன்?

சுந்தர் (சு.ரா.), வாழ்வாங்கி.




மு.ச. சுந்தரராஜ் ஆகிய நான் 05.06.1986இல் பிறந்தேன். நான் இருக்கும் ஊர் வாழ்வாங்கி, அருப்புக்கோட்டை வட்டம், விருதுநகர் மாவட்டம். இராமநாயக்கன்பட்டியில் மு.சி.பு. புன்னைமுத்து நாடார் உயர்நிலைப்பள்ளியில் பத்தாம் வகுப்பு வரை படித்தேன். அப்பா முனியக்காளை நாதசுவரக் கலைஞர். அம்மா சந்திரா இல்லத்தரசி. எனக்கு இரண்டு அண்ணன்கள்; மூத்தவர் பத்தாம் வகுப்பு வரை படித்தார். இளையவர் ஆறாம் வகுப்பில் இடைநிறுத்தம் செய்து விட்டார்.

குடும்ப வறுமை காரணமாய் என்னால் பத்துக்கு மேல் பள்ளிப் படிப்பைத் தொடர முடியவில்லை. வேலைக்குச் சென்றேன். உணவகத்தில் எச்சில் இலை எடுப்பது, பெட்ரோல் நிரப்புவது, செருப்புத் தைப்பது… என்று நான் செய்யாத வேலை இல்லை, எனக்குள் ஓர் அறிவு வெறி இருந்து கொண்டே இருந்தது. படிக்க வேண்டும், கற்க வேண்டும்! வேலை செய்து கொண்டே மின்னணுவியல் (எலக்ட்ரானிக்ஸ்) படித்தேன். தொலைக்காட்சி, வானொலி பழுது நீக்கம் செய்யக் கற்றுக்கொண்டேன். இடையில் விளம்பரம் பார்த்து 50 ரூபாய் கட்டணச் சலுகையோடு ஒரு பயிற்சி நிறுவனத்தில் கணினிக் கல்வி படித்து முடித்தேன். மறுபுறம், வேலை தேடும் ஆசையில் சென்னையிலும் கோவையிலும் வேலைவாய்ப்புத் தரகர்களிடம் பணம் பறிகொடுத்தேன்.

நான் படிக்கும் காலத்தில் புஇமு தோழர்கள் எங்கள் பகுதிக்கு வந்து அறிவுசெறிந்த புத்தகங்கள் படிக்கக் கொடுப்பார்கள். என் வாசிப்புப் பழக்கம் விரைந்து வளர்ந்தது. தாய், நினைவுகள்

அழிவதில்லை, கார்ல் மார்க்ஸ் பற்றிய புத்தகங்கள் படித்தேன்.

சிறுவயதிலிருந்தே கவிதை எழுதுவேன். கையெழுத்து நன்றாக இருப்பதால் பள்ளி விழாவின் போது கரும்பலகையில் என்னை எழுதச் சொல்வார்கள். எனக்கு அது பெரிய உந்துதலாய் அமைந்தது. வறுமை காரணமாக நகரத்தில் கூலி வேலைக்குச் செல்ல நேரிட்டாலும், கணினித் துறையில் முதலில் சம்பளமில்லாமலே, பிறகு தினக்கூலி 30 ரூபாய் தொடங்கி. மாதம் 8,000 வரை ஏழாண்டு காலம் வேலை செய்தேன். 2012இல் என் அறிவைப் பயன்படுத்தி சுயதொழில் தொடங்கி, இன்று வரை தொடர்கிறேன்.

இந்தச் சமூகத்துக்காக ஏதாவது செய்ய வேண்டும் என்ற மனக்கிளர்ச்சி எனக்குள் இருந்தது. தொடக்கக் காலத்தில் புஇமுவில் சுவர் விளம்பரம் செய்வது, துண்டறிக்கை கொடுப்பது என்று வேலை செய்தேன். அரசுக்கு எதிராக சுவர் விளம்பரம் செய்யும் போது கியூ பிரிவு அதிகாரிகள் ஊர் பேர் கேட்டு விசாரிக்கும் போது சமாளிக்க வேண்டியிருக்கும்.

அப்புறம் எனக்குப் பணம் சம்பாதித்து சுய மரியாதையோடு வாழும் ஆசை வந்தது. ஊருக்குள் என்னை நக்சலைட் என்பார்கள். அரசியல் கட்சியில் சேரும் எண்ணத்தால் 2004ஆம் ஆண்டு திமுகவில் உறுப்பினராகச் சேர்ந்தேன். அருப்புக்கோட்டை தெற்கு ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் என்ற பதவியும் கிடைத்தது. என் தொழிலையும் மறந்து விட்டு நேரம் காலம் பார்க்காமல் கட்சி வேலை செய்து வந்தேன்.

என் பாதை மாறியது. சட்டப் பேரவை உறுப்பினரோடு நெருக்கமாக இருந்தேன். எப்போதும் போல் எழுத்துப்பணிதான், கட்சிக் கூட்ட 'மினிட்ஸ்' எழுதுவேன். போகப் போக கலைஞர் மீது விருப்பம் வளர்ந்தது. அருந்ததியருக்கு 3 விழுக்காடு உள் ஒதுக்கீடு அவரது ஆட்சியில் தரப்பட்டது. இது எனக்குப் பிடித்தது. இதனை அவர் வழங்கிய சலுகையாகப் பார்க்காமல் அம்மக்கள் போராடிப்பெற்ற உரிமையாகப் பார்க்க வேண்டும் என்று பிறகு தெரிந்து கொண்டேன். திமுக செயல்பாடுகளைப் பட்டறிவால் தெரிந்து கொள்ளத் தெரிந்து கொள்ள அக்கட்சியின் மீது வெறுப்பு வளர்ந்தது.

எம் மக்கள் மீதான அடிமைமுறை அவர்களை சரியாக உட்காரக் கூட விடுவதில்லை எனக் கண்டேன். சட்டமன்ற உறுப்பினரோடு அமர்ந்து உண்பதையே சமூகநீதி என்றும் சமத்துவம் என்றும் நம்பி வந்தவன், எம் மக்களைப் பார்த்த போது எனதெண்ணம் தவறெனப் புரிந்து கொண்டு விலகத் தொடங்கினேன். சிறிது காலம் புத்தகங்கள் படிப்பதும் இலக்கிய நிகழ்வுகளுக்குச் செல்வதுமாக இருந்தேன்.

இந்நிலையில்தான் திருநெல்வேலி மாநாட்டில் முதல் முறையாகத் தோழர் தியாகுவைக்

கண்டேன், அவரது உரை கேட்டேன். அது எனக்குள் ஒரு தனிவித மனமகிழ்வைத் தூண்டியது. இவரைச் சந்தித்தே ஆக வேண்டும் என்று தீர்மானித்தேன். முகநூலில் தேடி அழைப்பு விடுத்து நட்பானேன். தொலைபேசியில் பேசினேன். மதுரையில் சந்தித்து "அரசியலில் உங்களோடு பயணிக்க விரும்புகிறேன்" என்று சொன்னேன். அவர் சொன்னார்: நமக்கு வலிமை குறைவு. கருத்து வலிமையைத்தான் நம்பியுள்ளோம். நீங்கள் தொடர்ந்து எழுதுங்கள். காலம் தீர்மானிக்கட்டும்."

உரிய காலத்தில் நான் தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத்தில் சேர்ந்தேன். சென்னை அம்பேத்கர் மண்டபத்தில் இயக்கத்தின் பொதுப்பேரவை நடைபெற்ற போது கலந்து கொண்டு இயக்கத்தின் கொள்கைகள், அமைப்பு நெறிகள் செயல்பாடுகள் அனைத்தையும் புரிந்து ஏற்றுச் செயல்படத் தொடங்கினேன். தமிழர் விடுதலைப் போர்முழக்கம் சமூகநீதித் தமிழ்த்தேசம் என்ற முழக்கத்தின் பொருளைப் புரிந்து உள்வாங்கி, இதுதான் நான் பயணிக்க வேண்டிய பாதை என்ற உறுதியான நம்பிக்கையோடு இயங்கி வருகிறேன். மனித சுதந்திரம், சமத்துவம், சமூக நீதி காணவும் சாதிப்பாகுபாடற்ற தமிழகம் படைக்கவும் பொதுச்செயலாளர் தோழர் தியாகுவின் வழிகாட்டுதலில் தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம் காட்டும் வழியில் தொடர்ந்து இயங்கி வருகிறேன். தடை பல கடந்து கடலில் கலக்கும் ஆற்றினைப் போல இன்பதுன்பங்களைக் கடந்து இறுதியில் இலக்கை அடைவோம் என்ற நம்பிக்கையுடன் இயக்கத்தில் தொடர்ந்து பணியாற்றி வருகிறேன்.

உரிமைத் தமிழ்த் தேசம் மின்னிதழ் ஆயிரக்கணக்கானவர்களுக்கு இலவயமாகவே அனுப்பி வருகிறோம். கைபேசி எண் அல்லது மின்னஞ்சல் முகவரி அனுப்பினால் உங்களுக்கும் அனுப்புவோம். புதுவை, வில்லிபுத்தூர், மதுரையில் உரிமைத்தமிழ்த்தேசம் முகப்பின் அடையாள அச்சு வெளியிடப்பட்டது, வந்திருந்த அனைவருக்கும் மின்னிதழ் அனுப்பி வைக்கப்பட்டது. மின்னிதழ் படிப்பதை வழக்கமாக்கிக் கொள்ளுங்கள். மற்றவர்களுக்கும் அனுப்பியுதவுங்கள்

-தியாகு,ஆசிரியர்